IIIT

# இஸ்லாத்தில் மதம் மாறுதல் பற்றிய சிந்தனைகள்

لَآ إِكۡرَاهَ فِي ٱلدِّينِۖ


தாஹா ஜாபிர் அல் அல்வானி

அப்துல் ஹமீத் அபூ ஸுலைமான்

# இஸ்லாத்தில் மதம் மாறுதல் பற்றிய சிந்தனைகள்

தாஹா ஜாபிர் அல் அல்வானி
அப்துல் ஹமீத் அபூ ஸுலைமான்

# Islaaththil Matham Maaruthal Patriya Sinthanaigal

Tamil edition of

## Apostasy in Islam

A Historical and Scriptural Analysis

by

Taha Jabir al Alwani

translated by ARM Mubarak and edited by Zulaiha Ali

and

Apostates, Islam and freedom of faith

extracted from

الإصلاح الإسلامي المعاصر قراءات منهجية اجتماعية

by

AbdulHamid AbuSulayman

translated byAshSheikh Raashid Yahya (Naleemi)

revised and edited by Dr. PMM Irfan

Originals Published by
The International Institute of Islamic Thought
P.O.Box 669, Herndon, VA 20172, USA
www.iiit.org
London Office
P.O.Box 126, Richmond, Surrey TW9 2UD, UK
www.iiituk.com

ISBN 978-955-8398-45-6

Tamil Edition
Published by Fuzin Texts
23/3, Market Road, Dharga Town, 12090, Sri Lanka
Printed by Millennium Graphics, Maharagama
© Abd-al-Jabbar Mohammad Zaneer (2018)

# பதிப்புரை

*(அல் ரித்தாஹ்) மதம் மாறுதல் விடயத்தில் ஏதாவது தண்டனைகள் இருப்பின், சட்டரீதியாக விதிக்கப்பட்டுள்ள தண்டனை என்ன, குர்ஆனில் கூறப்பட்டுள்ள "(இஸ்லாம்) மார்க்கத்தில் எத்தகைய நிர்ப்பந்தமுமில்லை" (2:256) என்ற மதச் சகிப்புத் தன்மையின் அறிவுறுத்தலுக்கு இது எப்படிப் பொருந்துகிறது?*

*சர்வதேச அளவில் பெரும் சர்ச்சைக்குள்ளான இந்த விவகாரம் குறித்த இரு பெரும் அறிஞர்களது சிந்தனைகளை நாம் வாசகர்களுக்கு வழங்குகின்றோம். முதலாவது கலாநிதி தாஹா ஜாபிர் அல்-அல்வானி அவர்களுடையது. அடுத்தது, கலாநிதி அப்துல் ஹமீத் அபூ ஸுலைமான் அவர்களுடையது.*

*இறைத்தூதர் முஹம்மது (ஸல்) அவர்கள் தமது முழு வாழ்நாளிலும் மதம் மாறிய ஒருவரை மரண தண்டனைக்கு உட்படுத்தியதாகக் கூறுவதற்குரிய சான்று எதுவும் இல்லை என்பது தாபிக்கப்பட்ட உண்மையாகும். இருப்பினும், தொடர்ந்து பல நூற்றாண்டு காலமாக முஸ்லிம் உலகைப் பாதித்துக் கொண்டிருக்கும் மிகவும் சர்ச்சைக்குரிய ஒரு பிரச்சினையாக இது இருந்து வருகிறது. இன்று, ஊடகங்கள் இப்பிரச்சினைக்கு அளவிறந்த முன்னுரிமை கொடுத்து பெரும் பாதிப்பை ஏற்படுத்தி வருவதுடன், இஸ்லாமிய சட்டவாக்கம் (ஷரீஆ) மனித உரிமைகளுக்கும் கருத்துச் சுதந்திரத்திற்கும் இடமளிப்பதில்லை என வெளிப்படையாகக் குற்றஞ்சாட்டியும் வருகின்றன.*

*இந்த நூலின் விஷயதானம், கூடியளவு கிரகித்துக்கொள்ள எளிதானதாகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகவும் உள்ளது. நூலாசிரியர் இந்த வாதத்தின் வரலாற்றுரீதியான மூலாதாரங்களை விரிவாகப் பரிசீலனை செய்வதற்காகவும் இதனைச் சுற்றியுள்ள பல ஒழுக்க மற்றும் சந்தர்ப்ப சூழ்நிலையையொத்த பிரச்சினைகளை எடை போட்டுப் பார்ப்பதற்காகவும் மிகவும் உறுதியான சான்றுகளின் பக்கம் கவனத்தை ஒருமுகப் படுத்தியுள்ளார். மரண தண்டனைக்கு ஆதரவாக வாதங்களையும் சர்ச்சைகளையும் முன்வைக்கின்றவர்களுக்குப் பதிலளிக்கும் வகையில்*

நூலாசிரியரின் வாதங்கள் அமைந்துள்ளன. குர்ஆனும் ஸுன்னாவும் நம்பிக்கைச் சுதந்திரத்தை ஆதரித்துப் பேசுவதுடன் நம்பிக்கையை விட்டு வெளியே செல்லும் சுதந்திரத்தையும் வழங்கியுள்ளன. குற்றச் செயல் என்று கருதப்படுகின்ற ஏதாவது ஒரு செயலுடன் ஒருவரின் மதம் மாறும் செயல் இணைந்து இருக்காதவரை அது அல்லாஹ்வுக்கும் தனிப்பட்ட மனிதனுக்கும் இடையேயுள்ள ஒரு விவகாரமே ஆகும். தனிமனிதர்கள் நம்பிக்கை (ஈமான்) கொண்டதன் பிறகு அதை விட்டு விலகுவது அல்லது குப்ரின் பக்கம் திரும்புவது பற்றி குர்ஆன் அர்த்தபுஷ்டியுடன் திரும்பத் திரும்பப் பேசுகிறது. ஆனால் அவர்கள் கொலை செய்யப்பட வேண்டும் என்றோ அல்லது தண்டிக்கப்பட வேண்டும் என்றோ குறிப்பிடவில்லை. மனித இனத்தவர்கள் தாம் விரும்புகின்ற மதத்தைத் தெரிவு செய்து இறைவனை வழிபடுவதற்கு சுதந்திரம் பெற்றவர்கள் என இஸ்லாம் போதிக்கின்றது. மனித பொறுப்புணர்ச்சியின் இந்த அடிப்படை ஒரு தேர்வாகும். அதற்கு மறுமையில் தான் தீர்ப்பு வழங்கப்படுமேயன்றி இவ்வுலகில் அல்ல.

குர்ஆன், ஸுன்னாவினது உண்மையான புரிந்துணர்வு. ‘மகாஸித் அல் ஷரீஆ’ முற்றிலும் முழுமையாகத் தேவைப்படுகின்ற ஒரு காலகட்டத்திலேயே இந்த ஆக்கங்கள் வெளியாகியுள்ளன. குர்ஆனையும் ஆதாரபூர்வமான ஹதீஸையும் விரிவாகப் பரிசீலனை செய்து இஸ்லாமிய மூலாதாரக் கலைகளின் ஆய்வுக்கான பாரம்பரிய அணுகுமுறைகளையும் ஏனைய அறிவுசார் துறைகளையும் கருத்தில் கொண்டு தத்துவார்த்த நுட்பம்மிக்க வியாக்கியானங்களை இரு பெரும் அறிஞர்களும் முன்வைத்துள்ளனர்.

குர்ஆனின் போதனைக்கிணங்க, நியாயமான காரணமின்றி ஒருவரைக் கொலை செய்வதானது, முழு மனித சமுதாயத்தையும் கொலை செய்வதற்குச் சமமாகும். எனவே, கருணை, நீதி, நம்பிக்கைச் சுதந்திரம் என்பவற்றின் நலன்களைக் கருத்தில் கொண்டு இந்த விஷயம் முற்றிலும் முழுமையாகவும் தெளிவாகவும் பேசப்பட வேண்டியது மிகவும் முக்கியமானதாகும்.

கலாநிதி தாஹா ஜாபிர் அல் அல்வானியின் அரபு மொழியிலான மூல நூலை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தவர் சகோதரி கலாநிதி Nancy Roberts. ஆங்கில மொழிபெயர்ப்பின் சுருக்கத்தை ஆக்கித் தந்தவர் Alison Lake. தமிழ் வடிவாக்கம் செய்தவர் நாவல்நகர் அப்துல் ரஸ்ஸாக் முஹம்மது முபாரக். அதனைச் செம்மையாக்கம் செய்தவர் ஸுலைஹா அலி..

*கலாநிதி அபூ ஸுலைமான் அவர்களது ஆக்கம் ‘அல்-இஸ்லாஹ் அல் இஸ்லாமீ அல் முஆஸிர்: கிராஅத் மன்ஹாஜிய்யாஹ் இஜ்திமா இய்யாஹ்’ (الإصلاح الإسلامي المعاصر قراءات منهجية اجتماعية) எனும் பாரிய நூலின் ஒரு பகுதியாக அமைந்தது. இதனை அறபு மூலத்திலிருந்து தமிழாக்கம் செய்தவர் அஷ்ஷெய்க் ராஷித் யஹ்யா (நளீமி). செம்மையாக்கம் செய்தவர் கலாநிதி பீ. எம். எம். இர்பான்.*

*பதிப்புக்கான கணணிப் பதிவையும்நூலின் வடிவமைப்பையும் செய்தவர் ஹாபிஸ் இஸ்ஸதீன். அட்டையை வடிவமைத்துத் தந்தவர் அஸார் வஸீர்.*

*அனைவருக்கும் எமது ஆழ்ந்த நன்றிகள்.*

*எமது முனைவுகள் மூலம் நன்மையே விளைய வல்ல அல்லாஹ் நல்லருள் புரிவானாக.*

*பூஸின் டெக்ஸ்ட்ஸ்*

*23/3, மார்கட் வீதி,*
*தர்கா நகர்- 12090*
*ஜனவரி, 2018*

*வாசகர் கடன்*

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் குறிப்பிடப்படும் போதெல்லாம்
ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் (அல்லாஹ்வின் சாந்தியும்
சமாதானமும் அவர் மீது அருளப்படுவதாக) எனவும்,
அண்ணலாரின் தோழர்கள் யாரும் குறிப்பிடப்படும்போது
ரழியல்லாஹு அன்ஹு (அன்ஹா, அன்ஹும்) (அல்லாஹ் அவர்கள்
மீது கருணை காட்டுவானாக) எனவும் முஹம்மத் (ஸல்) அவர்கள்
தவிர்ந்த ஏனைய நபிமார்கள் குறிப்பிடப்படும்போது
அலைஹிஸ் ஸலாம் (அவர் மீது அல்லாஹ் நல்லருள்பாலிப்பானாக)
எனவும் கூற வேண்டுவது.

# இஸ்லாத்தில் மதம் மாறுதல்

## வரலாற்று மற்றும் மறைநூல்ரீதியான ஒரு பகுப்பாய்வு


தாஹா ஜாபிர் அல் அல்வானி

தமிழில்: நாவல்நகர் ஏ. ஆர். எம். முபாரக்

செம்மையாக்கம்: ஸுலைஹா அலி

# அறிமுகம்

குர்ஆனில் சொல்லப்பட்டுள்ளது போன்றும் ஸுன்னாவில் தெளிவு படுத்தப்பட்டிருப்பது போன்றும் மதம் மாறுதல் என்ற பதம் எந்தக் கருத்தில் உபயோகிக்கப்பட்டு இருக்கின்றதோ, அதற் குரிய சட்டபூர்வமாக நிர்ணயிக்கப்பட்ட தண்டனையின் இருப்புப் பற்றிய ஒருமித்த முடிவில்லாமையை எடுத்துக் காட்டுவதே இந்த ஆய்வின் நோக்கம். மதம் மாறுதல் சம்பந்தமான சான்றுகள் முஹம்மது (ஸல்)* அவர்களின் சொல், செயல், அங்கீகாரம் என்பன குறித்து அன்னாரின் தோழர்களின் வாயிலாக எமக்கு அறிவிக்கப் பட்ட ஹதீஸ்களில் காணக் கிடைக்கின்றன.

ஒருவர் எந்தவொரு பாரிய குற்றவியல் குற்றத்தையும் இணைத் துக் கொள்ளாத நிலையில் நம்பிக்கைகளை மாற்றிக் கொள்கின்ற குற்றத்தைச் செய்வாராயின் அக்குற்றத்திற்காகப் பிரத்தியேகமாக சட்டபூர்வமாக நிர்ணயிக்கப்பட்ட தண்டனை ஒன்று இஸ்லாத்தில் இருக்கின்றதா அல்லது இல்லையா என்பதை மதிப்பீடு செய்ய இஸ்லாமிய மூலாதாரங்கள் எமக்கு அனுமதியளிக்கின்றன. சுருங்கச் சொன்னால், மனிதர்களின் விருப்பங்கள், எண்ணங்கள், நாட்டங் கள், சிந்தனைகள், சொற்கள், செயல்கள் என்பவற்றைப் பொறுத்து அவர்கள் அனுபவிக்கின்ற சுதந்திரத்தை குர்ஆனும் ஸுன்னாவும் உறுதிப்படுத்துகின்றன என்றே சொல்லலாம்.

இந்த ஆய்வு பலதரப்பட்ட மார்க்க சிந்தனைப் பிரிவுகளின் சட்டங்களையும் பகுப்பாய்வு செய்கின்றது. அனேகமாக, வாய் மொழிமூல ஸுன்னாவினதும் ஏகோபித்த முடிவினதும் அடிப் படையில் மதம் மாறியவர் மரண தண்டனைக்கு உட்படுத்தப்பட வேண்டும் என பெரும்பான்மையான முஸ்லிம் மார்க்கச் சட்ட அறிஞர்கள் தங்களது வாதத்தை முன்வைத்துள்ளார்கள். இந்த ஆய்வின் முறைமைரீதியான அணுகுமுறை, தத்துவ, பகுப்பாய்வு ரீதியான தனித்தனி விபரங்களிலிருந்து குறிப்பிட்ட விதியைக் கண்டுபிடிக்கின்ற முனைவாகவும் வரலாற்றுரீதியானதாகவும் இருக்கின்றது. அத்துடன், இஸ்லாமிய மூலாதார கலைகளையும்

---

*ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்: அல்லாஹ்வின் சாந்தியும் அருளும் அன்னார் மீது உண்டாவதாக. இறைத்தூதர் முஹம்மது அவர்களின் பெயர் சொல்லப்படும் போது சொல்ல வேண்டியது

இவை சம்பந்தப்பட்ட ஏனைய துறைசார் அறிவையும் ஆய்வு செய் வதற்கான பாரம்பரிய மரபுரீதியான அணுகுமுறைகளையும் இது உள்வாங்கியிருக்கின்றது.

அடிப்படைக் கோட்பாடுகள் மற்றும் மூலாதாரங்கள் சம்பந்தப் பட்ட எல்லா மார்க்கத் தீர்ப்புகளுக்கும் குர்ஆனே முதல் மூலாதார மாகும். ஸுன்னாவானது குர்ஆனின் அர்த்தத்திற்குக் கட்டுண்டு அதனைச் சரியான முறையில் தெளிவு படுத்துகின்ற இரண்டாவது மூலாதாரமாக அமைந்துள்ளது.

குர்ஆனில் வருகின்ற மொழிவாரியான வாசகங்களின் அர்த்தங் களை உறுதிசெய்ய நாடுகின்ற போது பின்வரும் பிரிகோடுகள் பயன்படுத்தப்படுகின்றன. அத்தகைய சொற்பதங்களை குர்ஆன் அதற்கேயுரிய முறையில் சொந்தமாகப் பயன்படுத்தி யுள்ளமை, ஸுன்னாவில் முஹம்மது (ஸல்) அவர்களின் விளக்கங்கள் அடங்கிய அறிவிப்புகள், பல்வேறு பரிபாஷைகளிலும் இலக்கிய நடைகளிலும் உரைநடை பேச்சு வழக்குகளிலும் இந்த சொற்பதங்கள் அரேபி யர்களின் வழக்கமான பாவனையில் பயன்படுத்தப்பட்டிருக்கின்ற முறை என்பனவாகும் அவை. இந்த வரிசையிலான முறைமையைப் பின்பற்றுகின்ற போது பாவனையிலுள்ள அரபு மொழி சொற்பத பிரயோகங்கள் குர்ஆனின் பொருளை அல்லது அர்த்தத்தைத் தீர்மானிக்க அனுமதிக்கப்பட்டவையல்ல என்பதை ஒருவர் உறுதி செய்யலாம். இறுதியாக, விழுமியங்களையும் எண்ணங்களையும் அதிகாரம் செலுத்துகின்ற இஸ்லாமிய சட்டம் ஈடு இணையற்றதும் யாவருக்கும் பொருந்தக் கூடியதும் ஆகும். மதம் மாறுதல் பற்றிய குறிப்பிட்ட மூலாதாரங்களின் உண்மையையும் அர்த்தங்களையும் தேடுகின்றவர்களுக்கு அதன் பாதையை அது வெளிச்சம் போட்டுக் காட்டுகின்றது.

மதம் மாறுதலுக்குரிய தண்டனை பற்றிய சர்ச்சைக்குரிய வினா வைப் பற்றிப் பேசுவதற்கு முஸ்லிம் சட்ட நிபுணர்கள், முழுமூச்சை யும் செலவு செய்து, கடுமையான உழைப்பில் ஈடுபட்டு விளக்கவுரை செய்யும் காரியத்தில் தங்களை அர்ப்பணித்துள்ளார்கள் அல்லது ‘இஜ்திஹாத்’ செய்வதில் தங்களை ஆழ்த்திக் கொண்டுள்ளார்கள். இந்த ஆய்வில் பேசப்பட்டுள்ள அடிப்படைப் பிரச்சினை, தனிநபர் மதம் மாறுதலைப் பற்றியதாகும். ஒரு தனிமனிதனின் கொள்கை ரீதியான நம்பிக்கைகளில் ஏற்படும் ஒரு மாற்றத்தின் பிரதிபலனாக சிந்தனையிலும் கருத்துக்களிலும் நடத்தையிலும் ஏற்படும் ஒரு

*மாற்றம் என்பதை இது குறிப்பிடும். தனிநபர் கொள்கை ரீதியான தனது நம்பிக்கைகளை மாற்றுகின்றமை, சமூகத்திற்கெதிரான கலகத்தை உண்டுபண்ணுவதற்கல்ல அல்லது அவற்றின் விதிமுறைகளுக்கும் அரசியல், மதரீதியான சட்டபூர்வ தலைமைத்துவத்திற்கும் எதிராகப் புரட்சி செய்வதற்குமல்ல. அவர் சமூகத்தை எந்தவொரு வகையிலும் அச்சுறுத்தவுமில்லை. மாறாக, அவர் வெறுமனே கொள்கைரீதியான தனது நிலைப்பாட்டையே மாற்றியுள்ளார். அவர் புதிதாக ஏற்றுக்கொண்ட கொள்கையைப் பகிரங்கமாகப் போதித்துப் பரப்புகின்ற ஒருவராக இல்லாது, மதம் மாறுதலை அவர் தனக்குள்ளே வைத்துக் கொண்டுள்ளார்.*

*இந்த ஆய்வு பின்வரும் வினாக்கள் குறித்துப் பேசுகின்றது. பாவமன்னிப்புத் தேடுவதற்கான தூண்டுதலை சமூகத்தினூடாகவோ அல்லது அது அல்லாமலோ ஏற்படுத்துவதற்கான சந்தர்ப்பம் அளிக்காமல் அல்லாஹ் அத்தகைய ஒரு மனிதனுக்கு சட்டபூர்வமாக அனுமதிக்கப்பட்ட மரண தண்டனையை விதித்திருக்கின்றானா? எனவே, ஒருவன் தனது நம்பிக்கைகளை மாற்றிக்கொண்டுள்ளான் என்ற ஒரே காரணத்திற்காக மாத்திரம் அவன் மீது மரண தண்டனையை நிறைவேற்றுவது ஆட்சியாளர்களைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற முஸ்லிம் சமூகத்தின் மீது கடமையா? இன்னும் இந்த விஷயத்தில் ஒருவரின் நம்பிக்கைகளின் மாற்றம், வேறு ஒரு குற்றச் செயலுடன் தொடர்புடையதாக இல்லாதிருந்தாலும் இத்தகைய ஒருவர் மீது தண்டனை நிறைவேற்றப்படுமா? முஸ்லிம் சமூகத்தின் ஓர் அங்கத்தவர் இந்தத் தனிநபரைக் கொலை செய்வாராயின், அத்தகையவர் வேறு எதற்காகவுமன்றி சட்டத்தைத் தன் கையில் எடுத்துக் கொண்டதற்காகவேண்டி தண்டனையிலிருந்து அல்லது பழிக்குப் பழி வாங்கப்படுவதிலிருந்து விதிவிலக்கு அளிக்கப்படுவாரா?*

*இவ்வாறே, இத்தகைய ஒரு நபரை அல்லது இவரைப் போன்ற மற்றவர்களை பலவந்தமாக இஸ்லாத்தின் பக்கம் திரும்பச் சொல்வது முஸ்லிம் சமூகத்தின் கடமையா? அல்லது அத்தகைய பலவந்தத்தை சட்டபூர்வமாக நியாயமாக்கும் தன்மையை குர்ஆன் மறுக்கின்றதா? மேலும், மதம் மாறியவரைக் கொலை செய்வது முஸ்லிம் சமூகத்தின் கடமை என்பது இஸ்லாம் தோன்றிய காலத்திலிருந்தே ஏகோபித்த முடிவாக இருந்ததா? அல்லது இந்த விஷயம் போதுமான அளவு வெளிச்சத்திற்குக் கொண்டுவரப்*

படாமல் கருத்து வேறுபாடுடைய ஓர் அம்சமாகவே இருந்து வரு கிறதா? மதம் மாறுதல் இஸ்லாத்திலிருந்து வெறுமனே வெளி யேறும் ஒரு காரியமாகப் பார்க்கப்பட வேண்டுமா? அல்லது இஸ்லாத்துக்கு எதிரான ஓர் ஆக்கிரமிப்புச் செயலாகப் பார்க்கப் பட வேண்டுமா? மதம் மாறுதலுக்கு மரண தண்டனை தான் வழங்க வேண்டும் என்ற கருத்தை ஆதரிக்கும் பெரும்பான்மையினர் அதனை ஓர் அரசியல் குற்றச் செயலாகப் பார்க்கிறார்களா? அல்லது இதனை ஒரு பெருங் குற்றமாகக் கருதுகிறார்களா? ஆதார பூர்வமான இஸ்லாமிய மூலாதாரங்களில் மிகவும் தெளிவாக எடுத்துக் காட்டப்பட்டிருப்பது போன்று, சட்டபூர்வமாக விதிக்கப் பட்டுள்ள தண்டனைகள் ஒருவனின் பாவமீட்சிக்குத் துணை புரிகின்றன. மதம் மாறுதலுக்கான மரண தண்டனை ஒருவகையான பரிசுத்தமடைதல் அல்லது பாவமீட்சி பெறுதல் என்பதாகக் கருதப் படுகின்றதா?

இந்த ஆய்வின் நோக்கம் ஒரு 'மாதிரி' செயல்பாட்டிற்கான முறை மையை முன்வைப்பதாகும். இதன்மூலம் ஒருவர் குர்ஆனின் அதிகாரத்தின் கீழ் இஸ்லாமியப் பாரம்பரியத்தை முன்வைப்பதற்கு முன்வரலாம். அதனைத் தொடர்ந்து குர்ஆனின் போதனைகளுக் கிணங்க அதனை முழுமையாகச் செயல் படுத்தலாம்.

## ஒன்று

# மதம் மாறுதல் மரண தண்டனைக்குரிய குற்றமா?

*மதம் மாறுதல் (அல் ரித்தாஹ்) மீதான சட்டபூர்வமான தீர்ப்பில் ஏகோபித்த முடிவு பூரணமாக இல்லை என்றாலும், இஸ்லாத்தின் முதல் மூன்று நூற்றாண்டுகளிலும் இஸ்லாமிய சட்டத்தில் மதம் மாறுதலுக்கு சட்டபூர்வமாக விதிக்கப்பட்ட மரண தண்டனை நடைமுறையில் இருந்ததென்று கூறிக்கொள்வோர், அது ஓர் ஏகோ பித்த முடிவாக இருந்ததென உரிமை கோருகின்றனர்; வாதிடுகின் றனர். அவ்வாறு செய்வதன் மூலம் முஹம்மத் (ஸல்) அவர்களின் தோழர் உமர் இப்னு அல் கத்தாப், இப்ராஹீம் அல் நகயீ, சுபியான் அல் தெளரி போன்ற மரண தண்டனையை ஆதரிக்காத ஏனைய சில அறிஞர்களது உண்மைக் கூற்றிலிருந்து கவனத்தைத் திசை திருப்பவே அவர்கள் முனைந்துள்ளார்கள். இந்தத் தண்டனை பற்றிய பிற்காலத்து அறிஞர்களின் மீள் சிந்தனையை முடக்கி வைக் கவும் அவர்கள் முனைந்துள்ளார்கள்.*

*மதம் மாறும் நடத்தைகள் பற்றிப் பேசுகின்ற போது, தனது தனிப்பட்ட கருத்துக்களையும் நம்பிக்கைகளையும் வெளியிடுவதற்கு தனிநபர் உரிமைக்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டுமா? அல் லது சமூகம் புனிதமெனக் கருதி கட்டிப்பிடித்துக் கொண்டிருக் கும் சட்டங்களைப் பாதுகாத்துப் பக்குவமாக வைத்துக் கொள்வதற்காக சமூகத்தின் உரிமைக்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டுமா? 2006ம் ஆண்டில் ஆப்கான் நாட்டுப் பிரஜையான அப்த் அல் ரஹ்மான் அப்த் அல் மன்னான், கிறிஸ்தவ மதத்திற்கான தனது மதமாற்றத்தை அறிவித்தார். இது சர்வதேச ஊடகங்களில் பிரதான செய்தியாகக் கொண்டாடப்பட்டது. அதனைத் தொடர்ந்து அவர் தனது மனைவியை விவாகரத்துச் செய்துவிட வேண்டியவரானார். தனது*

பிள்ளைகளுடனான உறவும் துண்டிக்கப்பட்ட நிலையில் அவர் சிறையில் அடைக்கப்பட்டார். உலகத் தலைவர்களின் அழுத்தத்தின் காரணமாக சிறையிலிருந்தும் விடுவிக்கப்பட்ட அவர் இத்தாலியில் அரசியல் தஞ்சம் கிடைக்கப் பெற்றார். அவருடைய விவகாரம், இஸ்லாத்தில் மதம் மாறும் பிரச்சினையின் பக்கமும் உலகம் எவ்வாறு அதனை நோக்குகின்றது என்பதன் பக்கமும் கவனத்தைத் திருப்பி வைத்தது.

சமூகங்கள் தாம் முழுமையாகப் பாதுகாக்கப்படுகின்ற மாறாத சில விழுமியங்களை எடுத்துக் காட்டாகக் கொண்டு அவற்றுக்கு சம்மதம் தெரிவிக்கின்றன. விசேஷமாக தேசிய அடையாளத்தின் முக்கியத்துவத்தைக் குறிப்பிடலாம். தற்போதைய காலத்திற்கு முன்பு, அனேகமாக ஒவ்வொரு சமூகமும் தனது மதமே தனது அடையாளத்தின் பிரதான மூலப்பொருள் எனக் கருதிக் கொண் டிருந்தது. சமூகங்களின் இருப்பு, அமைப்பு, அடையாளம் என்பன தாங்கள் ஏற்றுக்கொண்டு தங்களை தாங்களாகவே இனங்காட்டிக் கொண்டுள்ள மதம் அல்லது ஆன்மீக நம்பிக்கைத் திட்டம் என்பவற்றுடன் பின்னிப் பிணைந்திருக்கின்றன. இஸ்லாமிய சட்டவியலின் எண்ணிறந்த தீர்ப்புகளுக்கு அடிப்படையாக, மனிதனின் ஐந்து பிரதான தேவைகளில் ஒன்றென, முஸ்லிம் மார்க்க அறிஞர்கள் மதத்தைக் கணித்தார்கள். அத்தகைய தீர்ப்புகளில் முதன்மை வகிப்பது ஜிஹாதைப் பற்றிய தீர்ப்புகளாகும். இதைப்பற்றிக் கருத்துக் கூறும்போது, இஸ்லாமிய மார்க்கத்தை தேசிய மட்டத்தில் காப்பாற்றுவதற்கும் பாதுகாப்பதற்கும் ஜிஹாத் ஒரு சாதனமாக அமைகின்றது என்று அவர்கள் சொல்கிறார்கள்.

சிலரின் கூற்றுப்படி, மதம் மாறுதலுக்காக சட்டபூர்வமாக விதிக்கப்பட்ட தண்டனை, தனிமனித மட்டத்திலும் கூட்டு மட்டத்திலும் செயற்படுத்தப்படலாம் என்ற கருத்து முன்வைக்கப் படுகிறது. மதத்திற்குப் பாதிப்பு விளைவிக்க, சூழ்ச்சி செய்ய அல்லது அதற்கெதிராகக் கலகம் ஏற்படுத்த எத்தனிப்பவர்களிடமிருந்து மார்க்கத்தைப் பாதுகாக்கும் தேவையை அடிப்படையாகக் கொண்டு இத்தண்டனையை நிறைவேற்றலாம் என்றும் சொல்லப்படுகிறது. இத்தகைய மார்க்கத் தீர்ப்புகளை வழங்குவதன் மூலம், முஸ்லிம் அறிஞர்கள் “நம்பிக்கையின் விஷயத்தில் எந்த பலவந்தமும்

*இல்லை" என்று குர்ஆனின் பிரகடனத்தில் தெளிவுபடுத்திக் காட்டப்பட்டிருக்கின்ற, ஏகமனதாக அங்கீகரிக்கப்பட்ட மதச் சுதந்திரக் கோட்பாட்டிற்கும் மதம் மாறுவதற்காக மரண தண்ட னையை உறுதிப்படுத்துவதற்குமிடையில் எந்த முரண் பாட்டையும் கண்டுகொண்டுள்ளதாகத் தெரியவில்லை. எமது இஸ்லாமிய வரலாற்றின் பல்வேறுபட்ட காலகட்டங்களிலும் வழக்கத்தில் இருந்த கருத்தையே பலரும் உறுதிப்படுத்தி வந்துள்ளனர். மிக அதிகமான பெரும்பான்மை அறிஞர்களுடன் ஒத்துப்போகாத, மிகவும் பலம் வாய்ந்த செல்வாக்குப் பெற்றவர்களான உமர் இப்னு அல் கத்தாப் (இறப்பு 644 கி.பி), இப்றாஹீம் அந் நகயீ (811கி.பி), சுபியான் அத் தௌரி (777கி.பி) ஆகியோருக்கும் கூடுதலாக மேலும் பல அறிஞர்களின் கருத்துக்கள் ஜனரஞ்சகமடையவில்லை. அல் லது பரந்த அளவில் எல்லோரையும் சென்றடையவில்லை.*

*எனவே, ஷரீஆ சட்டவாக்கத்தின் அறிவிப்பாளர்கள், பெரும் பாலான பிக்ஹ் அறிஞர்களினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட தீர்ப் பைப் பொருத்து 'ஏகோபித்த' முடிவு இருக்கிறது- அதாவது மதம் மாறியவர் மீண்டும் இஸ்லாத்தை ஏற்றுக்கொள்ள வேண்டுமென பலவந்தப்படுத்தப்பட வேண்டும்; இல்லாவிட்டால் மரண தண் டனைக்கு உட்படுத்தப்படுவார்- என்ற வாதத்தை முன்னெடுத்தார் கள். இந்தத் தீர்ப்பின் பின்னணியிலிருந்த நோக்கம், மதத்தைக் குறைவாக மதிப்பிடும் அல்லது பொருட்படுத்தாமல் விட்டுவிடும் முயற்சிகளிலிருந்து மார்க்கத்தைப் பாதுகாக்க வேண்டும் என்பதா கும். எதனை அத்திவாரமாகக் கொண்டு முஸ்லிம் சமூகம் உருவாக் கம் பெற்றதோ, எதனைக் கொண்டு அதன் அரசு முறைமைக்கான அத்திவாரம் இடப்பட்டதோ, எது சித்தாந்தம், சட்டவியல், வாழ்க்கை ஒழுங்கு முறைமை அனைத்துக்கும் காலாக நின்றதோ அதனைப் பாதுகாத்தல் வேண்டும்.*

*ஒரு கொள்கை சார்ந்த நம்பிக்கையையும் மதத்தையும் தேர்ந்து கொள்வதும் எந்தவித பலவந்தமுமின்றி ஒருவர் தனது நம்பிக்கை களை வெளிப்படுத்துவதும் மனித உரிமையின் ஓர் அங்கமாகும். எமது அறிஞர்கள் வழங்கியுள்ள தீர்ப்போ இவ்வுரிமையுடன் மோது கின்றது; முரண்படுகின்றது. இதைப்பற்றிய கலந்துரையாடல் முதன்முதலாக சீர்திருத்தவாதிகளான ஜமால் அல் தீன் அல் அப் கானி, முஹம்மது அப்துஹ், ரஷீத் ரிழா முதலாய பலராலும் ஆரம்பிக்கப்பட்டது. மதம் மாறிய ஒருவரை மீண்டும் இஸ்லாத்தின் பக்கம் திரும்ப வேண்டுமென மரண அச்சுறுத்தல் மூலம் பலவந்தப்*

படுத்தலின் அவசியத்தை இஸ்லாம் அறிமுகப்படுத்துகிறது என்பது குறித்து இந்த சிந்தனையாளர்கள் ஆழ்ந்த கரிசனை கொண்டார்கள்.

இது இஸ்லாத்தில் பலவந்தம் அனுமதிக்கப்பட்டுள்ளது எனக் காட்டுவதாகவும் நம்பிக்கைச் சுதந்திரத்தை அலட்சியம் செய்வது மாகும் எனவும் அவர்கள் கருத்துக் கொண்டார்கள். அல் அப்கானி யின் பிரசித்தி பெற்ற 'அல்- ரத்து அலா அல்- ழாஹிரிய்யீன்' எனும் நூல், குர்ஆன் அறிவுறுத்துவது போல தங்களுடன் கருத்து வேறு பட்டு இணங்கிப் போகாதவர்களுடன் நல்ல முறையில் சமாதானத் துடன் வாதிக்கும்படியும், அவர்களுடைய வாதங்களுக்குத் தெளிவான பதிலளிக்கும்படியும் அவர்கள் எழுப்பும் சந்தேகங்களுக் கும் சர்ச்சைகளுக்கும் இஸ்லாமிய ஆதாரங்களுடனும் சான்று களுடனும் விளக்கங்கள் அளிக்கும்படியும் போதிக்கின்றது. எவ் வாறாயினும், அந்தக் கால கட்டத்தில் இந்த விஷயம் தீர்க்கப் படாமல் சர்ச்சைக்குரிய ஒன்றாகவே இருந்து வந்தது.

கால ஓட்டத்தின் வேகத்தில் நாம் 1985ம் ஆண்டை அடை கின்றோம். சூடானிய ஜனாதிபதி ஜாபர் நுமைரி, மஹ்மூத் முஹம் மத் தாஹா மீது மரண தண்டனையை விதிப்பதன் மூலம் இஸ்லா மிய தண்டனை முறையை அமுல் நடத்தும்படி உத்தரவு பிறப் பித்தார். சல்மான் ருஸ்தியின் விவகாரம் இதனைத் தொடர்ந்தது. அவர் கொல்லப்பட வேண்டுமென ஈரானிய ஆன்மீகத் தலைவர் இமாம் கொமெய்னி உத்தரவு பிறப்பித்தார். இந்த இரண்டு நட வடிக்கை களும் சர்வதேச சமூகத்தின் கவனத்தை ஈர்த்தன. இதன் நிமித்தம், சமகால மேற்கில் மிக உயர்வாக மதிக்கப்படும் எல்லா விழுமியங்களிலும் மேலான சுதந்திரத்திற்கு இஸ்லாம் விரோத மானது எனப் பிரகடனப்படுத்தப்பட்டது. ருஸ்தி விவகாரத்தைத் தொடர்ந்து பத்வாக்களும் நூல்களும் மதம் மாறிய செயலுக் கானது மரண தண்டனையே என்ற தீர்ப்பின் மாறாத் தன்மையை நிலைநிறுத்தி நீடிக்கச் செய்தன. எகிப்தில் பல நிகழ்வுகள் இடம் பெற்றன. எகிப்தின் கல்விமான்கள் மத்தியில் பாரிய கருத்து வேற்று மைகளை அவை பரவச் செய்தன. இதே நேரத்தில் ஐக்கிய நாடு களும் அதன் சார்பினவான பலதரப்பட்ட நிறுவனங்களும் இன்றைய புதிய உலக அமைப்பின் பலதரப்பட்ட சக்திகளுமாக அனைத்தும் ஒன்றிணைந்து இஸ்லாத்தின் மீதான தாக்குதல்களை யும் குற்றச்சாட்டுகளையும் மென்மேலும் பெருக்கி வைக்கலாயின. தொடர்ந்து வந்துகொண்டிருக்கும் இத்தொல்லைகளை எவ்வாறு

*எதிர்கொள்வது? மக்களிலிருந்தும் இஸ்லாத்தைத் தனிமைப்படுத்தி எடுத்துத் தொடுக்கப்பட்டு வரும் தாக்குதல்களுக்குப் பரிகாரம் காண்பது எப்படி?*

*முஸ்லிம் சட்ட அறிஞர்களின் மரபு ரீதியான வழக்கத்துக்கு இயைய, அல்லாஹ்வின் சட்டங்களையும் தீர்ப்புகளையும் விளக்கு வதற்கு இந்த ஆய்வு, 'ஹத்' (பன்மை- ஹுதுத்) என்ற பதத்தைப் பயன்படுத்துகின்றது. அரேபியர்கள் 'ஹத்' என்ற மொழியியல் ரீதியான பதத்தை 'இரு பொருட்களுக்கிடையிலான ஒரு தடை' என்ற கருத்திலேயே பயன்படுத்தி வந்தார்கள். முஸ்லிம் சட்ட நிபுணர்களும் இஸ்லாமிய ஷரீஆ சட்ட முறையின் அறிஞர்களும் பயன்படுத்தியுள்ள சொற்பிரயோகங்கள் குர்ஆனிய மரபினவால் அன்றி, அராபிய மரபின் செல்வாக்குகளுக்கே ஆட்பட்டுள்ளன. 'ஹத்' என்ற சொல்லும் அதன் பன்மையான 'ஹுதுத்' என்ற சொல்லும் உபயோகிக்கப்பட்டிருக்கின்ற முறையில் உள்ள முக்கிய மானதும் எளிதில் விளங்கிக் கொள்ளக் கூடியதுமான உதார ணத்தை இங்கே பார்க்கலாம். இந்தச் சொல் குர்ஆனில் பதினான்கு வாசகங்களில் வருகின்றது. இவற்றில் இரண்டு இடங்களில் நோன்பு, விவாகம்- விவாகரத்து, இன்னும் வாரிசுரிமை என்பவற்றைப் பொருத்து அல்லாஹ்வின் சட்டம் மற்றும் அவனது கட்டளைகள் என்ற கருத்திலேயே பயன்படுத்தப்பட்டுள்ளன. எந்தவொரு வசனத் திலும் 'ஹுதுத்' என்ற சொல் தண்டனையைக் குறிப்பதாகப் பயன்படுத்தப்படவில்லை. பதிலாக, இறை சட்டங்களையும் விதி களையும் கடைப்பிடித்தொழுகுவதன் அவசியத்தை உறுதிப்படுத்து வனவாகவே அவை அமைந்துள்ளன.*

*குடும்பம் சம்பந்தப்பட்ட பிரச்சினைகளில் அல்லாஹ்வின் நியதிகளைக் கடைப்பிடித்தொழுகுவதன் முக்கியத்துவத்தைப் பற்றி குர்ஆன் வலியுறுத்துகிறது. எனவே, இக்குர்ஆனிய சொற் பிரயோகத்தை முஸ்லிம் சட்ட அறிஞர்கள் எவ்வாறு மாற்றி அதன் கருத்தை தண்டனைச் சட்டத்துடன் கட்டுப்படுத்திக் கொண்டார் கள் என்பது ஆச்சரியமாக இருக்கின்றது. 'ஹத்' என்ற சொற்பதம் மொழியியல் ரீதியாக தடுத்தல், தடை செய்தல் அல்லது தண்டனை என்று பொருள் படுகிறது. இன்னும், குர்ஆனில் களவு, தவறான பாலியல் நடத்தை என்பவற்றிற்குரிய தண்டனைகள் பற்றிக் குறிப்பிடும் போது 'ஹத்' என்ற சொல் பயன்படுத்தப்பெறவில்லை. குர்ஆனிய கருத்தோட்டம் முற்றுமுழுதாக மாற்றியமைக்கப் பட்டுள்ளமையின் பின்னணிதான் என்ன?*

ஓர் ஆட்சியாளன் கட்டளைகளை அமுல் செய்யவும் ஒழுங்கை நிலை நாட்டவும் அரசுக்குரிய கௌரவத்தை ஈட்டிக் கொள்ளவும் தனது நோக்கங்களையும் குறிக்கோள்களையும் அடைந்து கொள் ளவும் தனக்குள்ள முக்கியமான சாதனமாகவே தண்டனை முறை யைப் பார்க்கிறான். தீவிரமான, கடுமையான தண்டனைச் சட்ட முறையைச் செயல்படுத்தும் அதிகாரத்தைக் கொண்டவர் அல்லாஹ்வுக்குக் காரணம் காட்டக்கூடியவராக இருக்க வேண்டும். அவ்வாறு இருந்தால் தான் ஓர் ஆட்சியாளன் தனது அரசுக்குப் பாரிய நன்மைகளை ஈட்டிக் கொள்ளலாம். இதன் விளைவாகத் தான் இமாம் மாலிக், அபூ ஹனிபா, அல்-ஷாபி, அஹ்மது இப்னு ஹம்பல், அல்-ஹஸன் அல்-பஸரி, சுபியான் அல் தௌரி முதலி யோரும் மேலும் சில அறிஞர்களும் தமது கொடுங்கோன்மை யான ஆட்சியைப் பாதுகாப்பதற்காகவும் சுய நலன்களுக்காகவும் இஸ்லா மியத் தண்டனை முறைமைகளைத் தவறாகப் பயன்படுத்தி வந்த ஆட்சியாளர்களை அடிக்கடி கண்டித்தும் விமர்சித்தும் வந்தார்கள். முஸ்லிம் பாரம்பரிய சட்டங்களின் தொகுப்புகளிலும் சட்ட நிபுணர்களின் பேருரைகளிலும் அறிஞர்கள் அரசர்களுக்கு வழங் கிய அறிவுறுத்தல்களிலும் சட்டவியல் ஆக்கங்களிலும் இத்தகைய கண்டன விமர்சனங்கள் உள்ளடக்கப்பட்டிருக்கின்றன. உண்மை யில் எம்முடைய இந்த சொந்த யுகத்தில் ‘அரசியல் இஸ்லாம்’ நடாத்தி வருவோர் இஸ்லாத்தையும் இஸ்லாமிய சட்டங்களையும் வெறுமனே தண்டனைச் சட்டத்திற்குள் கொண்டுவந்து விட்டார் கள். இதன் விளைவாக, அவ்வாறான பலர் இஸ்லாமிய சட்டத்தை அமுல் நடத்த வேண்டும் எனப் பேசுகின்ற போது தண்டனைகளை அமுல்படுத்துவதுதான் இஸ்லாமிய சட்டவியல் என்றே கருத் துரைக்கின்றார்கள். அவ்வாறே, சில அரசுகள் மதத்தின் மீதான தமது ஆர்வத்தையும் ஷரீஆ சட்டத்திற்கான தங்களுடைய அர்ப்பணத் தையும் வெளிக்காட்டிக் கொள்வதன் பொருட்டு என்ன செய்கின்றன? தண்டனைகளை நிறைவேற்றுவதில் ஆர்வத் துடன் முந்திக் கொள்கின்றன.

மக்களது மனிதாபிமானமும் அவர்கள் மதத்தைப் புரிந்து கொண்டிருக்கும் முறைகளும் மதத்தின் தூய தன்மைகளுக்கு முற்றும் முரணானவையாகவே அமைந்துள்ளன. இதனால் மதத் தின் கோட்பாடுகள் சிதைவுறுகின்றன. அதன் உண்மையான நோக் கங்களுக்கும் கருத்துக்களுக்கும் தவறான அர்த்தங்கள் கற்பிக்கப்படு கின்றன. அல்லாஹ்வுக்கு எதிரான வாதங்கள் இருக்கக்கூடாது

என்பதற்காகவே அவன் தனது தூதர்களை அனுப்பியிருக்கிறான் என்பதாக அவனே பிரகடனப்படுத்தி இருக்கிறான். அதே நேரத்தில், மாற்றுக் கருத்துக்களை வெளியிடுவதற்கும் வாதிப்பதற்கும் சான்றுகளையும் ஆதாரங்களையும் தேடும் இயல்பாகவே அமைந்துள்ள மானுட விருப்புகளுக்கும் அவன் தாராளமாக இடமளித்துள்ளான். கால ஓட்டத்தின் மாற்றங்களுக்கேற்பத் தன்னைத் தான் புதுப்பித்துக் கொள்ளும் பரந்துபட்ட தன்மைகளை குர்ஆன் இஸ்லாத்துக்கு வழங்கியுள்ளது. கால வரையறைகளற்ற இஸ்லாமியக் கோட்பாட்டுக்கான உறுதியான அடித்தளத்தை அது வழங்குவதோடு இஸ்லாமிய சட்டவியல் சித்தாந்தங்களைத் தெளிவுபடுத்தியும் உளது. குர்ஆனின் மிகவும் மேலான, துல்லியமான விளக்கமாகவும் பிரயோகமாகவும் அமைந்துள்ளது ஸுன்னா. ஸுன்னா, அதன் முழுமையான அமைப்பில் முஹம்மது (ஸல்) அவர்களைப் பின்பற்றி நடப்பதற்கான முறைமையாக அமைந்துள்ளமையை உணரலாம். பின்பற்றுதலும் கீழ்ப்படிதலும் ஒருபுறம். போலச் செய்தலும் எவ்விதச் சிந்தனையுமின்றி ஏற்று நடத்தலும் மறுபுறம். இவ்விரண்டு நடைமுறைகளுக்கும் இடையிலான வித்தியாசத்தை நாம் தெளிந்துகொள்ள வேண்டும். முன்னையது ஆதாரங்களின் நம்பகத் தன்மை, ஆதிக்க இயல்பு என்பவற்றை விளங்கிக் கொள்ளக்கூடிய ஒருவரின் அறிவு, புரிந்து கொள்கின்ற ஆற்றல் என்பவற்றை அடிப்படையாகக் கொண்ட செய்முறையில் தங்கியிருக்கிறது. பின்னையது, எதனையும் கண்களை மூடிக் கொண்டு (தக்லீத்) ஏற்று, எந்தவிதமான பரீட்சார்த்தமும் அல்லது சம்பந்தப்பட்ட சான்றைப் பற்றிய எவ்வித அறிவுமின்றி சிந்தனையற்ற முறையில் அமைகின்ற பாவனைச் செயலாகும். இஜ்திஹாத் என்பது இஸ்லாமிய சட்டவாக்கத்தில் சுதந்திரமான ஆய்வுக்கும் சீர்திருத்தத்துக்குமான தனிச்சிறப்புப் பெற்ற ஓர் அம்சமாகும். குர்ஆனிய அறிவுறுத்தல்களை விளங்கி, தெளிவுறுத்தி, செயலுருப்படுத்துவதுதான் ஸுன்னா எனக் காண்பதாயின் அதற்கு இஜ்திஹாத் அவசியம். உலகளாவிய மக்களதும் அவர்களது கருத்துக்களதும் பல்வேறுபட்ட தன்மைகள், கால ஓட்டத்தில் அவற்றில் ஏற்பட்டு வரும் மாறுதல்கள் ஆகியனவற்றை அங்கீகரிக்கும் ஒரு முறையாக இது அமைந்துள்ளது.

# இரண்டு

## மதம் மாறுதல் பற்றிய குர்ஆனின் விளக்கம்

*மதம் மாறுதல் பற்றிய கருத்தின் அடிப்படை அம்சங்களைக் குர்ஆன் முன்வைக்கிறது. சுருக்கமாகச் சொல்வதானால் மதம் மாறுதல், மாறியமை குறித்துக் கவலை கொள்ளாதிருத்தல், மீளவும் இஸ்லாத்தையும் இறையோனையும் ஏற்காது விடுதல் என்பன மறுமையில் தண்டனைக்கு ஆளாக்குவன. மதம் மாறும் குற்றம் இழைப்பவர் தனக்குத் தானே துயர் இழைத்துக் கொள்கின்றார். திரும்பத் திரும்ப தமது நம்பிக்கையிலிருந்து மாறிச் செல்பவர்கள் என்னதான் செய்தாலும் அல்லாஹ்வின் பாவமன்னிப்பைப் பெற முடியாது.*

*பலவந்தத்தின் பேரில் ஒருவர் மதம் மாறி விடுகின்றார். அவருக்கு வேறு மாற்று வழிகள் ஏதும் இல்லை. அவ்வாறான சந்தர்ப்பங்கள் அவரது உண்மையான நம்பிக்கையைப் பங்கப் படுத்துவதில்லை. தெளிவான சிந்தனையுடனும் சுயமான தனது விருப்பின் பேரிலும் சத்தியத்தை மறந்து நிற்றல் தான் ஒருவரது உண்மையான நம்பிக்கையைப் பங்கப்படுத்தி மதமாற்றத்துக்குள் அவரைத் தள்ளிவிடும். விசுவாச பலவீனம், உறுதிப்பாடின்மை, தூய உள்ளத்துடன் இறையோனை அடிபணிதல் செய்யாது விடுவது என்பனவே மதமாற்றத்துக்கான நுழைவாயிலைத் திறந்து விடுகின்றன. சத்தியத்தை மறுத்துரைப்பவரின் கருமங்கள் அனைத்துமே பயனற்றவையாகி விடும். இதுவே அவருக்குக் கிடைக்கக்கூடிய பிரதிபலனாகும்.[1] இறைவனின் கட்டளைப் பிரகாரம் இஸ்லாத்தை விசுவாசித்து ஏற்று, பின்னர் அதிலிருந்தும் விலகிச் செல்வதனையே மதமாற்றம் எனும் சொல் குறித்துக் காட்டுகிறது.*

*'அல் ரித்தா' இன்னும் 'அல் இர்திதாத்' என்ற சொற்பிரயோகங்கள் குர்ஆனின் விளக்கத்தின் வெளிச்சத்தில், ஒன்றிலிருந்து*

வேறொன்றை அடைந்து பின்னர் விட்டுச் சென்றதன் பக்கம் திரும்புதல் என்ற அர்த்தத்தைத் தருகின்றன. எவ்வாறாயினும், மதம் மாறுதலைப் பற்றிப் பேசுகின்ற பல்வேறுபட்ட குர்ஆனிய வசனங்களில் எந்தவொன்றும் இஸ்லாத்திலிருந்து மாத்திரம் வாபஸ் பெற்றுக்கொள்வதைப் பற்றி பேசவில்லை; அல்லது ஆன்மீகத் தளத்துடன் சம்பந்தப்படுவதிலிருந்து விலகிக் கொள்வதை மாத்திரம் பேசவுமில்லை. ஆன்மீகத்தையும் லௌகீகத்தையும் உட்படுத்தி 'ரத்தா' என்ற வினைச் சொல்லுடன் ஒன்று சேர்த்து விலகுதல் அல்லது திரும்பிப் போதல் என்ற அர்த்தத்தில் தான் குர்ஆன் இந்தச் சொல்லைப் பயன்படுத்துகிறது. குர்ஆனில் 'ரித்தா' என்பது, இஸ்லாத்தைக் கைவிட்டுவிட்டு குப்ரின் பக்கம் வெளிப்படையாகப் பின்வாங்கித் திரும்பி விடுவது என்ற அர்த்தத்தைத் தருகின்றது. இந்த வசனங்கள் எச்சரிக்கை செய்யும் அதேவேளை, இஸ்லாத்தினுள் நுழைந்து கொண்ட ஒவ்வொருவரையும் அதனை உறுதியாகப் பற்றிப் பிடித்துக் கொள்ளும்படியும் தூண்டுகிறது. ஏனெனில், அதுவே உண்மையான வழிகாட்டல்; அது மிகவும் ஆதார பூர்வமானது, வாழ்க்கைக்கும் வாழ்வதற்கும் இது அசையாத (உறுதியான) அடித்தளத்தை அமைத்துக் கொடுத்துள்ளது.

மதம் மாறுதல் அல்லது 'ரித்தாஹ்' பற்றிய குர்ஆனின் கருத்து இவ்வாறிருக்க, மதத்தைப் பொருத்து பல்வேறு அர்த்தங்களைத் தருவதற்காக, குர்ஆன் மொழிரீதியான இந்தச் சொல்லை எவ்வாறு வினைப் பெயராகப் பயன்படுத்தியிருக்கிறது என்பதை நாம் பார்க்கலாம். 'அல் ரித்தாஹ்' என்ற வினைப் பெயர், இஸ்லாத்திலிருந்து பின்வாங்கிப் போகுதல்- திரும்பிப் போகுதல் என்ற அர்த்தத்தைக் குறிப்பதற்காகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. இஸ்லாத்தினூடாக அல்லாஹ்வை ஒருவன் சரணடைந்ததன் பிறகு சத்தியத்தை மறுப்பானாயின் அவன் தனது நம்பிக்கையைத் துறந்தவனாக ஆகிவிடுகிறான். 'ரித்தாஹ்' நூற்றாண்டு காலமாக சந்தேகத்திற்கிடமின்றி திட்டமான கருத்துடன் மதத்திலிருந்து பின்வாங்கிச் செல்லுதல், அதிலும் குறிப்பாக இஸ்லாத்திலிருந்து திரும்பிச் செல்லுதல் என்ற அர்த்தத்திலேயே பயன்படுத்தப்பட்டு வந்துள்ளது.

அடிக்குறிப்பு 1 இல் குறிப்பிட்டுக் காட்டக்கூடிய எந்தவொரு வசனமும், அதாவது 'ரித்தாஹ்' அல்லது 'இர்திதாத்' சம்பந்தமாக குர்ஆன் சொல்லியிருக்கின்ற எந்த வசனத்திலும் மதம் மாறுதல் என்ற குற்றத்திற்காக அல்லது பாவத்திற்காக உலகில் தண்டனை வழங்குவது பற்றிக் குறிப்பிடப்படவில்லை. மதம் மாறிய ஒருவரை

இஸ்லாத்தின் பக்கம் மீண்டும் திரும்பி வர வேண்டுமென்று வற்புறுத்த வேண்டுமென்றோ அல்லது அப்படி அவர் வருவதற்கு மறுக்கின்ற பட்சத்தில் அவரைக் கொலை செய்ய வேண்டுமென்றோ குர்ஆனில் எங்கும் சுட்டிக் காட்டப்படவில்லை. குர்ஆனில் விபரித்துக் காட்டப்பட்டிருப்பது போன்று 'ரித்தாஹ்' என்ற சொல், மதம் மாறுதல் என்ற செயல் சம்பந்தப்பட்ட தனி மனிதனின் உளரீதியானதும் மனரீதியானதுமான நிலையையே பிரதிபலித்துக் காட்டுகிறது.

இஸ்லாமிய சட்டவியலில் மனித சுதந்திரம் மிகவும் உயர்வான விழுமியங்களில் ஒன்றாகவும் அதன் மிகவும் பிரதான இலக்குகளில் ஒன்றாகவும் உள்ளது. உண்மையில் நம்பிக்கையினதும் இறையோனின் ஏகத்துவ விசுவாசத்தினதும் பிரதான பணிகளில் ஒன்று மக்களுக்கு விடுதலையை ஈட்டிக் கொடுப்பதாகும். மூட நம்பிக்கை, அறியாமை, அஞ்ஞானம், படைக்கப்பட்ட வஸ்துக்களை வணங்குதல் ஆகியவற்றிலிருந்து மானுட சமூகத்தை விடுவித்து சர்வ வல்லமை படைத்த இறையோனுடன் அதனைத் தொடர்பு படுத்தி வைப்பதுதான் அதன் சிறப்பான பணி. பல குர்ஆன் வசனங்கள், இந்த சுதந்திரத்தை ஆதரிக்கவும் பாதுகாக்கவும் காப்பாற்றவுமே அருளப்பட்டன. உண்மையில் மத சுதந்திரத்திற்காக அர்ப்பணிக்கப்பட்டுள்ள பல குர்ஆனிய வசனங்கள், இந்த உரிமையை உறுதிப்படுத்துவது பற்றியும் எந்தவொரு வெளிதலையீட்டிலும் அல்லது குறுக்கீட்டிலுமிருந்தும் இதனைப் பாதுகாத்துக் காப்பாற்ற வேண்டிய கடமை பற்றியும் பேசுகின்றன. இந்த வசனங்களில் முதன்மையானது, "மார்க்கத்தில் நிர்ப்பந்தம் இல்லை"[2] எனப் பிரகடனம் செய்யும் வசனமாகும். மக்கத்து முஷ்ரிகீன்கள் ஹி.4ம் ஆண்டில் முஸ்லிம்களுக்கு எதிராகப் போர் தொடுத்த போது யூத மதத்தைத் தழுவியிருந்த சிறுவர்களைப் பலவந்தமாக இஸ்லாத்தில் நுழைவிப்பதற்கான அனுமதியைச் சில தோழர்கள் அல்லாஹ்வின் தூதர் முஹம்மது (ஸல்) அவர்களிடம் கேட்டார்கள். அதன்மூலம் யூதர்களுடன் அவர்கள் வாழ்வதைத் தடுத்து விடவும் கூடும். அவ்வாறு செய்வதற்கான அனுமதியை வழங்குவதற்கு நபியவர்கள் மறுத்து விட்டார்கள். மதத்தைவிட அரசியலுடன் தொடர்புடைய இன்னொரு விஷயத்தில், சில மதங்களைப் பின்பற்றுபவர்களுக்கு மத்தியில்- குறிப்பாக கிறிஸ்தவத்தில்- தங்களுடைய நம்பிக்கையின் பக்கம் பலவந்தமாக மக்களை நம்பிக்கை கொள்ளச் செய்வது வழக்கமாக இருந்து வந்தது.[3] மற்றவர்கள் மீது நம்பிக்கைகளைத்

திணிப்பதும் நிர்ப்பந்திப்பதும் எவ்விதப் பலனையும் தராது எனப் பல குர்ஆனிய வசனங்கள் முஹம்மது (ஸல்) அவர்களுக்கு தெளிவு படுத்துகின்றன.[4]

'அசல் நம்பிக்கையின்மை'யில் தொடர்ந்து இருந்த வண்ணம், அதாவது ஒருபோதும் நம்பிக்கை கொள்ளாத ஒருவரின் நம்பிக்கை யின்மை பற்றிய குர்ஆனிய மனோபாவத்திற்கும் நம்பிக்கை கொண்டதன் பின்னர் நம்பிக்கையை விட்டு விலகுவதற்காக, நம்பிக் கையைத் துறக்கும் ஒருவரைப் பொருத்த அதன் மனோபாவத்துக் குமிடையிலான ஒரு வேறுபாட்டைக் கோடிட்டுக் காட்டலாம். தொடர்ந்தும் 'அசல் நம்பிக்கையின்மை'யின் நிலையில் இருக்கின்ற ஒருவருக்கு குர்ஆன் சுதந்திரத்தை அங்கீகரிக்கின்றது. அதேவேளை, நம்பிக்கையிலிருந்து கொண்டு நம்பிக்கையைத் துறந்து செல்லும் ஒருவருக்கு அதே சுதந்திரம் மறுக்கப்படுகிறது.

மதம் மாறுதலைத் தொடர்ந்து பாவமன்னிப்புத் தேடுதலும் அது ஏற்றுக்கொள்ளப்படுகிறதா, இல்லையா என்பது பற்றிய விவகாரங்களும் தெய்வீக தீர்மானத்துக்கு உரியவையாகும். ஒரு வரின் மதம் மாறுதல், தண்டனை நியமமான குற்றச்செயல் எனக் கருதப்படும் எதனையும் சார்ந்திராத வரையில் அல்லாஹ்வுக்கும் அம்மனிதனுக்கும் இடையிலான தனிப்பட்ட விவகாரமாகவே இருக்கும். அது உலக ஆட்சியாளர்களின் அல்லது வேறு எவரி னதும் அதிகார எல்லைக்கு உட்பட்ட விஷயமாக அமையாது.

## மூன்று

# முஹம்மது (ஸல்) அவர்களின் காலத்தில் மதம் மாறுதல்

இஸ்லாம் என்ற மார்க்கம் உள்ளடக்கியிருக்கின்ற கொள்கைகள், சட்டதிட்டங்கள், நெறிமுறைகள், கோட்பாடுகள் ஆகிய அனைத்தினதும் அடிப்படை மூலாதாரம் குர்ஆனே என்பது ஐயத்துக்கு இடமற்ற உண்மை. ஸுன்னாவானது குர்ஆனின் தெளிவும் விளக்கமும் ஆகும். இன்னும் அதன் போதனைகளுக்கு எப்படிக் கீழ்ப்படிவது என்பதற்கான ஒரு முன்னுதாரணமும் குர்ஆன் கட்டளையிட்டிருப்பதை முஹம்மது (ஸல்) அவர்கள் செய்து காட்டிய முறையுமாகும். குர்ஆனுக்கும் ஸுன்னாவுக்கும் இடையில் எண்ணற்ற வேறுபாடுகள் இருக்கின்றன. குர்ஆனானது இஸ்லாமிய சட்டத் தீர்ப்புகளின் அடிப்படை மூலாதாரமாகும். அதேநேரத்தில் ஆதாரபூர்வமான ஸுன்னாவானது குர்ஆனில் சொல்லப்பட்டிருப்பதற்கு இணங்கிய தெளிவுரையை உள்ளடக்கிய மூலாதாரமாகும். குர்ஆனும் ஸுன்னாவும் ஒன்றையொன்று ஆதரித்து நிற்கின்ற மூலாதாரங்களாகும். அங்கு குழப்பமோ முரண்பாடோ ஒவ்வாமையோ அல்லது அவற்றிற்கிடையில் உடன்பாடின்மையோ ஏற்பட வாய்ப்பில்லை. அல்லது குர்ஆனில் சொல்லப்பட்ட ஒன்றை ஸுன்னாவின் எந்தவொரு பகுதியும் இரத்துச் செய்யவோ செல்லுபடியற்றதாக்கவோ சந்தர்ப்பம் இல்லை. குர்ஆனில் உறுதிப்படுத்தப்பட்டனவற்றை ஸுன்னா தெளிவு படுத்துகின்றது.

குர்ஆனின் கோட்பாடுகளும் முறைமையும் மத சுதந்திரத்தின் அத்தியாவசியத் தன்மையை மிகவும் தெளிவாகக் குறித்துக் காட்டுகின்றன. நம்பிக்கை கொள்ளாத ஒருவருக்கு அல்லது மதம் மாறியவருக்குரிய தண்டனை மறு உலக வாழ்க்கையின் போதே

நிறைவேற்றப்படும் எனக் குர்ஆன் மிகவும் தெளிவாக எடுத்துச் சொல்லுகிறது. இறைத்தூதர் முஹம்மது (ஸல்) அவர்களின் காலத்தில் விசுவாசியராயிருந்த நூற்றுக்கணக்கானோர் நயவஞ்சகர்களாக மாறினார்கள் அல்லது மதம் மாறிச் சென்றார்கள். உண்மையில் அவர்களது மதமாற்றம் இறைத்தூதர் முஹம்மது (ஸல்) அவர்களுக்கும் முஸ்லிம் சமூகத்துக்கும் பாரிய தீங்குகள் இழைப்பதாக அமைந்தது. என்றாலும்கூட அன்னார் அவர்களுக்கு எந்தவொரு தீங்கு செய்வதிலிருந்தும் தவிர்ந்திருந்தார்கள். 'முஹம்மது அவருடைய தோழர்களையே கொல்லுகிறார்', 'தன்னுடைய கொள்கையை மக்கள் மீது திணிக்கிறார்' அல்லது 'தனது மதத்தைத் தழுவும்படி பலவந்தம் செய்கிறார்' என்றெல்லாம் மக்கள் கூறக்கூடும் என அன்னார் கருதினர். எந்தவொரு சந்தர்ப்பத்திலும் இறைத்தூதர் முஹம்மது (ஸல்) அவர்கள் மதமாற்றத்துக்கு உள்ளானவர்கள் தண்டனைக்குரிய வேறு ஏதும் குற்றங்களுக்கு ஆட்பட்டிருக்காத நிலையில் மரண தண்டனையை நியமம் செய்ததில்லை.

எடுத்துக்காட்டாக, இறைத்தூதர் முஹம்மது (ஸல்) அவர்கள் மக்காவிலிருந்து ஜெரூஸலத்துக்கு எடுத்துச் செல்லப்பட்ட தனது அற்புதமான இரவு யாத்திரையின் போது நிகழ்ந்தன குறித்துப் பேசிய வேளை இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டிருந்த மக்கள் சிலர் மதம் மாறிச் சென்றார்கள் எனப் பெரும்பாலான வரலாற்று ஆசிரியர்களும், முஹம்மது (ஸல்) அவர்களின் வாழ்க்கை வரலாற்றை வரைந்துள்ள அறிஞர்களும் குறிப்பிடுகிறார்கள். ஹதீஸ் தொகுப்புகளில் காணக்கிடைப்பது போல இறைத்தூதர் முஹம்மது (ஸல்) அவர்களின் வாழ்நாளின் போது மதம் மாறிய எந்தவொரு நபரும் மரண தண்டனைக்கு உட்படுத்தப்பட்டிருப்பின் அது அந்த மனிதர்கள் இழைத்த போர்க் குற்றங்கள், கொலை முதலாய வேறு குற்றங்களுக்காகவேயன்றி அவர்களது மதமாற்றத்தின் காரணமாக வல்ல.[5] அல்லாஹ், உண்மையில் சத்தியத்தை மறுப்பவர்களுக்கும் நயவஞ்சகர்களுக்கும் (முனாபிகீன்) எதிராகப் போராடும் படியே இறைத்தூதர் அவர்களுக்குக் கட்டளையிட்டான்.

நம்பிக்கை கொண்டதன் பின்னர் நம்பிக்கையைத் துறந்து வேறு பக்கம் திரும்புகின்ற எந்தவொருவருக்கும் மரண தண்டனை வழங்க வேண்டுமென தெய்வீகரீதியாக அருளப்பட்ட தண்டனை ஒன்று இல்லை. குர்ஆனிலோ அல்லது இறைத்தூதர் முஹம்மது (ஸல்)

அவர்களின் செயலிலோ மதம் மாறுதலுக்கான நிர்ணயிக்கப்பட்ட தண்டனை ஒன்றினை அல்லாஹ் நியமம் செய்துள்ளான் என நபிகளார் அறிந்திருந்தார்கள் எனக் காட்டும் எந்தவொரு குறிப்பையும் காண முடியவில்லை. அப்படியான தண்டனை பற்றி இறைத்தூதர் முஹம்மது (ஸல்) அவர்கள் அறிந்திருந்தால் அதனைச் செயல்படுத்துவதற்கு அவர்கள் சற்றேனும் தயங்கியிருக்க மாட்டார்கள். ஏனெனில், குற்றங்களுக்காக நியமம் செய்யப்பட்டிருந்த தண்டனைகளை வழங்குவதில் அன்னார் ஒழிவு மறைவின்றி நடந்து கொள்பவர்களாக இருந்து வந்துள்ளார்கள்.

மதம் மாறுதலுக்காக சட்டபூர்வமாக விதிக்கப்பட்ட தண்டனை எதையும் குர்ஆன் கொண்டிருக்கவில்லை என்பதை முஸ்லிம் சட்ட அறிஞர்கள் அறியாதவர்கள் அல்லர். அவ்வாறே இறைத்தூதர் முஹம்மது (ஸல்) அவர்களின் சொல்லையும் செயலையும் உள்ளடக்கியிருக்கின்ற ஸுன்னா அத்தகையதொரு தண்டனையிலிருந்து விலகியே இருந்தது. தான் விசுவாசம் கொள்ளும் ஒன்றினைத் தேர்ந்து கொள்ளும் சுதந்திரத்தை இஸ்லாம் மிக உயரிய விழுமியமாகக் கொண்டுள்ளமையை குர்ஆன் சுமார் இருநூறு வசனங்களில் உறுதி செய்துள்ளது. இத்தனைக்கும் மத்தியில் மதம் மாறியவர் மரண தண்டனைக்கு உட்படுத்தப்பட வேண்டுமென்ற வாதத்திற்கு ஆதரவாகவே முஸ்லிம் சட்ட அறிஞர்கள் பேசினார்கள். தமது நிலைப்பாட்டுக்கு ஆதரவாக அவர்கள் கொண்டிருந்தது, ஆதாரபூர்வ ஹதீஸ் வட்டத்துள் அமையாத ஒரு கூற்றினையே. இதற்கு மரண தண்டனை, நபித் தோழர்களது ஏகோபித்த அங்கீகாரத்தைப் பெற்றிருந்தது என அவர்கள் வாதிட்டார்கள். அவர்கள் முன்வைத்த வேறும் பல ஹதீஸ்களும் பலத்த கேள்விகளுக்குரியனவாகவே அமைந்தன.

இறைத்தூதர் முஹம்மது (ஸல்) அவர்களின் காலத்தில் கி.பி.627ல் முஸ்லிம் சமூகத்திற்கும் மக்கத்துக் குறைஷிக் குலத்தவர்களுக்கு மிடையே ஒரு சமாதான உடன்படிக்கை இடம்பெற்றது. இதில், இரு சாராரும் பத்து வருடங்களுக்கு யுத்தம் செய்வதில்லை என்ற ஒரு போர் நிறுத்த உடன்படிக்கையில் கைச்சாத்திட்டனர். இறைத்தூதர் முஹம்மது (ஸல்) அவர்கள் இந்த உடன்படிக்கையின் விதிகளை மதித்து, இஸ்லாத்திலிருந்து மதம் மாறி குறைஷி இணைவைப்பாளர்களுடன் சேர்ந்து கொள்ள விரும்பியவர்களை சுதந்திரமாக விட்டுவிடுவதற்கு இணங்கினார்கள். ஹுதைபியாவின்

இக்கால கட்டத்தில் இஸ்லாத்திலிருந்து விலகிச் சென்ற எவரையும் முஹம்மது (ஸல்) அவர்கள் குற்றஞ் சுமத்தவில்லை. இன்னும், எவரேனும் முஸ்லிம்களின் தரப்பிலிருந்து பிரிந்து குறைஷியர்களுடன் சேர்ந்துகொண்டால், மதம் மாறிச் சென்ற குற்றத்துக்கான தண்டனையை நிறைவேற்ற அத்தகையவரைத் திருப்பித் தரும்படி கேட்கவும் நபிகளாருக்கு உரிமை இருக்கவில்லை.

முஹம்மது (ஸல்) அவர்களின் முழு வாழ்நாளிலும் மதம் மாறிய ஒருவரை மரண தண்டனைக்கு உட்படுத்திய சம்பவம் எதுவும் இல்லையென்பது தாபிக்கப்பட்ட உண்மையாகும். தன்னுடைய மதத்திலிருந்து மதம் மாறிச் செல்லும் எவரொருவரும் மரணத்துக் காளாக்கப்பட வேண்டும் என்பது இறை கட்டளை என அறிந்திருந்தால், எந்தவொரு காரணத்திற்காகவும் அத்தகு கட்டளையை நிறைவேற்றுவதற்கு அன்னார் சற்றேனும் தயங்கியிருக்க மாட்டார்கள். இந்த ஆய்வில் எடுத்துக்காட்டப் பட்டுள்ள உதாரணங்களும், மதம் மாறியவர்கள் கொலை தண்டனைக்கு உட்படுத்தப்பட்ட சம்பவங்களும் மதம் மாறுதல் ஏனைய குற்றச் செயல்களுடன் இணைந்து காணப்பட்டமையாலேயே நிகழ்ந்தன என்பது குறிப்பிடத்தக்கது. முஸ்லிம் சமூகத்திற்கெதிராகக் கலவரங்களை விளைப்பதாகவும் பகைமையைத் தூண்டிவிடும் பிரகடனங்களுமாகவே அத்தகைய மதமாற்றங்கள் அமைந்திருந்தன.

## நான்கு

# வாய்மொழியிலான ஸுன்னாவும் மதம் மாறுதலும்

நபிகள் நாயகம் முஹம்மத் (ஸல்) அவர்களது கூற்றுக்களாக அமைந்த வாய்மொழி ஸுன்னாவில் மதம் மாறியவர் கொல்லப்பட வேண்டும் எனும் தனியோர் அறிவிப்பாக அமைந்த ஹதீஸும் உள்ளடங்குகிறது. நன்கு அறியப்பட்டதும் முஸ்லிம் அறிஞர் களினால் பரவலாக மேற்கோள் காட்டப்படுகின்றதும் மதம் மாறியவர்களுக்கு மரண தண்டனை வழங்கப்பட வேண்டும் என வாதிடுகின்றவர்கள் தமக்கு ஆதாரமாகக் கொள்வதுமான அந்த ஹதீஸ் வாசகம் இப்படி வருகின்றது: "எவனொருவன் தனது மதத்தை மாற்றிக் கொள்கிறானோ அவனைக் கொன்று விடுங்கள்." இஸ்லாத்தின் ஆரம்பக் காலத்திற்குப் பிறகு இந்த ஹதீஸ் மிகவும் பரவலாகக் காணப்பட்டது. அதற்கு முற்பட்ட காலத்தில் எவ்வாறாயினும் அது வெறுமனே ஒரு தனியான (பிரபல்யம் இல்லாத- ஒரு சிலரால் மாத்திரம் அறிவிக்கப்பட்ட ஆஹாத் ஹதீஸ் தரத்தையுடைய) ஹதீஸாகவும் முழுமையாக அறிவிக்கப்படாத ஒன்றாகவுமே விளங்கியது. அல்லாஹ்வின் தூதர் முஹம்மது (ஸல்) அவர்களுக்கும் அவர்கள் மூலம் அருளப்பட்டு வந்த குர்ஆனுக்கும் அன்னார் இஸ்லாத்தின் உறுதிப்பாட்டுக்காக எடுத்து வந்த நடவடிக்கைகளுக்கும் எதிராகத் தம்மால் இயன்ற அத்துணை திட்டங்களையும் தீட்டி வந்தது மட்டுமல்லாமல் மதீனத்து முஸ்லிம்கள் குறித்த பொய்யான தகவல்களைப் பரப்பி, பிரிவினைகளை ஏற்படுத்த சதிகள் பல செய்து புதிய இஸ்லாமிய சமூக அமைப்பின் பாதுகாப்புக்குப் பல்வேறு வகையான அச்சுறுத்தல்களையும் யூதத் தலைவர்கள் ஆற்றி வந்த காலகட்டம் அது. இத்தகைய நிலைமையுடன் சம்பந்தப்பட்டது தான் குறிக்கப்பட்ட இந்த ஹதீஸ். ஒரு முஸ்லிம் இஸ்லாத்தின் மீது நம்பிக்கை கொண்டு, மதம் மாறும் குற்றத்தைச் செய்து மீண்டும் இஸ்லாத்தில் இணைந்து கொள்ளும் விஷயத்துடன் சம்பந்தப்பட்ட விவகாரமல்ல இது. இருப்பினும் இஸ்லாம் மதம் மாறுதலுக்கு

மரண தண்டனையை ஆதரிக்கிறது என்பதை நிலைநிறுத்துவதற்காக இந்த ஹதீஸ் உதாரணமாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. இந்த ஹதீஸை வியாக்கியானம் செய்வதற்காக இமாம் அலி (ரலி) அவர்களோடு சம்பந்தப்பட்டதாக முன்வைக்கப்படும் குழப்பமூட்டுகின்ற கதையை இந்த ஆய்வு புறந்தள்ளுகின்றது. சமூகங்களுக்கிடையிலான பதட்ட நிலைகளின் போது குர்ஆனின் பின்வரும் வசனம் அருளப்பட்டது:

> *(நபியே! வேஷதாரிகளான) முனாஃபிக்குகளும், எவர்களுடைய இதயத்தில் (பாவ) நோய் உள்ளதோ அத்தகையோரும், மதீனாவில் பொய்யான விஷயங்களை மக்களுக்கு மத்தியில் பரப்பக்கூடியவர்களும் (தங்களின் இச்செயலிலிருந்து) விலகிக்கொள்ளாவிடில், நிச்சயமாக நாம் உம்மை அவர்கள் மீது சாட்டிவிடுவோம். பின்னர் வெகு சொற்பமே தவிர (மதீனாவாகிய) அதில் உம் அண்டை வீட்டினராக அவர்கள் வசித்திருக்க மாட்டார்கள். சபிக்கப்பட்டவர்களாக (அவர்கள் இருப்பர். ஆகவே,) அவர்கள் எங்கு காணப்பட்ட போதிலும் கொன்றொழிக்கப்படுவார்கள். இதற்கு முன் சென்று விட்டார்களே அத்தகையோரில் அல்லாஹ்வின் வழிமுறை (இது)தான். ஆகவே, (நபியே) நீர் அல்லாஹ்வுடைய வழிமுறையில் யாதொரு மாறுதலையும் காணவே மாட்டீர்.* (குர்ஆன் 33: 60-62)

குர்ஆனின் இந்த வாசகங்கள், இஸ்லாமிய சமூகத்துக்கு எதிரான சதித்திட்டங்களையும் இஸ்லாத்தைத் துண்டாடுவதற்கான முயற்சிகளையும் தடுத்து நிறுத்துவதற்காகவே அருளப்பட்டன. எனவே, முஹம்மது (ஸல்) அவர்களது கூற்றாக அமைந்த, “எவரொருவர் தனது மதத்தை மாற்றிக் கொண்டாரோ அவரைக் கொன்று விடுங்கள்” எனும் ஹதீஸ் ஆதாரபூர்வமானதாக இருந்தால், இந்த முக்கியமான பாதுகாப்பு சூழ்நிலையை அன்னார் மனதில் வைத்திருப்பார்கள்.

எமது இஸ்லாமிய ஷரீஆ சட்டவியலைப் பொறுத்து பாதிப்புகள் விளைப்பதும் அடிக்கடி நிகழ்வதுமான பழக்கம் என்னவென்றால், குறைந்தது செயல்மட்ட அளவிலாவது குர்ஆனில் மிகத் தெளிவாகச் சொல்லப்பட்டிருப்பதை விட மிகைத்ததாக ஹதீஸை முன்வைப்பதாகும். அவ்வாறு குர்ஆனுக்கு மேலாக ஹதீஸை முற்படுத்துவதனால் ஹதீஸானது, குர்ஆனைத் தெளிவு

படுத்துகின்ற இன்னும் அதனை விரிவாக விளக்குகின்ற நிலைக்கும் மேலாக உயர்த்தப்பட்டு விடுகிறது. (தெளிவுபடுத்துவது தெளிவு படுத்தப் படுகின்றதை விட மேலான தரத்துக்கு உயர்த்தப் பட்டு விடு கின்றது). இதனால் ஹதீஸ் குர்ஆனுக்குச் சமமான அல்லது அதற்கு ஒப்பான அந்தஸ்துக்கு வந்து விடுகிறது. இந்த நடைமுறையின் காரணமாக குர்ஆனை மிகைத்து தீர்ப்பு வழங்கக்கூடிய அளவுக்கு ஹதீஸ்கள் ஆதிக்கம் செலுத்த அனுமதிக்கப் பட்டிருக்கின்றமை ஆச்சரியத்துக்குரியதல்ல. அதனால் இந்த ஆய்வு பல்வேறுபட்ட அறிவிப்பாளர்களின் தொடர்வரிசைகளினூடாக நமக்குக் கிடைக் கும் ஹதீஸையும் அதன் பல்வேறுபட்ட வாசகங்களையும் இன்னும் அதற்கு ஆதரவான சான்றுகளையும் இதுகுறித்துப் பல்வேறு அறி ஞர்கள் முன்வைக்கும் அபிப்பிராயங்களையும் எடுத்துக்காட்டும். இவ்வாறு செய்வதன் மூலம், அறிஞர்கள் ஹதீஸை நடைமுறையில் எவ்வாறு பிரயோகித்துள்ளார்கள் என்பதைக் கண்டு கொள்ள லாம். குர்ஆனை விவரிக்கின்ற ஆதிக்க எல்லையிலிருந்து ஹதீஸை வெளிக்கொணர்ந்து குர்ஆனிலும் மேலான ஓர் ஆட்சி எல்லைக்கு அதனை உயர்த்தி விடுகிறார்கள். விளைவாக, குர்ஆனிலேயே கண்டு கொள்ள இயலாத தீர்ப்புகளையும் வழங்கி விடுகிறார்கள். உதார ணமாக, மனித உயிரைப் பேணிப் பாதுகாக்க குர்ஆன் பெரும் கவனம் செலுத்தி நிற்கும் நிலையில் இந்த ஹதீஸ் அதனை அழித்து விடுவதனை அங்கீகரிப்பதாக அமைந்து விடுகிறது. மானுட உயிர் களது அழிவைத் தடுக்க குர்ஆன் சாத்தியமான அனைத்து வழி களையும் முன்வைத்துள்ளமை தெளிவு.

மேலும், குர்ஆனின் சுமார் இருநூறு வசனங்கள், நம்பிக்கை சம்பந்தப்பட்ட விஷயங்களில் பலவந்தம் செய்யும் கோட்பாட்டை நிராகரிப்பதுடன் ஒருவர் தான் தேர்ந்து கொண்டதை விசுவாசிப்ப தற்கும் தான் விரும்புகின்ற மதத்தைத் தெரிவு செய்து உறுதிப் படுத்துவதற்குமான முழுமையான மனித உரிமையை வழங்கு கின்றன. மேலே கண்டது போல, ஒருவர் தனது மதத்தை மாற்றிக் கொள்வதற்கான தீர்மானத்திற்கு வருவாராயின், அதற்கான லௌகிக தண்டனை ஏதும் இல்லையென்பதையும் குர்ஆன் உறுதிப் படுத்துகிறது. (அதாவது, சம்பந்தப்பட்ட மனிதர் தண்டனைக்குரிய வேறு எந்தக் குற்றமும் செய்யாதிருக்கும் வரை) இதற்கு முரணாக, சாதாரண மதம் மாறுதலுக்கான (அதாவது, வேறு எந்தக் குற்றச் செயலையும் சம்பந்தப்படுத்தாத) தண்டனையைப் பிரகடனப் படுத்தும் உரிமை அல்லாஹ்வுக்கு மாத்திரமே உண்டு என்பதையே குர்ஆன் உறுதிப்படுத்துகின்றது. குர்ஆனிய வசனத்தின் வெளிச்சத்

தில் ஒருவர் இந்த ஹதீஸை நோக்கினால் இதன் அர்த்தம் உறுதி யானதாகவும் தெளிவானதாகவும் இருப்பதைக் கண்டு கொள்ள லாம். இதில் எவ்வித சர்ச்சைக்கும் இடம் கிடையாது. எவ்வாறா யினும், ஹதீஸின் பல்வேறுபட்ட வாசகங்களை குர்ஆனிலிருந்து வேறுபடுத்தி தனித்தனியாக நோக்குகின்ற போதும், சில அறிவிப் பாளர்கள் இந்த விவரங்களை ஏனைய நிகழ்வுகளுடனும் கதை களுடனும் இணைத்துக் காட்டு கின்ற போதும் இந்த ஹதீஸ் புரிந்து கொள்ள இயலாததாய் விடுகின்றது. இன்னும், இந்த ஹதீஸ் அறிவிப்பாளர் தொடர் வரிசை பூரணமற்றதாக அல்லது இன் னொரு ஹதீஸுடன் ஒப்பீடு செய்யும் போது பலவீனமானதாக இருக்கலாம். எனவே, அத்தகைய ஹதீஸ்கள் நம்பத்தக்க மூலா தாரங்களாக அமைவனவல்ல.[6]

அறிவிப்பாளர் தொடர்வரிசையின் பிரச்சினைகள் ஒருபுறமிருக்க, அவ்வாறான ஹதீஸ்கள் தனியொரு அறிவிப்பாளரையே கொண்டுள்ளமை யையும் நாம் நினைவில் கொள்ள வேண்டும். மதம் மாறியவர்கள் அல்லது அவிசுவாசிகள் தீயிலிடப்பட வேண்டும் எனச் சுட்டுகின்ற அறிவிப்புகள், இந்த மக்கள் வாளால் வெட்டிக் கொல்லப்பட்டதன் பின்பு எரிக்கப்படுவார் களா அல்லது உயிருடன் எரிக்கப்படுவார்களா என்பதைக் குறிப்பிடுவதாக இல்லை. மேலும், அவ்வாறான தகவல்களும் தரவுகளும் கடுமையான குழப்பத்திலும் முரண்பாடுகளிலும் தங்கியிருக்கின்றன என்பதையும் நாம் அவதானிக்கின்றோம். ஆக, இந்த ஆய்வு குர்ஆனின் அதிகாரம் ஸுன்னா வை மிகைத்ததாக அமைந்துள்ளமையை உறுதிப்படுத்துகிறது. வேறு வார்த்தையில் சொல்வதானால், குர்ஆன்தான் ஸுன்னாவின் உண்மைத் தன்மையை உறுதிப் படுத்துகின்றதேயன்றி மறுதலையாக அல்ல. குர்ஆனும் ஸுன்னாவும் கொண்டுவந்த வழிகாட்டல் மீது இஸ்லாத்தின் ஆரம்பகால கலீபாக்கள் அபூபக்கர், உமர் இப்னு அல் கத்தாப் (ரலி) கொண் டிருந்த அர்ப்பணமும் உறுதியும் காரணமாக அவர்களது மனோபாவங் களிலும் கொள்கைகளிலும் இதனைக் கண்டு கொள்ளலாகும்.

# ஐந்து

# மதமாற்றத்திற்கான தண்டனை பற்றிய முஸ்லிம் சட்ட நிபுணர்களின் கருத்து

இந்தக் கலந்துரையாடலின் அடுத்த கட்டம், இந்த விஷயத்தில் இஸ்லாமிய சட்டவியலும் அதன் சட்ட அறிஞர்களும் கொண்டுள்ள நிலைப்பாடுகள் என்ன என்பதையும் தமது நிலைப்பாடுகளுக்கு அவர்கள் அடிப்படையாகக் கொண்டுள்ள சான்றுகள் என்னவென்பதையும் காண்பதாகும். முஸ்லிம் சட்டவாக்க நிபுணர்கள் இந்தப் பிரச்சினையில் தங்களது நிலைப்பாட்டிற்கு இரண்டு ஆதாரங்களை அடிப்படையாக எடுத்துள்ளார்கள். வாய்மொழி மூலமான ஸுன்னா; அடுத்தது "எவனொருவன் தனது மதத்தை மாற்றிக் கொண்டானோ அவனைக் கொல்லுங்கள்" என்ற ஹதீஸ் ஆதாரபூர்வமானதென்ற தவறான கருத்து. இன்னும் மதமாற்றம் செய்து கொண்டவர் இஸ்லாத்தின் மீதும் முஸ்லிம்கள் மீதும் போர் தொடுத்தாரா இல்லையா என்பதைக் கருத்தில் கொள்ளாது மதம் மாறிய அனைவர் மீதும் இந்த ஹதீஸ் பொதுப்பட பிரயோகம் செய்யப்பட்டுள்ளது.

இரண்டாவது ஆதாரமாக அவர்கள் முன்வைப்பது இந்த விடயம் குறித்து ஏகோபித்த அபிப்பிராயம் நிலவுகிறது என்பதாகும். இதுவும் தவறானதே. 'ஏகோபித்த அபிப்பிராயம்' என்பது என்ன என்பது குறித்தே சட்ட வல்லுனர்கள் மத்தியில் ஏகோபித்த அபிப்பிராயம் ஏதும் இல்லாத நிலையில் நாம் எடுத்துக் கொண்டுள்ள பொருள் குறித்தும் அறிஞர்கள் மிகவும் வித்தியாசமான கருத்துக்களைக் கொண்டுள்ளமையை அவதானிக்கலாம். அங்கீகாரம் பெற்றுள்ள மார்க்கச் சட்டப் பிரிவுகள் அரசியல் ரீதியான மதமாற்றத்துக்கும் தனிப்பட்ட விசுவாசத்தின் பயனாகத் தேர்ந்து கொள்ளப்படும் மதமாற்றத்துக்கும் இடையிலான வித்தியாசத்தைப் பகுத்துக் காணாமல் குழப்பத்துக்குள்ளாகி இருக்கின்றன. சில (மத்ஹப்)

பிரிவுகள், மதம் மாறுதல் பற்றிப் பேசும் போது இஸ்லாத்திலிருந்து மதம் மாறும் செயலானது ஒரு குற்றச் செயலாகும். அதற்கு அல்லாஹ்வினால் கட்டளையிடப்பட்ட தண்டனையிருக்கின்றது. அதனை எவ்விதக் கருணையுமின்றி நிறைவேற்றிவிட வேண்டும் என்ற கருத்தைக் கொண்டுள்ளன. மதம் மாறுதல் ஒரு குற்றச் செயலாகும். வெறுமனே நிர்ணயிக்கப்பட்ட தண்டனையே அதற் காக வழங்கப்பட வேண்டும் எனச் சிலர் நம்புகிறார்கள். அதே நேரத் தில் மூன்றாம் குழுவினர் மதம் மாறுதலுக்கான தண்டனை 'இஸ் லாமிய சட்டக் கோட்பாடுகளின்' அதிகார எல்லைகளுக்கு உள்ளே வந்துவிடும்; முஸ்லிம் ஆட்சியாளர்கள் சட்டத்தையும் மக்கள் மத்தி யிலான ஒழுங்கையும் சமூக ஒற்றுமையையும் பாதுகாக்க அவர் களின் சொந்த வியாக்கியானத்திற்கிணங்க செயல்படுத்த சுதந்திரம் உடையவர்களாவர் என்ற கருத்தைக் கடைப்பிடிக்கிறார்கள்.

'அரசியல்' நம்பிக்கைத் துரோகத்திற்கும் 'மதரீதியான' நம்பிக் கைத் துறத்தலுக்குமிடையிலான குழப்பநிலை, ஏற்கனவே சுட்டிக் காட்டியது போன்று ஹிஜாஸிய சூழலில் நடைமுறையிலிருந்து வந்த வாய்மொழி கலாசாரத்தினால் தோன்றியதாகும். 'யூத மதத் தை விட்டு வெளியேறிய எவரையும் கொலை செய்வது அவசியம்' எனும் யூத வாய்மொழிப் பாரம்பரிய கலாசாரத்தின் செல்வாக்குக் காரணமாகப் பதிந்தது இது.

அத்துடன், இஸ்லாமிய ஆதிக்கப் பரம்பல் பல நாடுகளை முஸ்லிம் ஆட்சியமைப்புக்குள் கொண்டு வந்தது. அவை தத்தமக் குரிய சொந்த நெறிமுறைகள், மரபுகள், பண்பாடுகள், சட்டவியல் கள் முதலியன அனைத்தையும் தம்முடன் கொண்டனவாகவே முஸ்லிம் அதிகாரத்தின் கீழ் வந்து சேர்ந்தன. அத்தகைய சட்டங்கள், எடுத்துக்காட்டாக ஆதிக்க மேலாண்மை மீதான விசுவாசங்களை மாற்றிக் கொள்ளல், அரச-சட்ட ஒழுங்கு முறைகளுக்கெதிராகக் கிளர்ச்சி செய்தல் முதலியனவற்றையும் உள்ளடக்கியிருந்தன. நன்கு தாபிக்கப்பட்டிருந்த சட்டதிட்டங்களையும் தலைமுறை தலை முறையாக செம்மைப்படுத்தப்பட்ட பழக்க வழக்கங்கள், கலாச்சார பாரம்பரியங்களையும் கொண்டிருந்த பைஸாந்தியர், பாரசீகர் உட்பட ஏனைய மக்களது செல்வாக்கு, அவர்கள் முஸ்லிம்களது ஆட்சியின் கீழ் வந்த பின்னர் முஸ்லிம் சூழலை ஊடுருவி அதில் தமது முத்திரைகளைப் பதிக்கலாயது. இந்த முஸ்லிம் சட்ட நிபுணர் களது சிந்தையும் அத்தகு சட்டதிட்டங்கள், கலாசாரங்கள்,

பண்பாடுகள் முதலியவற்றின் செல்வாக்குக்கும் பாதிப்புக்கும் உள்ளாகி இருந்தமையைக் கண்டு கொள்ளலாம்.

ஹஸரத் அபூபக்கர் (ரலி) அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் (632-634 கி.பி) 'மத மாற்றப் போராட்டங்களுக்கு'ப் பின்னாலிருந்த காரணங்கள் தெளிவாக வரையறுக்கப்படவில்லை. அவை அரசியல் ரீதியான பரிமாணங்களை அடிப்படையாகக் கொண்டிருந்த போதிலும் மதரீதியான பரிமாணங்கள் குறித்தே அபூபக்கர் (ரலி) அவர்கள் அக்கறை கொண்டிருந்தார்கள். அதாவது, "கடமையான தொழுகையிலிருந்து ஸக்காத்தைப் பிரித்துவிடும் எந்தவொருவருக்கெதிராகவும் நான் நிச்சயம் போர் தொடுப்பேன்!" என்பதே அவரது பிரகடனமாயிருந்தது. அனேகமாக 'மதம்' (மார்க்கம்) என்பதனைச் சொன்னவுடனேயே அபூபக்கர் (ரலி) அவர்கள் அதன் கருத்தை முழுமையாகப் பரந்து விரிந்த கண்ணோட்டத்திலேயே பார்த்தார்கள். அதில் சட்டம் இயற்றல், அதிகார வரம்பு, சமூக நலன் ஆட்சியதிகாரம் என அனைத்தும் உள்ளடங்கியிருந்தன. இவையெல்லாம் ஒன்று சேர்ந்து ஷரீஆ என்ற முறையின் கீழ் வந்திருந்ததால் கொள்கைக்கும் சட்டத்திற்குமிடையே எந்தவொரு தெளிவான வேறுபாடும் தென்படவில்லை. 'மதம்' என்பது வாழ்க்கையின் சகல அம்சங்களையும் உள்ளடக்கிய ஒரு வாழ்க்கைத் திட்டம் என்பதாகவே அமைந்திருந்தது. இஸ்லாமிய உம்மாவின் அங்கத்தவர்கள் என்ற வகையில் தங்களது கடமைகளையும் கட்டுப்பாடுகளையும் கைவிட்டுவிட்டுச் சென்ற பிரஜைகளுக்கு அவர்களது பொறுப்புக்களை உணர்த்துவதே மதம் மாறுதலுக்கு எதிரான போராட்டங்களின் நோக்கமாயிருந்தது. ஓர் அரசின் பிரஜைகள் என்ற வகையில், அவர்கள் சட்டபூர்வமாக சில அந்தஸ்த்துக்களையும் உரிமைகளையும் பெற்றிருந்தார்கள். அவர்களுக்குக் கடமைப்பாடுகளும் பல இருந்தன. இவை அனைத்துக்கும் மூலாதாரமாக இருந்தது மதமே. ஆக, மதரீதியான கடமைப்பாடுகளைத் துறத்தல், அரசுக்கு எதிரான முனைவாகவே கொள்ளப்பட்டது.

இஸ்லாமிய சட்டவியலில் ஸுன்னி பிரிவைச் சார்ந்த நான்கு (மத்ஹப்) பிரிவுகளுள் ஹனபி மத்ஹபைச் சார்ந்தோர், இறை தண்டனைக்குள்ளாகும் ஓர் அம்சமாக மதம் மாறுதலைக் குறிக்கவில்லை. மாறாக, ஸியார் அல்லது ஜிஹாத் மற்றும் அதனோடு இணைந்த விவகாரங்களின் கீழ்தான் அது குறித்துப் பேசியுள்ளார்கள். மதம் மாறும் பெண் கொலைத் தண்டனைக்கு

உட்படுத்தப் படுவதில்லையென ஹனபி சட்ட நிபுணர்கள் அனை வருமே பிரகடனப் படுத்தியிருக்கிறார்கள். நன்மை, தீமையைப் பிரித்தறிகின்ற வயதை அடைந்த ஒரு பையன் மதம் மாறும் குற்றத் தைச் செய்தால் அவனைக் கொலை செய்யக்கூடாது. ஆனால், அவன் சிறையிலிடப்பட வேண்டும். பருவ வயதை அடைந்த ஆண் ஒருவர் மதம் மாறினால் அவரை அவசியம் கொலைக்கு உட்படுத்த வேண்டும் என்ற கருத்தை அவர்கள் கொண்டிருந்தார்கள். ஆனா லும், இந்த நிலைப்பாட்டிற்கு ஆதரவாக அவர்கள் எந்தவொரு குர்ஆனிய சான்றையும் முன்வைக்கவில்லை. மாறாக, முன்னர் குறித்துக் காட்டப்பட்ட "எவர் ஒருவர் தனது மதத்தை மாற்றிக் கொண்டாரோ, அவரைக் கொல்லுங்கள்" என்ற ஹதீஸையே மேற் கோள் காட்டுகிறார்கள். ஏகோபித்த முடிவின் அடிப்படையில் இந்த ஹதீஸ் அமைந்திருக்கின்றதென்றும் இறைத் தூதரின் தோழர்களின் காலத்திலிருந்தே இது இருந்து வந்ததென்றும் சமூக குழப்பங்களைத் தடுப்பதற்கான ஒரு வழியாக அபூபக்கர் (ரலி) அவர்களின் கிலாபத் ஆட்சிக் காலத்தில் மதம் மாறியவர்கள் மீது போர் தொடுக்க வேண்டியது அவசியமாக இருந்தது என்ற கருத் தையும் அவர்கள் முன்வைக்கிறார்கள். ஹனபி பிரிவு சார்ந்த சட்ட நிபுணர்கள் மதம் மாறுதலை அரசியல் கண்ணோட்டத்தில் பார்க்கும் இயல்புடையவர்களாக இருக்கிறார்கள்.

மாலிக் (மத்ஹப்) பிரிவில் மதம் மாறுதல், அல்ஸினா (விபச்சா ரம்) அல்லது சட்ட விரோதமான பாலியல் உறவு கொள்ளல், கற் பழிப்பு முதலாய குற்றங்களின் பட்டியலில் அடங்கும் எனக் கூறப் பட்டுள்ளது. ஆனால், இந்த மத்ஹப் பிரிவு, மதம் மாறும் குற்றச் செயலுக்கு இறைவனால் உத்தரவிடப்பட்ட தண்டனை உண்டு என்ற கருத்தைக் கொண்டிருக்கவில்லை. இமாம் மாலிக் இஸ்லாமிய சட்டக் கொள்கையையும் பரிபூரணம் பெறாத ஹதீஸையும் மேற்கோள் காட்டி, மதம் மாறி, பின்னர் மன்னிப்புக் கோரி மீளாது இருப்பவர்கள் கொல்லப்பட வேண்டுமெனக் கூறியுள்ளார். இந்த விஷயத்தில், மதம் மாறுகின்றவர் ஆணாயினும், பெண்ணாயினும் கொல்லப்பட வேண்டுமென்ற நிலைப்பாட்டை யே மாலிக் மத்ஹபு பிரிவினர் கொண்டுள்ளனர்.

ஷாபி மத்ஹப் பிரிவினர், தங்களுடைய அணுகுமுறைக்கு, பல தெய்வக் கொள்கையைத் தடை செய்வதுடன் மூன்று விடயங்களில் ஏதாவது ஒன்றேனும் நிகழாதவரை எந்தவொரு முஸ்லிமின் உயிரும்

சட்டபூர்வமாகக் கொல்லப்படக் கூடாது என்ற குர்ஆனின் வசனங்களை அடிப்படையாகக் கொண்டுள்ளனர்: விசுவாசம் கொண்டதன் பிறகு அவிசுவாசத்தின் பக்கம் திரும்புதல், விபச்சாரம், கொலை. இமாம் ஷாபி பின்வரும் நான்கு குர்ஆன் வசனங்களின் வெளிச்சத்தில் மதம் மாறுதல் பற்றிய பிரச்சினையை அணுகினார்கள். (1) *“(நம்பிக்கையாளர்களே! இவர்களுடைய) விஷமம் முற்றிலும் நீங்கி (அல்லாஹ்வின்) மார்க்கம் முற்றிலும் அல்லாஹ்வுக்கே ஆகும் வரையில் அவர்களுடன் போர் புரியுங்கள்”(8:39); (2) “இணை வைத்துக் கொண்டிருப்போரை அவர்களைக் கண்டவிடமெல்லாம் கொன்று விடுங்கள். இன்னும் அவர்களைப் பிடியுங்கள். அவர்களை முற்றுகையிடுங்கள். ஒவ்வொரு பதுங்குமிடத்திலும் அவர்களைக் குறிவைத்து உட்காருங்கள். பின்னர் அவர்கள் (தங்கள் பாவங்களுக்கு) பச்சாதாபப்பட்டு விலகி (விசுவாசித்துத்) தொழுகையையும் நிறைவேற்றி, ஸக்காத்தையும் கொடுத்து வந்தால் அவர்கள் வழியில் (அவர்களை) விட்டு விடுங்கள். நிச்சயமாக அல்லாஹ் மிக்க மன்னிப்பவன். மிகக் கிருபையுடையவன்”(9:5); (3) “ஆகவே, உங்களிலிருந்து எவரேனும் தம் மார்க்கத்தை விட்டு (மதம்) மாறி, நிராகரித்தவராகவே இறந்து விட்டால், அத்தகையோர் அவர்களின் (நற்)செயல்கள் இம்மையிலும் மறுமையிலும் அழிந்துவிடும். மேலும், அத்தகையோர் நரகவாசிகளாவர். அவர்கள் அதில் நிரந்தரமாகத் தங்கி இருப்பவர்கள்” (2:217)* இன்னும் (4)வது *“(நபியே) நீர் இணை வைத்தால் நிச்சயமாக உம்முடைய செயல்(கள் யாவும்) அழிந்து விடும். நிச்சயமாக நீர் நஷ்டமடைபவர்களிலும் ஆகிவிடுவீர்' என உமக்கும் உமக்கு முன்னிருந்தவர்களுக்கும் (வஹி) அறிவிக்கப் பட்டது.”(39:65)* இமாம் ஷாபி அவர்கள் சுட்டிக்காட்டியிருக்கின்ற முதல் வாசகம், நம்பிக்கைச் சுதந்திரத்தைப் பாதுகாக்கவும் பலவந்தப்படுத்தி மக்களைத் தமது மதத்தை மாற்றிக் கொள்ளும்படி கட்டாயப்படுத்தும் முயற்சிகளைத் தடுக்கவும் ஆயுதம் தாங்கிப் போர் புரிவது சட்டபூர்வமானது என்பதை உறுதிப்படுத்துகிறது. மதம் மாறுதல் மரண தண்டனைக்கு உட்பட்டது என ஷாபி மத்ஹப் பிரிவு வாதாடுகின்றது. ஏனெனில், அது நம்பிக்கையின்மையை விட மிகவும் கேடு விளைவிப்பதும் வெறுக்கத் தக்கதுமாகும். மதம் மாறுதல் காரணமாக உலகில் ஒருவருடைய செயல்கள் அனைத்தினதும் பயன்கள் இழக்கப்பட்டு விடுகின்றன; அல்லாஹ்வின் மன்னிப்பைப் பெற்றுக் கொள்வதற்கான சாத்தியங்களும் அற்றுப்

போய் விடுகின்றன என்றே அவர்கள் கருதினார்கள். எவ்வாறா யினும், மேலே காட்டப்பட்டுள்ள நான்கு வாசகங்களிலும் மதம் மாறுதலுக்கான இறை தண்டனை குர்ஆனில் விதியாகியுள்ளது எனக் காட்டப்படவில்லை.

ஹம்பலி மத்ஹப் பிரிவின் கருத்துப்படி, மதம் மாறியவர் அவருடைய நம்பிக்கையின்மையின் காரணத்திற்காகக் கொல்லப் பட வேண்டும். இது இறைவனின் கட்டளையின் பிரகாரம் ஏற் படுத்தப்பட்ட தண்டனையாக அல்ல; மாறாக, “எவனொருவன் தனது மதத்தை மாற்றிக்கொள்கிறானோ அவனைக் கொன்று விடுங்கள்” என்ற ஹதீஸை அடிப்படையாகக் கொண்டது.

இந்நிலைப்பாடுகளில் சில, அரசியல் கண்ணோட்டத்தில் மதம் மாறுதலுக்கும் தனிப்பட்ட நம்பிக்கைகளின் காரணமாக விசு வாசத்தினால் எழும் மதம் மாறுதலுக்குமிடையே காணப்படும் குழப்ப நிலையையே வெளிப்படுத்துகின்றன. இன்னும், இந்த விஷயத்துடன் தொடர்புடைய பெரும்பாலான விளக்கங்களில் இந்த மத்ஹப் பிரிவுகளுக்கிடையில் நிலவும் வேறுபாடுகள், இஸ் லாமிய சட்டவாக்கத்தின் கோட்பாடுகளுடன் இணங்கிப் போகக் கூடியதும் மதம் மாறுதலுக்கு இறைவனால் நிர்ணயிக்கப்பட்ட மரண தண்டனையொன்று இருக்கின்றது என்ற வாதத்தை ஆதரிக் கக்கூடியதுமான மூலவாசகம் ஏதும் இல்லாமைக்குத் தெளிவான சான்றாக உள்ளன. பல முஸ்லிம் சட்ட நிபுணர்களினால் ஆதரித் துப் பேசப்பட்டுள்ள நிலைப்பாடுகள் அரசினதும் சமூகத்தினதும் பாதுகாப்புக்கான நலன்களுடன் தொடர்புடைய சங்கேதக் குறிப்பு களை உள்ளடக்கியனவாக உள்ளன. இது மதம் மாறுதலுக்கும் முஸ்லிம் சமூகத்திற்கும் அல்லது அரசுக்கும் எதிராகப் போர் தொடுக்கும் செயலுக்குமிடையில் இருப்பதாக ஊகிக்கப்படும் ஒரு தொடர்பை அடிப்படையாகக் கொண்டதாக உள்ளது.

இமாமியா பிரிவைச் சார்ந்த ஷீயாக்கள், இரண்டு விதமான மதம் மாறுதல் உண்டு என்ற கருத்தைக் கொண்டவர்களாக இருக் கிறார்கள். ஒன்று, இஸ்லாத்திலேயே பிறந்த ஒருவரின் மதமாற்றம்; அடுத்தது, ஏற்கனவே இன்னொரு மதத்திலிருந்து இஸ்லாத்தைத் தழுவி பின்னர் ஏற்படுத்தும் மதமாற்றம். முதலாவது வகையைச் சார்ந்தவர், பாவமன்னிப்புக் கோருவதற்கான எந்தச் சந்தர்ப்பமும் வழங்கப்படாத நிலையில் உடனடியாகக் கொல்லப்பட வேண்டும்.

அந்த மனிதர் பாவமன்னிப்புக் கோருவதற்கான முனைப்புகளை மேற்கொண்டால் அவை ஏற்கப்படக்கூடாது. ஆக, மீண்டும் இஸ் லாத்தில் நுழைய அவரை அனுமதிக்கக் கூடாது. இரண்டாவது வகையைச் சார்ந்த, மதம் மாறிய மனிதருக்குப் பாவமன்னிப்புக் கோருவதற்கு சந்தர்ப்பமளிக்கப்பட வேண்டும். அவர் மன்னிப்புக் கோரினால் அவருடைய மன்னிப்பு ஏற்றுக்கொள்ளப்படும். இல்லா விடில், அவர் கொல்லப்படுவார். மதம் மாறியவர் ஒரு பெண்ணா யின் அவரைக் கொல்லக் கூடாது. அவர் சிறைப்படுத்தப்படுவார். இந்தப் பிரிவைச் சார்ந்தவர்கள் மதம் மாறுதல் இறை தண்டனை நியமம் செய்யப்பட்ட ஒரு குற்றம் எனக் கருதுவதில்லை. பதிலாக, நிலைமையை உத்தேசித்துத் தண்டனைகள் வழங்கப்படக் கூடிய குற்றங்களுள் இதனை வகைப்படுத்துகிறார்கள்.

லாஹிரியா பிரிவைச் சார்ந்தவர்கள், மதம் மாறுதல், இறை தண்டனை நியமம் செய்யப்பட்ட ஒரு குற்றம் என்றே கூறுகிறார் கள். “நம்பிக்கை சம்பந்தமான விஷயங்களில் பலவந்தம் இல்லை” என்ற குர்ஆனிய வசனம் இரத்துச் செய்யப்பட்டு விட்டது என்றும் அல்லாஹ்வின் தூதர் முஹம்மது (ஸல்) அவர்கள் தமது வாழ் நாளில் இறுதிவரை அவிசுவாசிகளான அரபிகள் இஸ்லாத்தை ஏற்க வேண்டும் அல்லது வாளால் வெட்டிக் கொலை செய்யப்பட வேண்டும் என வலியுறுத்தினார்கள் என்றும் அவர்கள் வாதாடு கிறார்கள். ஆகவே, இந்த வசனம் சில மக்களுக்கு மாத்திரமே, அதாவது யூதர்களுக்கும் கிறிஸ்தவர்களுக்கும் மாத்திரமே பொருந் தும் என்றும் அவர்கள் கூறுகிறார்கள்.

ஸைதி பிரிவைச் சார்ந்தவர்கள், மதம் மாறியவர் மரண தண்டனை நிறைவேற்றப்படுவதற்கு முன்பதாக பாவமன்னிப்புக் கோருவதற்கு சந்தர்ப்பம் அளிக்கப்பட வேண்டும் என நம்புகிறார் கள். மதம் மாறுதலானது, மதம் மாறியவர் முஸ்லிம் சமுகத்தின் மீது விடுக்கும் ஒரு போர்ப் பிரகடனமாகும். போர் நிகழாவிடினும் அதற்கான சாத்தியங்களை அது கொண்டுள்ளது என்பது அவர் களது கருத்தாகும்.

ஏனைய சட்டப்பிரிவுகளிலிருந்து சிறிது விலகி ‘இபாதி’ (கொள்கை) பிரிவினர் மதம் மாறியவர் பாவமன்னிப்புக் கோராது விடின் மரண தண்டனை வழங்க வேண்டுமென நிர்ணயம் செய்துள் ளார்கள்.

மதமாற்றம் சம்பந்தப்பட்ட இந்த விவகாரத்தில் சட்ட வல்லு னர்கள் கொண்டிருந்த தெளிவற்ற நிலை பல காரணங்களினால் உருவானது. சட்டவியலையும் தன்னுள் கொண்டுள்ளதான மத வியல் கோட்பாட்டை மாறுபட்ட நம்பிக்கைகளைக் கொண்ட மக்கள் மீது அவர்களது விசுவாசங்களைப் பொருட்படுத்தாது பிரயோகம் செய்தல்; ஒருவரின் மதமாற்றம், மதத்தின் அடிப்படை களையே மாற்றிவிடுகின்றது என்ற குழம்பிய சிந்தனை; முஸ்லிம் உம்மாவுக்கும் சமூகத்துக்கும் எதிரான ஒரு கைங்கர்யமாகவே மதமாற்றத்தைச் சித்தரித்து மதம் மாறியவரை ஓர் எதிரியாகக் கருதி நடாத்துதல் என்பன இங்கு அவதானிக்கத் தக்கன.

மானுடர் மத்தியில் காணப்படக்கூடிய வித்தியாசங்கள், வேறு பாடுகள் அனைத்தையும் குர்ஆன் அங்கீகாரம் செய்து நிற்கின்றது- மக்களது விசுவாசங்களிலான வித்தியாசங்கள் உட்பட. எவரொரு வர் நம்பிக்கை கொள்ள விரும்புகிறாரோ, அவர் நம்பிக்கை கொள் ளலாம்; எவரொருவர் நம்பிக்கை கொள்ள விரும்பவில்லையோ, அவர் நம்பிக்கை கொள்ளாது விடலாம் எனக் குர்ஆன் பிரகடனம் செய்கின்றது. அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் விசுவாசத்தின் பால் மக்களை நிர்ப்பந்தம் செய்யும் எண்ணங்களைக் கொள்வதைக் கூட மக்களுக்குத் தடை செய்தார்கள். ஏனெனில், அல்லாஹ் அன் னாருக்கு பின்வருமாறு கூறியிருக்கிறான்..... *“மேலும், உமது இரட்சகன் நாடியிருந்தால் பூமியிலுள்ள அனைவருமே முற்றிலும் விசுவாசித்திருப்பார்கள்; எனவே, மனிதர்களை அவர்கள் (அனை வருமே) விசுவாசிகளாகிவிட வேண்டுமென்று நீர் நிர்ப்பந் திக்கிறீரா?” (10:99)*

நம்பிக்கைச் சுதந்திரம் குர்ஆனில் உறுதி செய்யப்பட்டு பாதுகாக் கப்பட்டுள்ளது. இதுதான் குர்ஆனின் அணுகுமுறை. ஆக, இதுவே ஸுன்னாவின் அணுகுமுறையுமாகும். விசுவாச மாற்றத்திற்கான தண்டனை மறுமையில் தான் நியமமாகும் என்றே குர்ஆன் கூறு கிறது. அவ்வாறே ஸுன்னாவும் இது விஷயத்தில் மிகத் தெளிவா கவே உள்ளது. முஸ்லிம் உம்மாவுக்கு எதிரான பகைமையை வளர்த்தல், சமூக நலன்களுக்கு அச்சுறுத்தலாக இருத்தல் முதலாய பாதக நடவடிக்கைகளுடன் இணைந்ததாக மதமாற்றம் அமையாது விடின், இவ்வுலக வாழ்வில் அதற்கென நியமமான தண்டனை ஏதும் இல்லை என்பதே அதன் நிலைப்பாடு.

மதமாற்றத்திற்கான தண்டனை மறுமையுடன் சம்பந்தப்பட்டதாகவே அமைவதால் படைப்பாளனான ஒருவனுக்கு மாத்திரமே ஆன ஓர் உரிமையாகவே அது விளங்குகிறது. நிரந்தரமான மறுமை வாழ்வின் போது தனக்குரியனவற்றை அவனே வசூல் செய்து கொள்வான். அல்லாஹ்வே அனைத்தும் அறிந்தவன்.

## ஆறு

# மதம் மாறுதலும் குற்றம் சாட்டப்பட்ட முஸ்லிம் அறிஞர்களும்

எமது வரலாற்றின் சில காலங்களில் ஆட்சி பீடங்களில் அமர்ந் திருந்தோர் பலர், மேற்கண்ட இத்'தண்டனை'யை தமக்கு எதிரான கருத்துக்கள் கொண்டிருந்தோரை அடக்கியாள்வதற்கான ஓர் ஆயுதமாகப் பயன்படுத்தியுள்ளனர்- அதனை நியாயப் படுத்துவதற் கான ஆதாரங்கள் ஏதும் இல்லாத நிலையிலும். ஆட்சியாளர் களுக்கு எதிர்க்கருத்துத் தெரிவித்தவர்களுள் பிரசித்தம் வாய்ந்த பேரறிஞர்கள் பலரும் இருந்தனர். கொடுங்கோல் ஆட்சியாளர் களது சர்வாதிகாரப் போக்குகளைக் கட்டுப் படுத்துவதற்காய் இந்த அறிஞர்கள் அறிவுரை பகர்ந்தார்கள்; ஆலோசனைகள் வழங்கி னார்கள்; எச்சரிக்கை விடுத்தார்கள். பயனாய் விளைந்ததென்ன? எதேச்சாதிகாரிகளது அடக்குமுறை தான் மென்மேலும் மிகைத்துச் சென்றது. நபி (ஸல்) அவர்களது காலத்திலும் அவரது மரணத்தை அடுத்த சில காலங்களிலும் காணக்கிட்டியது போலவும் இறையோ னால் தெளிவுறவே அறிவுறுத்தப்பட்டதுமான பரஸ்பர ஆலோச னைகள் மேற்கொள்ளப்படுவதற்கான உத்திகளையும் செய்முறை களையும் முஸ்லிம் சமூகம் இன்னமும் ஈட்டிக் கொள்ளவில்லை. இறையச்சம் மிகுந்த சில அறிஞர்கள், பரஸ்பர கலந்தாலோசனை யால் ஆகக்கூடிய சில பணிகளைத் தம்மால் இயன்றளவு செய்ய பிரயத்தனங்கள் மேற்கொண்டனர். என்றாலும், ஆட்சியாளர்கள் அவர்களது குரல்களையும் அடக்கிவிடும் முனைவிலேயே ஈடுபட் டனர். தம்மையும் முஸ்லிம் சமூகத்தையும் ஆட்சியாளர்களையும் கூட எதேச்சாதிகாரப் பிடியிலிருந்தும் காப்பாற்றிக் கொள்ள இந்த அறிஞர்கள் எடுத்துக்கொண்ட முயற்சிகள் யாவும் வியர்த்தமாய் விட்டன.

இஸ்லாமிய வரலாறு நெடுகிலும் மார்க்க அறிஞர்கள் வலு வான ஒரு சக்தியாக, ஆட்சி பீடத்தார்க்குச் சமமான ஒரு ஸ்தா னத்தை வகிக்கக்கூடிய தகைமையினராக அரசின் பின்னணியில் செயற்படும் ஓர் உந்து சக்தியாக விளங்கி வந்தார்கள். ஆக, குர்ஆனிய சொற்பிரயோகமான 'ஊலீ- அல்- அம்ர்' (அதிகாரம் வழங்கப் பெற்றவர்கள்) என்பது ஆட்சியாளர்களையும் அறிஞர் களையும் ஒன்று சேரக் குறிப்பதாகவே அவர்கள் விளக்கம் தந்துள் ளார்கள். அரசியலையும் அதிகாரத்தையும் ஒன்றிணைத்தவர் களாய் குர்ஆனிலிருந்தும் ஸுன்னாவிலிருந்தும் தெளிவான தீர்வு களைக் கண்டு கொள்ளக் கூடியவர்களாய் பொது நன்மைகளைக் கருத்தில் கொண்டு பரஸ்பர கலந்தாலோசனைகள், ஏனைய யுக்திகள் மூலமாக சரியானவற்றையே தேர்ந்து கொள்ளும் சிந்தையராய் விளங்கி நேர்வழி சென்ற கலீபாக்களின் பின்னர் சமூகத்தின் விவகாரங்களைப் பரிபாலனம் செய்யும் பொறுப்பு ஆட்சியாளர்கள் வசம் மாத்திரம் தங்கிவிடாதவாறு அறிஞர்கள் கண்காணித்து வந்தார்கள். ஆன்மீக சிந்தையரான அறிஞர்கள் பொது வாழ்வில் பங்கேற்பதினின்றும் ஒதுக்கப்பட்டதோடு ஆட்சி யாளர்களது தனிமனிதத்துவவாத பண்புகள் தடையின்றி வளரவும் உறுதி பெறவும் தொடங்கியது.

முஸ்லிம் சமூகம் தனது வரலாற்றின் ஓட்டத்தில் எண்ணிறந்த துயரங்களுக்கு ஆளாகியுள்ளது. ஒற்றுமையீனம், முரண்பாடுகள், குர்ஆனையும் அல்லாஹ்வின் தூதர் முஹம்மது (ஸல்) அவர்களது முன்மாதிரி வாழ்க்கை நெறிகளையும் அலட்சியப்படுத்தியமை, குர்ஆனும், ஸுன்னாவும் ஒன்றையொன்று பிணைந்து நிற்கின்றமை யைக் கருத்தில் கொள்ளாது இரண்டையும் தனித்தனியே பிரித்துக் காண முனைந்தமை ஆகியன இத்துயரங்களுக்குக் காலாகி நின்ற காரணிகள். இவற்றிற்கும் மேலாக, குர்ஆனையும் ஸுன்னாவையும் இஸ்லாமிய நியாயவியலிலிருந்தும் பிரித்து வைத்தமை, இஸ்லா மியக் கோட்பாடுகளை இஸ்லாமிய சட்டக் கோவைகளிலிருந்தும் பிரித்துவிட்டமை, ஆரம்ப கால சட்ட அறிஞர்களது நியாயவிய லையும் பின்னைய கால சட்ட அறிஞர்களது நியாயவியலையும் வேறுபடுத்திக் காணத் தொடங்கியமை, நான்கு பிரதான இமாம் களின் (அபூ ஹனீபா, அஹ்மது இப்னு ஹம்பல், அல் ஷாபியி, இமாம் மாலிக்) ஆக்கங்களை, சட்டங்களை அருளியவனின் வாச கங்களுக்கு ஒப்பாக மதிக்கத் தொடங்கியமை ஆகியனவும் இக் காரணிகளின் பட்டியலில் இணைந்து கொள்கின்றன.

முஸ்லிம் சமூகம் குர்ஆனைக் கைவிட்டு குழப்பங்களுக்கும் நெறி தவறுதலுக்கும் ஆளாகியதோடு அதன் ஒற்றுமை குலைந்து போனது. மூன்றாவது கலீபாவின் காலத்தில் ஏற்பட்ட கிளர்ச்சி அவருடைய வீர மரணத்தில் முடிந்ததுடன் அது ஆரம்பித்தது. தொடர்ந்து வந்த சதித்திட்டங்கள், அரச துரோக நடவடிக்கைகள் ஆகியன ஒட்டகை யுத்தம், ஸிப்பீன் யுத்தம் ஆகியவற்றுக்குக் காரணமாக அமைந்தன. அவற்றின் பிரதியாக மதப் பிரிவுகள் நியாயவியல் பிரிவுகள் எனப் பல குழுக்கள் தோற்றம் பெற்றன. ஆட்சி பீடத்தில் அமர்ந்து கொள்ள அவாக் கொண்ட குடும்பத்த வர்கள் மத்தியிலான கிளர்ச்சிகள், போராட்டங்கள் தலை யெடுத்தன.

இன்றைய காலம் வரை பல்வேறு பிரிவினைகளுள் நாம் மூழ்கியுள்ளோம். ஸுன்னீ- ஷியா; ஸூபீ- ஸலபீ; ஸலபீ- ஸலபீயல்லாத முஸ்லிம் சமூகம்; மரபு சார்பினர்- நவீனத்தவர் என எமக்குள் நாம் பிரிந்திருக்கின்றோம். பல்வேறுபட்ட இஸ்லாமிய அரசியல் பிரிவுகளுக்கும் கட்சிகளுக்கும் மத்தியில் இடம்பெற்றுக் கொண்டிருக்கும் போராட்டங்கள் பற்றி நாம் எதுவும் சொல்லத் தேவையில்லை. இஸ்லாமிய வரலாற்றுக் காலம் முழுவதும் மத மாற்றம், அவிசுவாசம் ஆகிய குற்றச்சாட்டுகளுக்கு உள்ளாகியவர் களது பட்டியல் மிக நீண்டது மட்டுமல்ல; இன்னும் நீண்டு கொண்டு செல்கிறது. குர்ஆனின் பக்கல் நாம் மீளாத வரையில் இந்நிலைமை தொடரவே செய்யும். முஸ்லிம் சமூகத்தின் வரலாற் றையும் முஸ்லிம் அறிஞர்களது சரிதைகளையும் பதிவு செய்துள்ள நூல்களுள் நாம் சற்றே சஞ்சாரம் செய்தால் சித்திரவதைகளுக்கு ஆட்படுத்தப்பட்ட, தேசப் பிரஷ்டம் செய்யப்பட்ட, நாஸ்திகர் என்றும் மதம் மாறியோர் என்றும் குற்றம் சுமத்தப்பட்ட ஏராள மான அறிஞர்களதும் ஞானியரதும் சட்டவியலாளர்களதும் எண்ணற்ற சம்பவங்களைக் கண்டு கொள்ளலாம். அவர்கள் அனுபவிக்க வேண்டியிருந்த துயரங்களுக்கெல்லாம் உண்மையான காரணங்களோ வேறு. ஆட்சியாளர்களது கருத்துக்களுக்கும் ஆணைகளுக்கும் அவர்கள் முரண்பட்டு நின்றமை; அரச பீடத் தாரைச் சார்ந்திருந்தவர்களதும் நேர்மைத் திறம் குன்றிய கல்வி மான்களதும் அறிவுரைகளுக்கும் ஆலோசனைகளுக்கும் மாற்றான நிலைப்பாடுகளை எடுத்திருந் தமை முதலியனவே அவை. எவ்வாறாயினும் மக்கள் குர்ஆனைப் பற்றிப் பிடித்துக்கொண்டு எந்தவொரு வகையிலும் அது சொல்லியிருக்கின்றவற்றிலிருந்து

கொஞ்சமும் நழுவாமலும் அதிலிருந்து விலகிச் செல்லாமலும் இருந்தால், அவர்கள் முஸ்லிம் சமூகத்தையும் அது உறுதிப் படுத்துகின்ற மதத்தையும் பலப் படுத்துவதுடன் தொடர்ந்தும் துன்பத்திற்கும் துயரத்திற்கும் ஆளாக்கப்படுகின்ற வேதனை தரும் விதியிலிருந்தும் அதனைத் தடுத்துப் பாதுகாப்பார்கள். அல்லாஹ்வே யாவற்றையும் அறிந்தவனாவான்.

# *முடிவுரை*

இறையோனின் பிரதிநிதியாக உலகில் இயங்கும் உன்னதமான பாகத்தை மனிதன் ஈட்டிக்கொள்ள அவனுக்குக் கிடைத்துள்ள நம்பிக்கைப் பொறுப்பின் அடிப்படைச் சாரம், பூரணமான, எவ் விதக் கலப்புமற்ற தேர்வுச் சுதந்திரமாகும். *"மார்க்கத்தில் எந்த நிர்ப்பந்தமுமில்லை"(2:256); "உம்முடைய கடமையெல்லாம் தூதை எத்தி வைப்பதுதான். இன்னும், (அவர்களுடைய) கணக்கு நம்மீதுதான்" (13:40); மேலும், (நபியே) நீர் கூறுவீராக, 'உங்கள் இரட்சகனிடமிருந்து (நான் கொண்டு வந்திருக்கும்) இது (இவ்வேதம்) சத்தியமானதாகும். ஆகவே, எவர் நாடுகிறாரோ அவர் (இதை) விசுவாசித்துக் கொள்ளட்டும். இன்னும், எவர் நாடுகிறா ரோ, அவர் (இதை) நிராகரித்து விடட்டும்' (18:29)*

இருநூறுக்கும் மேற்பட்ட வாசகங்களில் தேர்வுச் சுதந்திரத்தை உறுதிப்படுத்தும் குர்ஆன், அந்த சுதந்திரத்தைப் பிரயோகப்படுத் தும் ஒருவரை, அதுவும் பிறருக்கு எவ்விதப் பாதகமும் இழைக்காமல் தமக்குத்தாம் தீங்கிழைத்துக் கொள்ளும் வகையிலாக நடந்து கொள்ளும் ஒருவரை, இவ்வாறான கடூரமான தண்டனைகளுக்கு ஆட்படுத்துவதென்பது இயலாததொரு கருமம். மதம் மாறுதலுக்கு மரண தண்டனையையே விதி செய்த முஸ்லிம் சட்டவியலாளர்கள் அத்தகு தீர்வு காண்பதற்கான காரணங்கள் வேறு இருந்தன. அவர் கள் வாழ்ந்த காலங்களில் மதமாற்றம் என்பது முஸ்லிம் சமூகத் திலிருந்தும் விலகிச் செல்வதோடு அதனோடு இணைந்த சமூக ஒழுங்குகள், சட்ட நியதிகள், கலாசாரம் என அனைத்தையும் நிரா கரித்தல் எனக் கொள்ளப் பட்டமையாகும். இதன் காரணத்தால் மதத்தில் நம்பிக்கை கொள்ளாமை என்பது முஸ்லிம் சமூகம் எதன் மீது நிறுவப்பட்டுள்ளதோ அவை அனைத்தையும் முற்றாக நிரா கரிப்பதற்கு ஒப்பானது எனக் கருதப்பட்டது.

இந்த ஆய்வு, இஸ்லாமிய பாரம்பரியத்தை முஸ்லிம்கள் தாங்களாகவே மீளாய்வு செய்வதற்கான ஒரு 'மாதிரி'யை முன் வைப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது. அதற்கு ஆய்வு மிகவும் அவசியமானது; தீவிரமான அர்ப்பணிப்பை வேண்டி நிற்பது; குர்ஆனினதும் ஸுன்னாவினதும் நோக்கங்களையும் உயர்ந்த விழுமியங்களையும் பற்றிய உண்மையான புரிந்துணர்வு வேர் விடத்

தொடங்குமாயின் அது பலமிக்க ஒரு சக்தியாகப் பரிணமிக்கும். அத்தகு சக்தி வெறித்தனமான, குருட்டுப் போக்குடனான மனிதாபிமான முனைவுகளினால் ஒருபோதும் ஏற்படப் போவதில்லை. அத்தகைய ஆய்வும் அணுகுமுறையும் முஸ்லிம்களுக்குத் தெளிவான, பயன் மிக்கதொரு விழிப்புணர்ச்சியைக் கொண்டு தரும். இஸ்லாத்தின் எதிரிகளதும் இஸ்லாத்தினை இகழ்வோரதும் உள்ளங்களில் மரியாதையையும் கௌரவத்தையும் ஈட்டித் தரும்.

# குறிப்புகள்

*1. மதம் மாறுதல் பற்றிப் பேசும் குர்ஆன், 2:217, 3:86, 3:90-91, 3:98,3:106, 3:177, 4:137, 5:54, 16:106, 22:11, 47: 32.*

*2. 2:256*

*3. ஒரு குறிப்பிடத்தக்க எடுத்துக்காட்டு 12வது நூற்றாண்டில் நிறுவப்பட்ட ஸ்பானிய தீர்ப்பாயம். இந்த ரோம கத்தோலிக்க தீர்ப்பு மன்றம் மத்திய மற்றும் மேற்கு ஐரோப்பா முழுவதும் பரந்திருந்தது. இதன் தண்டனைகள் மிகக் கொடூரமானவையாக இருந்தன. மன்னர் பெர்டினென்ட் மற்றும் இஸபெல்லா என்பவர்களினால் 1492இலும் (அல்ஹம்றா தீர்ப்பு) 1501இலும் வழங்கப்பட்ட அரச தீர்ப்புகள், யூதர்களையும் முஸ்லிம்களையும் மதம் மாறும்படியும் அல்லது ஸ்பெய்ன் நாட்டை விட்டு வெளியேறும்படியும் உத்தரவு பிறப்பித்தன.*

*4. எடுத்துக் காட்டாக, 6:107 இன்னும், 10:99*

*5. இறைத்தூதர் முஹம்மது (ஸல்) அவர்களின் காலத்தில் மதம் மாறிய ஏனையவர்களை முஸ்லிம் சமூகம் எவ்வாறு நடத்தியது என்பதற்கான குறிப்பிடத்தக்க எடுத்துக்காட்டுகளைப் பொருத்து இந்த நூலின் முழுமையான ஆங்கிலப் பதிப்பைப் பார்க்கவும்.*

*6. மதம் மாற்றம் பற்றி மேற்கோள் காட்டுகின்ற குறிப்பிடத்தக்க ஹதீஸ் அறிவிப்புகள், மற்றும் பலவீனமான ஹதீஸ்கள் பற்றிய எடுத்துக்காட்டல்களுக்கு தயவுசெய்து முழுமையான ஆய்வைப் பார்க்கவும்.*

இஸ்லாமிய நம்பிக்கைக் கோட்பாட்டினதும்
சட்டத்தினதும் நோக்கில்

# மத மாற்றத் தண்டனை

பேராசிரியர்அப்துல் ஹமீத் அபூ ஸுலைமான்

தமிழில்:
அஷ்ஷெய்க் றாஷித் யஹ்யா (நளீமி)

செம்மையாக்கம்:
கலாநிதி பீ. எம். எம். இர்பான்

# இஸ்லாமிய நம்பிக்கைக் கோட்பாட்டினதும் சட்டத்தினதும் நோக்கில்

# மத மாற்றத் தண்டனை

சட்ட நியாயவியல் ரீதியில் குற்றங்கள் என அழைக்கப்படும் செயற்பாடுகளுக்கான உலகியல் தண்டனைகளைப் பற்றி அல் குர்ஆன் குறிப்பிட்டுள்ளமை அனைவரது கவனத்தையும் ஈர்க்கக் கூடிய ஒன்று. பழிவாங்குதல் தண்டனை தொடக்கம் திருட்டுக் குற்றம், விபச்சாரம், வழிப்பறிக் கொள்ளை, பூமியில் குழப்பம் விளைவித்தல் போன்றவற்றுக்கான தண்டனைகள் என அதன் பட்டியல் நீள்கிறது. இருந்த போதிலும் மார்க்கத்தின் மிக அடிப்படை அம்சமான நம்பிக்கைக் கோட்பாட்டுடன் தொடர்புபட்ட 'மதம் மாறுதல்' என்ற விடயம் தொடர்பான உலகியல் தண்டனை பற்றி அல்குர்ஆனில் எந்த விதத்திலும் குறிப்பிடப்படவில்லை. மதம் மாறுதல் பற்றியும் இஸ்லாத்தினுள் நுழைவதாகப் பகிரங்கமாக அறிவித்து பின்னர் முஸ்லிம்களுக்கு மத்தியில் சந்தேகத்தையும் பிரச்சினைகளையும் மூட்டிவிடும் நோக்கில் இஸ்லாத்தை விட்டு வெளியேறிய சூழ்ச்சிக்காரர்கள் பற்றியும் குறிப் பிடுகின்ற சந்தர்ப்பங்களில் கூட அல்குர்ஆன் அதற்கான உலகியல் தண்டனை பற்றி எதுவும் குறிப்பிடவில்லை. *"வேதத்தையுடையோரில் ஒரு சாரார் (தம் இனத்தாரிடம்): 'ஈமான் கொண்டோர் மீது இறக்கப் பட்ட (வேதத்)தைக் காலையில் நம்பி, மாலையில் நிராகரித்து விடுங் கள்; இதனால் (ஈமான் கொண்டுள்ள) அவர்களும் ஒரு வேளை (அதை விட்டுத்) திரும்பி விடக்கூடும்' என்று கூறுகின்றனர்." (3:72).* இத்தகைய படுபயங்கரமான சதிகள் நடந்த சந்தர்ப்பத்தில் கூட அல்குர்ஆன் ஒரு வசனத்திலேனும் அதற்கான உலகியல் ரீதியான தண்டனையைப் பற்றியோ இஸ்லாத்தினுள் நுழைவது, அதை விட்டும் வெளியேறுவது பற்றியோ எதனையும் குறிப்பிடவில்லை.

இந்த விடயத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்தும் மறுமையில் அதற்குக் கிடைக்க இருக்கின்ற தண்டனை பற்றியதேயாகும். சூழ்ச்சிக் காரர்களுக்குரிய தண்டனையைப் பொறுத்தவரை ஓர் அரசின் தலைவர் என்ற வகையில் நபியவர்கள் அதனைப்பற்றிக் குறிப்பிட்டுள்ளார்கள்.

ஏனெனில் இங்கு மதம் மாறுவதென்பது நம்பிக்கை கொள்வதோடும் நிராகரிப்பதோடும் தொடர்பான ஒரு விடயமன்று; மாறாக முஃமின்களின் அணிகளுக்கு மத்தியிலே குழப்பத்தை ஏற்படுத்திவிடும் நோக்கில் மேற்கொள்ளப்படும் சதிமுயற்சியாகவே அது அமைந்து விடுகிறது.(பார்க்க- 2:217,256, 3:85-91, 3:100,117, 5:54,4:137, 16:106-110)

மாத்திரமன்றி, அல்குர்ஆன் அகீதா விடயத்தில் இதற்கு மாற்றமான முறையில் பேசியிருப்பதைக் காண்கின்றோம். இதற்கும் மேலாக, ஒருவர் தனக்கு விருப்பமான நம்பிக்கைக் கோட்பாட்டைத் தெரிவு செய்வதற்குள்ள உரிமையைப் பற்றி அல்குர்ஆன் பல இடங்களில் பல வசனங்களில் பேசி, அது விடயத்தில் எதுவித வற்புறுத்தல்களும் இடம் பெறக்கூடாதெனவும் வலியுறுத்தியுள்ளது. நபியவர்களின் நடைமுறையும் இந்த உண்மையைத் தெட்டத்தெளிவாக உணர்த்துவதைக் காணலாம்.

மதீனாவிலிருந்த யூதர்கள் நபியவர்களையும் இஸ்லாமிய தேசத்தையும் எதிர்த்துப் போரிட்ட போதும் -நபியவர்களும் இஸ்லாமிய தேசமும் அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதற்கு ஆற்றல் பெற்றிருந்த போதும்- நபியவர்களோ இஸ்லாமிய தேசமோ அவர்களை இஸ்லாத்தில் நுழையுமாறு நிர்ப்பந்தித்ததாக எம்மால் காண முடியாதுள்ளது. அவர்கள் மாத்திரமல்ல; அரபுத் தீபகற்பத்தில் வாழ்ந்த அவர்களல்லாத கிறிஸ்தவர்கள் கூட அவ்வாறு நிர்ப்பந்திக்கப்படவில்லை. மாற்றமாக, நபிகளார் நஜ்ரான் பிரதேச கிறிஸ்தவர்களை அழைத்து தனது பள்ளிவாயலிலே வைத்து அவர்களோடு அழகிய முறையில் உரையாடுவதை நாம் காண்கின்றோம். அவர்களுக்கோ அவர்களது அடிப்படை நம்பிக்கைகளுக்கோ முரண்படும் வகையில் எதுவித அடக்குமுறையையோ நிர்ப்பந்த நிலையையோ அவர்கள் மீது நபியவர்கள் திணிக்கவில்லை. மாறாக நபியவர்கள் அல்லாஹ்வினதும் தனதும் முஸ்லிம் தேசத்தினதும் உடன்படிக்கைக்குள்ளும் பாதுகாப்புக்குள்ளும் அவர்களை உள்வாங்கிக்கொண்டார்கள். அவ்வாறே மடாலயங்களிலே இருக்கின்ற துறவிகளுக்கு எவ்வித கஷ்டத்தையும் ஏற்படுத்த வேண்டாம் என்றும், எகிப்திலே வாழக்கூடிய கிப்தி இனத்தவர்களோடு நல்ல முறையில் நடந்து கொள்ளும் படியும் முஸ்லிம்களுக்கு அன்னார் உபதேசித்தார்கள்.

நபியவர்கள் அத்தோடு மாத்திரம் நின்றுவிடவில்லை. பாரசீக நாகரிகத்தைச் சேர்ந்த நெருப்பு வணங்கிகளான மஜூஸிகள் விடயத்திலும் மதச்சுதந்திரம், நம்பிக்கைச் சுதந்திரம் ஆகிய விடயங்களில்

வேதக்காரர்களான யூத, கிறிஸ்தவர்களோடு நடந்து கொள்கின்ற முறையையே பின்பற்ற வேண்டும் என அவர்கள் முஸ்லிம்களுக்கு உபதேசித்துள்ளதைக் காண்கிறோம். இத்தனைக்கும் அந்த மஜூஸிகள் தௌராத்தையோ இன்ஜீலையோ பின்பற்றக் கூடியவர்களாக இருக்கவில்லை. இது விடயத்தில் நபியவர்கள் இவ்வாறு கூறினார்கள்: "மஜூஸிகள் விடயத்தில், அவர்களது பெண்களைத் திருமணம் முடித்தல், அவர்கள் அறுத்தவற்றைச் சாப்பிடுதல் என்ற இரண்டையும் தவிர்த்து ஏனைய விடயங்களில் கிறிஸ்தவர்களோடு நடந்து கொள்கின்றதைப் போன்று நடந்து கொள்ளுங்கள்" [1]. ஏனெனில் 'அஹ்லுல் கிதாப்' என்ற வாசகம் குறிக்கின்ற முழுமொத்த கருத்தினை வைத்துப் பார்க்கின்ற போது 'நாகரிகம் ஒன்றுக்குச் சொந்தக்காரர்கள்' என்ற கருத்தில் அவர்களும் (மஜூஸிகள்)'அஹ்லுல் கிதாப்' என்ற வகைக்குள் வந்துவிடுகின்றனர். சிலவேளை இந்த மஜூஸிய நாகரிகமும் அதுவல்லாத ஏனைய நாகரிகங்களும்கூட முன்னைய வரலாற்றுக் கால கட்டங்களில் தோன்றிப் பின்னர் திரிபுகளுக்கும் மாற்றங்களுக்கும் உட்படுத்தப்பட்ட இறை வேதங்களின் எச்ச சொச்சங்களாகக்கூட இருக்கலாம். அல்லாஹ் தனது தூதர்கள் பற்றியும் வேதங்கள் பற்றியும் அவற்றினடியாகத் தோன்றிய நாகரிகங்கள் பற்றியும் அல்குர்ஆனில் கூறியுள்ளான். *"இவர்களைப் போன்றே (வேறு) தூதர்கள் சிலரையும் (நாம் அனுப்பி) அவர் களுடைய சரித்திரங்களையும் உமக்கு நாம் முன்னர் கூறியுள்ளோம். இன்னும் (வேறு) தூதர்கள் (பலரையும் நாம் அனுப்பினோம். ஆனால்) அவர்களின் சரித்திரங்களை உமக்குக் கூறவில்லை".(4:164)*

சிலவேளை கடந்த காலங்களில் இந்து மற்றும் அதுவல்லாத தெற்காசிய மதங்களான பௌத்தம், கன்பூசியனிஸம் என்பவற்றைப் பின்பற்றுவோருக்கு மத்தியில் -அந்நாடுகளின் பெரும்பாலான பகுதிகள் முஸ்லிம்களின் ஆட்சிக்குள் இருந்த போதிலும்- இஸ்லாமிய அழைப்புப் பணியின் தாக்க வீச்சு வரையறுக்கப்பட்டதாகக் காணப்பட்டமைக்கான காரணமாக நாம் ஒன்றைக் கூற முடியும். அத்தகையவர்கள் பாமரத்தனமான அல்லது நாட்டுப்புற சிலை வணங்கிகள் என்ற கோணத்தில் நோக்கப்பட்டு அரபு இணைவைப்பாளர்களின் மத்தியில் காணப்பட்ட நாட்டுப்புற சிலை வணங்கிகளோடு நடந்து கொண்ட முறையை ஒத்ததாக இவர்களோடும் முஸ்லிம்கள் நடந்து கொண்டமை அதற்குக் காரணமாகியிருக்கலாம். அரபு இணைவைப்பாளர்களின் விடயத்தில் இஸ்லாமும் இஸ்லாமிய அரசும் கொண்டிருந்த விதிவிலக்கான, வரலாற்று முக்கியத்துவம்

கொண்ட நிலைப்பாட்டிற்கான உண்மையான காரணம் அல்லது நியாயம் சரிவர விளங்கிக் கொள்ளப்படாமை இத்தகைய அணுகு முறைக்குக் காரணமாகலாம். உண்மையில், இஸ்லாமிய சட்ட வசனங்களில் குறிப்பிடப்பட்டோர் தவிர்ந்த ஏனைய நாகரிகங்களின் சொந்தக்காரர்களின் விடயத்திலும் இதே அணுகுமுறை கையாளப் படாமல் இருந்திருக்க வேண்டும். குறிப்பாக இந்தியாவை முகலாயர் கள் ஆண்ட முறைமை இங்கு கவனத்திற்குரியது. அங்கிருந்த அதிக மான மக்கள், முஸ்லிம்களுடனான நெருங்கிய ஆளிடைத் தொடர்பின் மையாலும், அவர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் இஸ்லாமிய அழைப் புப் பணிக்கும் இடையில் பரஸ்பர மரியாதை இல்லாதிருந்தமை யாலும் வரலாறு நெடுகிலும் அவர்கள் தங்களது வரலாற்று ரீதியான மௌட்டீக மதங்களிலேயே தங்கி விட்டனர். விளைவாக, அவர் களில் பெரும்பான்மையானோர் மானசீக ரீதியாகவும் சமூக ரீதியாக வும் முஸ்லிம்களை விட்டும் இஸ்லாமிய அழைப்பாளர்களை விட் டும் ஒரு வகையில் அந்நியப்பட்டவர்களாகவே காணப்பட்டனர். மறுபுறம், இஸ்லாத்தில் நுழைந்த முகலாய ஆட்சியாளர்கள் இப் பிரதேசங்களையும் வேறு முஸ்லிம் பிரதேசங்களையும் கைப்பற்றி அரங்கேற்றிய அநியாயங்களுக்கும் அம்மக்கள் உட்பட்டிருந்தனர்.

இஸ்லாத்தினதும் குர்ஆனினதும் ஒளியில் 'மதம் மாறுதல்' என்ற விடயத்தில் முழுமைத்துவப் பார்வையொன்றை செலுத்துவோ மாயின், மதச்சுதந்திரம் அல்லது இஸ்லாத்தையோ வேறொரு நம்பிக்கையையோ விரும்பி ஏற்றுக் கொள்ளும் சுதந்திரம் என்பதற்கும் வெறுமனே மதம் மாறுதல் அல்லது அல்குர்ஆனில் குறிப்பிடப்பட் டுள்ள 'சூழ்ச்சியாக மதம் மாறுதல்' என்பதற்கும் இடையில் எவ்விதத் தொடர்பும் இல்லை என்பது தெளிவாகும். அந்தவகையில், அல்குர் ஆனில் குறிப் பிடப்பட்டுள்ள 'சூழ்ச்சியாக மதம் மாறுதல்' என்ற குற்றத்துக்கும், கீழ்வரும் வசனங்களில்அது மனிதனுக்கு வழங்கியுள்ள நம்பிக்கைச் சுதந்திரத்துக்கும் இடையில்தொடர்போ முரண்பாடோ இல்லை: *"மார்க்கத்தில் நிர்ப்பந்தமில்லை"* (2:256) *"மேலும், உம் இறைவன் நாடியிருந்தால், பூமியிலுள்ள யாவருமே ஈமான் கொண்டிருப்பார்கள். எனவே, மனிதர்கள் யாவரும் முஃமின்களாக (நம்பிக்கை கொண்டோராக) ஆகிவிட வேண்டுமென்று அவர்களை நீர் கட்டாயப் படுத்த முடியுமா?"*(10: 99) *"(நபியே!) அவர்களை நேர்வழியில் நடத்துவது உம் கடமையல்ல; தான் நாடியவர்களை அல்லாஹ் நேர்வழியில் செலுத்துகின்றான்"* (2:272) (பார்க்க– 16:125, 47:32–35, 23:107, 13:40, 6:107)

ஏனெனில் 'சூழ்ச்சியாக மதம் மாறுதல்' என்பது முஸ்லிம் சமூகத்துள் பிரச்சினையை ஏற்படுத்தும் நோக்கம் கொண்ட சதி அரசியலோடு தொடர்புபட்ட விவகாரமாகும். நம்பிக்கைக் கோட்பாட்டை விட்டு வெளியேறுவதோடு தொடர்புபட்ட குற்றமாக அது ஒரு போதும் நோக்கப்பட மாட்டாது.

எமது அபிப்பிராயத்தில், 'ரித்தத்' எனப்படும் மதம் மாறுதல் மற்றும் அது தொடர்பாக இஸ்லாமிய நியாயவியல் அறிஞர்கள் கூறிச் சென்றுள்ள தண்டனை பற்றிய குழப்பத்துக்கான காரணமாக இருப்பது, அக்கால அரபிகளுக்கு மத்தியில் காணப்பட்ட இணைவைப்பாளர்கள் பற்றியும், 'இஸ்லாத்தில் நுழைதல் அல்லது போரிடுதல்'[2] என்ற இரு தெரிவுகளில் ஒன்றுக்குள்அவர்களை உட்படுத்துவதற்காக அவர்கள் மீது போர்ப் பிரகடனம் செய்வது பற்றியும் அல்குர்ஆனும் தூதரும் கொண்டிருந்த நிலைப்பாடு குறித்த சரியான புரிதலின்மையே. மட்டுமன்றி, ரித்தத்துடன் தொடர்புபட்ட சட்ட வசனமாகவும், சில சந்தர்ப்பங்களில் சில 'முர்தத்'களை நம்பிக்கை ரீதியாகக் கட்டுப்படுத்துவதை அனுமதிக்கும் ஒன்றாகவும் அது நோக்கப்பட்டதும் இக்குழப்ப நிலைக்கு காரணமாக அமைந்துள்ளது.

அரேபிய இணைவைப்பாளர்களை நபியவர்கள் கையாண்ட விதமும் அதனோடு தொடர்புபட்ட குர்ஆனிய வசனங்களும் (ஆயதுஸ் ஸைப்) நம்பிக்கைச் சுதந்திரம் மற்றும் முஸ்லிமல்லாதவர்களோடு சகிப்புத்தன்மையுடன் நடத்தல் என்பவற்றோடு தொடர்புபட்ட குர்ஆனிய வசனங்களை மாற்றி('நஸ்க்' செய்து) விட்டதாக அதிகமான அறிஞர்கள் கருதினர். இவ்வாறு 'நஸ்க்' என்ற கருத்தாக்கத்தை அளவுக்கதிகமாகப் பயன்படுத்தி சட்ட வசனங்களுக்கிடையில் காணப்படும் முரண்பாடுகள் என அவர்கள் நினைத்துக் கொண்ட அனைத்துக்குமான மேலோட்டமான தீர்வுக்கு அவர்கள் வந்தனர். ஒவ்வொரு குர்ஆனிய வசனமும் ஒன்றுக்கொன்று வேறுபட்ட வித்தியாசமான நிலைமைகளுடனும் சூழலுடனும் தொடர்புபட்டது என்பதைக் கவனிக்க அவர்கள் இங்கு தவறி விட்டனர். உண்மையில், அல்குர்ஆனில் 'நஸ்க்' தொடர்பாக வந்துள்ள சில சமிக்ஞைகளானவை குறிப்பிட்ட சில சமுதாயங்களிலும் மானிட வளர்ச்சிக் கட்டங்களிலும் அருளப்பட்டு பின்னர் திரிபுக்குட்பட்டு காலாவதியான முன்னைய ஷரீஅத் சட்டங்களை ரத்துச் செய்யும்வகையில் இறக்கப்பட்ட இஸ்லாமியத் தூதுடன் தொடர்புபட்டவை. அந்த இஸ்லாமியத் தூது இடத்தாலும் காலத்தாலும் மனித இனம் கண்டு வருகின்ற மாற்றங்

களுக்கேற்ப வழிகாட்டும் இறுதியான சர்வதேச மானிடத் தூது. *"மேலும் (நபியே! முற்றிலும்) உண்மையைக் கொண்டுள்ள இவ் வேதத்தை நாம் உம்மீது இறக்கியுள்ளோம், இது தனக்கு முன்னிருந்த (ஒவ்வொரு) வேதத்தையும் மெய்ப்படுத்தக் கூடியதாகவும் அதை மிகைக்கக் கூடியதாகவும் இருக்கின்றது". (5:48)*

இஸ்லாம் என்பது – முதல் நிலையில் – ஒவ்வொரு மனிதனுக்கு மான அழைப்பும் நேர்வழியுமாகும். கடந்து போன மற்றும் இனிவர இருக்கின்ற அனைத்துக் கால கட்டத்திலும் வாழக் கூடிய மனிதர்களுக் கான அழைப்பு அது. இதனால்தான் அதன் உரையாடல் பிராந்திய ரீதியாகவோ குறிப்பிட்ட சில மனிதர்களை நோக்கியதாகவோ இல்லாது சர்வதேசத் தன்மை கொண்டதாக அமைந்தது. அது குறிப் பிட்டதொரு நிறத்தையோ மொழியையோ நோக்கிப் பேசவில்லை; அல்லது குறிப்பிட்டதோர் இனத்தையோ சமூகத் தரப்பையோ நோக் கிப் பேசவுமில்லை. மாறாக நேரடியாக மனிதன் என்ற நோக்கில் அவனது அனைத்து நிலைமைகளையும் நோக்கிப் பேசியது; நாகரிக ரீதியாகவும் மானிட ரீதியாகவும் அவனுக்கு இருக்கின்ற தகுதியையும் பொறுப்பையும் நோக்கிப் பேசியது. இதனால்தான், அரேபிய சிலை வணங்கிகளதும் இஸ்லாத்துக்கு முன்னைய அவர்களது 'ஜாஹிலிய்ய' நாடோடிக் கோத்திரங்களதும் நிலைமைகள் ஆய்வாளர்களால் தனியாக நோக்கப்பட வேண்டும். அவர்களது நிலைமைக்கும் அவர்களைச் சூழ நாகரிகமடைந்து காணப்பட்ட வேதக்காரர்களின் நிலைமைக்கும் இடையில் நிறையவே வித்தியாசம் இருந்தது என்பதும் கவனத்தில் கொள்ளப்பட வேண்டும். இந்த ஜாஹிலிய்ய நாட்டுப்புறக் கோத் திரங்களின் விவகாரம் மதத்தோடும் நம்பிக்கையோடும் தொடர்பான விடயமொன்றல்லாது நாகரிக வறுமை அல்லது மானிட வறுமை யோடு தொடர்பான ஒன்றாகவும், மானிட, சமூக, நாகரிகம் சார்ந்த தகுதியின்மை பற்றிய விவகாரமாகவுமே நோக்கப்பட வேண்டும். இதனைத்தான் பின்வரும் வசனங்கள் உணர்த்துகின்றன:

*" 'நாங்களும் ஈமான் கொண்டோம்' என்று (நபியே! உம்மிடம்) நாட்டுப் புறத்து அரபிகள் கூறுகிறார்கள். நீங்கள் ஈமான் கொள்ளவில்லை. எனினும், 'நாங்கள் வழிப்பட்டோம்' (இஸ்லாத் தைத் தழுவினோம்) என்று (வேண்டுமானால்) கூறுங்கள்; ஏனெனில் உங்களுடைய இதயங்களில் (உண்மையான) ஈமான் இன்னும் நுழையவில்லை(என நபியே! அவர்களிடம்) கூறுவீராக!"(49:14)*

*"நாட்டுப்புற அரபிகள் குஃப்ரிலும் (நிராகரிப்பிலும்) நயவஞ் சகத்திலும் மிகவும் கொடியவர்கள். அல்லாஹ் தன்னுடைய தூதர் மீது அருளியிருக்கும் வேதத்தின் வரம்புகளை அறியாதிருக்கவே அவர்கள் தகுதியானவர்கள். இன்னும் அல்லாஹ் (எல்லாம்) அறிந்தவனாகவும், ஞானமுடையவனாகவும் இருக்கின்றான். கிராமப்புறத்தவர்களில் தாம் (தர்மத்திற்காகச்) செலவு செய்வதை நஷ்டமாகக் கருதுபவர்களும் இருக்கிறார்கள்; நீங்கள் (காலச் சுழலில் சிக்கித்) துன்பம் அடைய வேண்டுமென்றும் எதிர்பார்க்கிறார்கள் – ஆனால் அவர்கள் மீதுதான் கெட்டகாலம் சுழன்று கொண்டு இருக்கிறது – இன்னும், அல்லாஹ் (எல்லாவற்றையும்) கேட்பவனாகவும்(யாவற்றையும்) நன்கு அறிபவ னாகவும் இருக்கின்றான். கிராமப்புறத்தவர்களில் அல்லாஹ்வின் மீதும், இறுதிநாள் மீதும் நம்பிக்கை கொள்பவர்களும் இருக்கின் றார்கள், தாம் (தர்மத்திற்காகச்) செலவு செய்வது தங்களுக்கு அல்லாஹ் வின் நெருக்கத்தையும், இறை தூதரின் பிரார்த்தனையும் (தங்களுக் குப்) பெற்றுத்தரும் என நம்புகிறார்கள், நிச்சயமாக அது அவர்களை (அல்லாஹ்வின்) அண்மையில் கொண்டு சேர்ப்பதுதான், அதி சீக்கிரத்தில் அல்லாஹ் அவர்களைத் தன் ரஹ்மத்தில் (பேரருளில்) புகுத்து வான் – நிச்சயமாக அல்லாஹ் மன்னிப்பவனாகவும் பெரும் கிருபையாளனாகவும் இருக்கின்றான்".(9:97–99)*

*"அவர்கள்அறிவில்லாதவர்களைப் போன்று, உண்மைக்கு மாறாக அல்லாஹ்வைப் பற்றி சந்தேகம் கொள்ளலாயினர்..." (3: 154)*

*"மௌட்டீக காலத்து தீர்ப்பையா அவர்கள் விரும்புகிறார்கள்? உறுதியான நம்பிக்கையுள்ள மக்களுக்கு அல்லாஹ்வைவிட தீர்ப்பு வழங்குவதில் அழகானவன் யார்?" (5:50)*

*"(காஃபிராக) நிராகரித்துக் கொண்டிருந்தவர்கள் தங்கள் உள்ளங் களில் வைராக்கியத்தை –மௌட்டீக வைராக்கியத்தை– உண்டாக்கிக் கொண்ட சமயத்தை (நினைத்துப் பாரும்..)" (48:26)*

*"(நபியின் மனைவிகளே!) நீங்கள் உங்கள் வீடுகளிலேயே தங்கி யிருங்கள். முன்னர் அஞ்ஞான காலத்தில் (பெண்கள்) திரிந்து கொண்டிருந்ததைப் போல் நீங்கள் திரியாதீர்கள் ..." (33:33)*

எனவே நாகரிக முதிர்ச்சியற்ற நாட்டுப்புற அரபிகளை நோக்கிய அல்குர்ஆனின் உரையாடலை, நுபுவ்வத்தின் தலைமைப் பீடத்தில் கற்ற அல்குர்ஆனிய மாணவர்களை நோக்கிய அதன் உரையாடலுடன் அல்லது யூதர்கள், கிறிஸ்தவர்கள், மஜூஸிகள் போன்ற நாகரிகங்

களதும் வேதங்களதும் சொந்தக்காரர்களை நோக்கிய உரையாடலுடன் ஒன்றாகச் சேர்த்து நாம் குழப்பிக் கொள்ளக் கூடாது.

இந்த முழுமொத்தப் பார்வைக்கூடாக நாம் அல்குர்ஆனிய வசனங்களை உற்று நோக்கினால், ஸூறதுல் அன்பாலிலும் ஸூறா பராஅத்திலும் குறிப்பிடப்பட்டுள்ள அந்த நாட்டுப்புற சிலைவணங்கிகளான அரபிகள் விடயத்தில் அல்குர்ஆன் கொண்டிருந்த நிலைப்பாட்டையும் நபியவர்கள் கைக்கொண்ட அரசியலையும் மிகத்தெளிவாகப் புரிந்து கொள்ளலாம். அவ்விரு ஸூறாக்களும் நாட்டுப்புறத்து ஜாஹிலிய்ய சிந்தனை கொண்ட அக்கோத்திரங்களின் அறியாமையையும் அக்காலத்தில் அவர்களிடம் காணப்பட்ட நாகரிக வெறுமையையும் விளக்குகின்றன; எவ்வாறு அவர்கள் அறிவீனர்களாக, ஏனைய கோத்திரங்களுடனான உடன்படிக்கைகளைப் பேணாதவர்களாக, எதுவித பாதுகாப்பும் அற்றவர்களாக, கடப்பாடுகளை மதிக்காதவர்களாக காணப்பட்டார்கள் என்பதையும் விளக்குகின்றன. இவையனைத்தும் அவர்களை தனிமைச் சிறையில் தள்ளி விட்டிருந்தன. அவர்களோடு யாரும் சேர்ந்து வாழவில்லை. அவர்கள் மீது எவரும் நம்பிக்கை வைக்கவில்லை. நரிகளைப் போல, ஓநாய்களைப் போல அவர்கள் அலைந்து திரிந்தார்கள். இதனால்தான் அவர்களை நாகரிக மயப்பட்ட சமூக அமைப்பொன்றினுள் நுழையச்செய்து தகவமைப்பதென்பது மிக அவசியமான, விதிவிலக்கான, மனிதாபிமானம் சார்ந்த பணியாக இருந்தது. நாகரிக ரீதியில் அவர்கள் கொண்டிருந்த வெறுமையிலிருந்து வெளியேற்றி, சமூக மயப்படுத்தி, நாகரிகத்தைச் சுமக்கக் கூடிய ஆற்றலுள்ளவர்களாக அவர்களை மாற்றுவதோடு அப்பணி ஆரம்பிக்கின்றது.

இந்த சமூகமயப்படுத்தல் செயற்பாட்டின் முன்னுரிமைப் பட்டியலில் மிக முக்கிய விடயங்கள் இரண்டாகும். கூட்டுத் தொழுகைக் கூடாக சமூகமயப்படுத்துவது ஒன்று; ஸகாத் என்ற கூட்டுறவுச் செயற்பாட்டுக்கூடாக சமூகமயப்படுத்துவது இன்னொன்று. அவர்கள் கூட்டுத் தொழுகையை சரியாக நிறைவேற்றி ஸகாத்தையும் உரிய முறையில் கொடுத்து வரும் காலமெல்லாம் அவர்களுடன் யாரும் முரண் படப் போவதில்லை. அந்த வகையில்தான், எதிர்த்துப் போரிடுவோரிடம் மாத்திரம் 'இஸ்லாத்தை ஏற்றுக் கொள்கிறீர்களா இல்லையா?' என வினவப்பட்டது. பெண்களிடமும் அது கேட்கப்படவில்லை. மக்கா வெற்றி கொள்ளப்பட்டு அரபுத் தீபகற்பத்திலே நாட்டுப்புற அரபுக் கோத்திரங்களுக்கு மத்தியில் இஸ்லாமிய சமூக

ஒழுங்கு நிலை கொண்டதன் பின்னால் கூட 'மனித மன இயல்பை கருத்திற் கொண்டு' இஸ்லாத்துள் நுழைவது பற்றிய தீர்மானமெடுப் பதற்கு நபியவர்கள் சில குறைஷிகளுக்கு கால அவகாசம் வழங்கிய தைக் காண்கிறோம். ஏனெனில் அதன் பிறகு அத்தகைய தனிநபர் களுக்கு அவகாசமளிப்பது சமூக ஒழுங்குக்கும் அதன் இருப்புக்கும் அச்சுறுத்தலாக அமையவில்லை. குறிப்பாக மக்காவில் வாழ்ந்த குறைஷித் தலைவர்கள் உடன்படிக்கைகளை மீறி முஸ்லிம்கள் மீது அத்துமீறிய ஒரே காரணத்திற்காகத்தான் மக்கா வெற்றி கொள்ளப்பட்டு இஸ்லாத்தின் ஆளுகைக்குள் வந்திருந்தது என்றிருந்த சந்தர்ப்பத்தில் அங்கு வாழ்ந்த சிலருக்கு நபியவர்கள் அந்த அவகாசத்தை அளித் தார்கள்.

நாட்டுப்புற அரபுக் கோத்திரங்களின் விடயத்தில் இறக்கப்பட்ட, *"'நாங்களும் ஈமான் கொண்டோம்' என்று (நபியே! உம்மிடம்) நாட்டுப் புறத்து அரபிகள் கூறுகிறார்கள். நீங்கள் ஈமான் கொள்ள வில்லை. எனினும், 'நாங்கள் வழிப்பட்டோம்' (இஸ்லாத்தைத் தழுவினோம்) என்று (வேண்டுமானால்) கூறுங்கள்; ஏனெனில் உங்களுடைய இதயங்களில் (உண்மையான) ஈமான் இன்னும் நுழைய வில்லை (என நபியே! அவர்களிடம்) கூறுவீராக!"* என்ற வசனத்தின் விளக்கத்தை தீட்சண்யமும் தூ ரநோக்கும் கொண்ட கலீபாவான அபூ பக்ர் (ரழி)அவர்கள் தெளிவாகப் புரிந்து வைத்திருந்ததும் இவ் வகையில்தான். எனவேதான், சில நாட்டுப்புற அரபுக் கோத்திரங்கள் கட்டுக்கோப்பானதொரு சமூக ஒழுங்குக்கு கட்டுப்பட மறுத்து கிளர்ச்சிசெய்த போது, மேற்குறித்த வசனம் சொல்ல வருகின்ற சமூக வியல் கருத்துக்களை அவர் அவ்வாறே உள்வாங்கிச் செயற்பட்டமை யைக் காண்கிறோம். அந்தக் கிளர்ச்சியானது நபியவர்களின் இறுதிக் காலங்களில் போலி நபித்துவப் பிரச்சாரங்களை மேற்கொண்ட சில விஷமிகளால் கட்டவிழ்த்து விடப்பட்டிருந்தது. கலீபா அபூபக்ர் (ரழி) அவர்கள் இராச்சியத்தின் தலைமைத்துவத்தை ஏற்ற போது அந்த நாட்டுப்புற அரபிகளுடன் போராடி அவர்களை இந்த இஸ்லா மிய சமூக ஒழுங்குக்குக் கட்டுப்பட வைத்தே ஆக வேண்டும் என்பதில் உறுதியாக இருந்தார்கள். நபியவர்களின் நோக்கத்தையும் அல்குர் ஆனிய வசனங்களின் உள்ளடக்கக் கருத்தினையும் மிகச் சரியாக விளங்கிக் கொண்டமையே அவர்களை இம் முடிவுக்கு வர வைத்தது. நாட்டுப்புற அரபுக் கோத்திரங்களின் கிளர்ச்சியும் ஸகாத் மறுப்பும் அவற்றுக்கூடாக கூட்டுறவின் அடிப்படையிலமைந்த இஸ்லாமிய சமூகக் கட்டமைப்புக்கு எதிராகச் செயற்பட்டமையும் அதற்கு

கட்டுப்பட மறுத்தமையும் அகீதாவுடனோ நம்பிக்கையுடனோ தொடர்பான விடயமல்ல என்ற புரிதல் அபூபக்ர் (ரழி) அவர்களிடம் இருந்தது. அந்த அரபுக் கோத்திரங்கள் நாகரிகம் என்ற ஆடையை அணிந்த பின்னர் தூய இஸ்லாமிய அகீதா அவர்களது உள்ளங்களில் இயல்பாகவே ஒட்டிக் கொள்ளும் என்பதை அவர்கள் விளங்கி யிருந்தார்கள்.

இஸ்லாத்தின் நாகரிக மயப்பட்ட அகீதா சிந்தனையானது நாட் டரபிகளின் பண்பாடற்ற நாட்டுப்புற சிலை வணக்கத்தோடு தொடர்பு பட்ட அகீதாவுடன் ஒப்பிட்டுப் பார்க்க முடியாததாகும். உண்மையில் இந்த விடயம் நாகரிக ஒழுங்கமைப்போடும் நாகரிக முதிர்ச்சியின்மை யோடும் தொடர்புபட்டதாகும். அந்த நேரத்தில் உமர் (ரழி) போன்ற சில ஸஹாபாக்கள் கூட இந்த விடயத்தில் தெளிவற்றுக் குழம்பிப் போயிருந்ததைக் காண்கிறோம். நபியவர்களது திடீர் இழப்பும் அது தந்த வலிகளும் ஒருபுறம் அவர்களது உள்ளங்களை நிரப்பியிருந்தன; மறுபுறம் ஏக நேரத்தில் பல்வேறுபட்ட அபாயகர நிலைமைகள் இஸ்லாமிய தேசத்தை நோக்கி வந்தன. வளர்ந்து வரும் இஸ்லாமிய சாம்ராஜ்யத்துக்கு ரோமானிய, பாரசீக சாம்ராஜ்ய சக்திகள் அச் சுறுத்தல் விடுத்துக் கொண்டிருந்தன. இந்த இக்கட்டான நிலைமை களுக்குள் அந்த நாட்டுப்புற அரபுக் கோத்திரங்கள் ஸகாத் கொடுக்க மறுத்ததனூடாக அமைதியான சமூகக் கட்டமைப்பினுள் தொடர்ந் திருப்பதற்கு மறுத்ததோடு தமது முன்னைய முதிர்ச்சியற்ற நிலைக்கே திரும்பிச் செல்ல எத்தனித்தன. முழு அரபுத் தீபகற்பத்தையும் அதிர வைத்த அப்புரட்சியை எதிர்கொள்வதென்பது ஒரு சவாலாகவே இருந்தது. மதீனாவையும் அங்கு வளர்ந்து வரும் இஸ்லாமிய சாம் ராஜ்யத்தையும் சூழ்ந்திருந்த அத்தகைய நாட்டுப்புற அரபுக் கோத் திரங்களின் கிளர்ச்சியின் தீங்குகளையும், எதுவித பண்பாட்டு வாடை யுமின்றி அக்கோத்திரங்கள் கொண்டிருந்த இனவாதத்தின் இழிநிலை யையும் வெறித்தனத்தையும் அடக்குவது சவால் மிக்கதுதான்.

இருந்த போதிலும் அபூபக்ர் (ரழி) அவர்களது மனத்திடமும், சிந் தைத் தெளிவும்,எதிரிகளுக்கு முகம் கொடுக்க வேண்டிய அவசியமும் அவரை தனது நிலைப்பாட்டில் உறுதியாக நிற்கச் செய்திருந்தன. ஸகாத்தைச் செலுத்த மறுத்ததன் மூலம் இஸ்லாத்திற்கு முரணாக நின்ற அக்கோத்திரங்களை எதிர்த்துப் போரிடவும், தீபகற்பத்துக்கு உள் ளேயும் வெளியேயும் இஸ்லாத்தை அழிப்பதற்கென குறிவைத்துக் காத்திருக்கும் எதிரிகளுக்கு முன்னால் முஸ்லிம்கள் பலவீனப்படுவது

குறித்த எந்தக் குறிகாட்டியையும் வெளிக்காட்டாமல் இருக்க வேண்டும் என்பதிலும் அவர் பிடிவாதமாக இருந்தார். அல்குர்ஆன் அவர்களின் விட யத்தில் *"நீங்கள் ஈமான் கொள்ளவில்லை"* (49:14) எனத் தீர்மானமாகவே சொல்லியுள்ளதால் இது கட்டுப்பாட்டோடு தொடர்பான விடயமன்றி ஈமானோடு தொடர்பான விடயம் என்று நினைத்து சில ஸஹாபாக்கள் அத்தீர்மானத்தை எதிர்த்த போதிலும் அபூபக்ர் (ரழி) தனது முடிவில் உறுதியாக இருந்தார். இக்குழப்பத்தில் மதீனாவின் ஆணிவேரையே அசைக்கக் காத்துக் கொண்டிருக்கும் அக்காட்டு மிராண்டிக் கோத்திரங்களின் அபாயத்தை அந்த ஸஹாபாக்கள் சரியாக அடையாளம் கண்டுகொள்ளவில்லை போலும். அவ்வாறே இக்கோத்திரங்களை மனிதாபிமான ரீதியில் மீட்டெடுப்பதன் அவசியத்தையும், மானிட சமூகத்தின் முன்னுரிமையளிக்கப்பட வேண்டிய அம்சங்களுக்கு எதிராக செயற்படுவதை விட்டும் அவற்றைத் தடுக்க வேண்டியதன் அவசியத்தையும், இஸ்லாத்தின் ஒழுங்கை விட்டும் வெளியேறுதல் என்ற இந்த 'ரித்தத்'தை முளையிலேயே கிள்ளி எறிய வேண்டிய அவசியத்தையும் அவர்கள் சரியாக அடையாளம் கண்டு கொள்ளவில்லை என்றே தோன்றுகிறது. "அவர்கள் (கிளர்ச்சியாளர்கள்) லா இலாஹ இல்லல்லாஹ் என்ற கலிமாவை மொழிந்தவர்களாயிற்றே (எனவே அவர்களுடன் போராடுவதா?)" எனக் கூறியவர்களுக்குப் பதிலளிக்கும் போது, "தொழுகையையும் ஸகாத்தையும் பிரித்துப் பார்ப்பவர்களோடு நான் போராடியே தீருவேன்" எனக் கூறிய அபூபக்ரின் நிலைப்பாட்டை ஆரம்பத்தில் எதிர்த்துவிட்டு பின்னர் அவரது கருத்துதான் சரியெனக் கண்டு அவரது தலைமைத்துவத்திலும் அறிவிலும் நம்பிக்கை கொண்டு அவரது பக்கம் மீண்டவர்களின் சார்பாக உமர் (ரழி) அவர்கள் பின்வருமாறு கூறுகிறார்கள்: "அல்லாஹ் மீதாணையாக! அபூபக்ரின் இந்த உறுதியான நிலைப்பாட்டைக் கண்ட உடனேயே அல்லாஹ் எனது உள்ளத்தை விரிவாக்கி விட்டான்" (அபூபக்ர் யார் என்பதையும்அவரது பண்புகள் என்ன என்பதையும் உமரும் அறிவார்; பெரும்பான்மையான முஸ்லிம்களும் அறிவர்).

உமர் (ரழி) முதற்கொண்டு அனைவருமே அபூபக்ர் (ரழி)யின் நிலைப்பாடும் அவரது தீட்சண்யப் பார்வையும் எவ்வளவு காலோசிதமானது என்ற உண்மையை அறிந்து கொண்டனர். நாட்டரபுக் கோத்திரங்களை எதிர்த்துப் போரிடுவதென்பது நம்பிக்கையோடோ ஈமானோடோ தொடர்பான விடயமல்ல; ஏனெனில் " *'நாங்களும் ஈமான் கொண்டோம்' என்று (நபியே! உம்மிடம்) நாட்டுப் புறத்து*

*அரபிகள் கூறுகிறார்கள். 'நீங்கள் ஈமான் கொள்ளவில்லை' என (நபியே! அவர்களிடம்) கூறுவீராக. (49:14)* என அல்குர்ஆன் கூறி விட்டது. மாறாக, முன்னேற்றத்தை ஆசிக்கும் மனிதனுக்கு அறவே பொருந்தாத, கீழ்மட்ட ஜாஹிலிய்ய சிந்தனை வயப்பட்ட வாழ்வி லிருந்து இக் கோத்திரங்களை மீட்டு, மனித இருப்புக்கு மிக அத்தியா வசியத் தேவையான நாகரிக வயப்பட்ட சமூக வாழ்வுக்குள் உள்வாங் கப்படுவதற்கான தகுதியை நோக்கி அவற்றை அழைத்துச் செல்லும் மனிதாபிமான நடவடிக்கையே அது என்பதை அவர்கள் புரிந்து கொண்டார்கள். இதைத்தான் அல்குர்ஆன் மேலுள்ள வசனத்தின் பிற்பகுதியில்,*"எனினும் 'நாங்கள் வழிப்பட்டோம் (இஸ்லாத்தைத் தழுவி னோம்)' என்று (வேண்டுமானால்) கூறுங்கள். ஏனெனில் உங்களுடைய இதயங்களில் (உண்மையான) ஈமான் இன்னும் நுழையவில்லை"(என நபியே! அவர்களிடம்) கூறுவீராக. (49: 14)* எனக் குறிப்பிடுகிறது. அவ்வாறே அந்நடவடிக்கை அந்த நாட்டுப்புறக் கோத்திரங்களின் அறிவீனம், பாமரத்தனம்,'ரித்தத்' என்பவற்றின் காரணமாக அவை மட்டுமன்றி இஸ்லாமிய தேசமும் நாகரிகமும் எதிர்கொள்ளக்கூடிய அபாயங்களிலிருந்து இஸ்லாமிய தேசத்தையும் இஸ்லாமிய நாகரிகத்தையும் பாதுகாப்பதற்கான ஏற்பாடுமாகும் என்பதையும் அவர்கள் புரிந்து கொண்டார்கள். எனினும் இந்த விட யத்தின் ஆழத்தையும் உட்பொதிவையும் பின்னர் வந்த பெரும்பாலான அறிஞர்கள் புரிந்து கொள்ளத் தவறிவிட்டனர் என்பது கவலைக்குரிய விடயமே. நாகரிக மயமான மானிட சமூகத்துக்கான சமூகவியற் தகைமைகள் என்பதனையும் நம்பிக்கைச் சுதந்திரம் என்பதனையும் அவர்கள் ஒன்றாகச் சேர்த்து குழப்பிக் கொண்டார்கள். விளைவாக, மனிதனின் அடிப்படைப் பொறுப்பை நிறைவேற்றுவதற்கு கால் கோளாகவும், இஸ்லாமிய அழைப்பினதும் இறை வேதங்களினதும் ஆணிவேராகவும் அமையும் 'நம்பிக்கைச் சுதந்திரம்' என்ற அடிப் படை உரிமை மீறப்பட முடியும் என அவர்கள் எண்ணிக் கொண் டார்கள். அவ்வாறே தேசத்தின் அரசியல் ரீதியான நலன்களைப் பேணுவதற்காக குறித்த இந்த நம்பிக்கைச் சுதந்திரத்தை மக்களுக்கு வழங்குவதற்கும் ரத்துச் செய்வதற்கும் முடியும் எனவும் அவர்கள் நினைத்துக் கொண்டனர். ஒன்றை ரத்துச் செய்துவிட்டு இன்னொன்றை அமுல்படுத்தும் 'நஸ்க்' முறைமை அல் குர்ஆனில் உள்ளதுதானே (அது போலத்தான் நம்பிக்கைச் சுதந்திரத்தை வழங்குவதற்கும் வழங்காமல் இரத்துச் செய்வதற்கும் முடியும்) என்பது அவர்களது வாதம். எனினும் 'நஸ்க்' முறைமை அல்குர்ஆனில் இருக்கிறது என்ற

வாதமே தவறானதாகும். எல்லா நிலைமைகளுக்கும் கால, இட வேறுபாடுகளுக்கும் ஏற்ப மனிதனை விளித்துப் பேசும் அல் குர்ஆனின் போக்கைச் சரியாக விளங்கிக் கொள்ளாத போதும், அல்லாஹ் ஏற் கனவே கூறிய விடயத்தை மீள் பரிசீலனை செய்கிறான் எனக் கூறும் போதும்தான் அல்குர்ஆனில் 'நஸ்க்' என்ற பொறிமுறை இடம் பெற்றிருக்கிறது என்ற வாதத்தை எம்மால் முன்வைக்க முடியும். (அல்லாஹ்வின் விடயத்திலோ அல்குர்ஆனின் விடயத்திலோ தவறு தலாகக் கூட அவ்வாறு நாம் கூறலாகாது). இந்தக் கருத்தை எந்த முஸ் லிமும் வேண்டுமென்றே கூற மாட்டார். அல்குர்ஆனின் ஒவ்வொரு வசனமும், ஒவ்வொரு எண்ணக்கருவும், ஒவ்வொரு வழிகாட்டலும் மனிதனதும் மானிட சமூகத்தினதும் வாழ்வோடும் அதன் ஒவ்வொரு வித்தியாசமான கால, இட, சூழல் கட்டமைப்போடும் தொடர்பு பட்ட தாக இருக்கிறது. ஒவ்வொரு நிலைமைக்கும் தேவைக்கும் ஏற்றாற் போல் அதிலிருந்து வழிகாட்டலைப் பெறுவதே எமது பணி.

எனவேதான் அல்குர்ஆன் குறிப்பிட்டுள்ள 'நஸ்க்' மற்றும் 'மறக் கடிக்கச் செய்தல்' என்ற விடயங்களெல்லாம் அல்குர்ஆனுக்கு முந்திய சமூகங்களோடு தொடர்பு பட்ட, திரிபு படுத்தலுக்கும் மறதிக்கும் உட் பட்ட, காலம் கடந்த வசனங்களின் விடயத்தில் அல்குர்ஆன் குறிப்பிட்டவையாகும். அத்தகைய வசனங்களை மாற்றி அவற்றுக்குப் பதிலாக தனது வசனங்களை அல்குர்ஆன் முன்வைத்தது. *"மேலும் (நபியே! முற்றிலும்) உண்மையைக் கொண்டுள்ள இவ்வேதத்தை நாம் உம்மீது இறக்கியுள்ளோம், இது தனக்கு முன்னிருந்த (ஒவ்வொரு) வேதத்தையும் மெய்ப்படுத்தக் கூடியதாகவும் அதை மிகைக்கக் கூடியதாகவும் இருக்கின்றது". (5:48)*

*"ஏதேனும் ஒரு வசனத்தை நாம் மாற்றினால் அல்லது அதனை மறக்கச் செய்தால் அதைவிட சிறந்ததையோ அல்லது அது போன்ற தையோ கொண்டு வருவோம்".(2:106)*

*"அவன்தான் (இவ்)வேதத்தை உம்மீது இறக்கினான். இதில் தெளிவாகப் பொருள் தரும் வசனங்களும் இருக்கின்றன. அவைதான் இவ்வேதத்தின் அடிப்படையானவை. மற்றவை (பல அர்த்தங்கங் களைக் கொண்ட) 'முதஷாபிஹாத்' வசனங்களாகும். எனினும் எவர் களுடைய உள்ளங்களில் வழிகேடு இருக்கிறதோ அவர்கள் குழப்பத் தை ஏற்படுத்துவதற்காக 'முதஷாபிஹ்' வசனங்களின் விளக்கத்தைத் தேடி அவற்றின் பின்னால் செல்கின்றனர். அல்லாஹ்வைத் தவிர வேறு எவரும் அதன் உண்மையான விளக்கத்தை அறிய மாட்டார்கள்". (3:7)*[3]

ஆக, நாட்டுப்புற அரபுக் கோத்திரங்களின் 'ரித்தத்' என்ற பிற் போக்கிற்கும் ஒரு விசுவாசக் கோட்பாட்டை அல்லது நம்பிக்கையை கட்டாயப் படுத்துவதற்கும் எந்தத் தொடர்பும் கிடையாது. அவ்வாறே அவர்கள் அரபிகளாக இருப்பதற்கோ இல்லாமல் இருப்பதற்கோ நபி யவர்களின் சமூகத்தைச் சார்ந்தோராக இருப்பதற்கோ அன்னாரது நெருங்கிய குடும்ப உறவினராக இருப்பதற்கோ இஸ்லாமியப் பேரர சின் அடிப்படை உறுப்பினர்களாக இருப்பதற்கோகூட அதனுடன் எது விதத் தொடர்பும் கிடையாது. இவற்றில் எதுவும் இஸ்லாமியத் தூதினது இயல்பை அல்லது முழு மனித சமூகத்தின் மீதுமுள்ள பொறுப்பினது இயல்பை அல்லது இஸ்லாமிய அழைப்புப் பணி யினது இயல்பை அல்லது முழு உலகத்தவர்களையும் நோக்கி இஸ் லாம் முன்வைக்கும் அழைப்பினது இயல்பை மாற்றி விட முடியாது. இந்த வகையில், அது நம்பிக்கைச் சுதந்திரம் என்ற உரிமையை இரத் துச் செய்துவிட முடியாது; ஒரு மனிதனுக்கு வழங்கப்பட்டுள்ள தெரிவுச் சுதந்திரத்தையும், அவனது இருப்போடும் அவன் மீது சுமத்தப்பட்டுள்ள பொறுப்போடும் தொடர்பான சுய திருப்தி என்ற உரிமையையும் கூட அது இரத்துச் செய்ய முடியாது.

இஸ்லாத்தை உண்மையாக அறிந்து, விளங்கி, அல்லாஹ்வையும் மறுமை நாளையும் உள்ளத்தால் நம்பி, இவ்வுலகில் அதற்கேற்ப செயற்படும் இலக்கோடு வாழும் ஓர் உண்மை விசுவாசி பின்னர் அதனை விடுத்து வழிகேடுகளுக்கும் மூட நம்பிக்கைகளுக்கும் பின் னால் சென்று விடுவான் என இஸ்லாம் அச்சப்பட முடியாது.

சமூகமும் தேசமும் அழைப்பு மற்றும் பயிற்றுவித்தல் சார் நிறு வனங்களும் பொது மக்களையும் இளம் தலைமுறையினரையும் அழைப்பு மற்றும் கல்வி தொடர்பாக அவர்களுக்குள்ள பொறுப்புக் களை நிறைவேற்றுதற்கு வழிகாட்டுவதில் தவறிழைத்திருப் பதிலிருந்து மேற்குறித்த விவகாரம் வேறுபட்டதாகும். இத்தகையோர் தமது குறைபாடுகள் பற்றிச் சிந்திக்காமல், அறியாமையால் சில பொது மக்கள் விடுகின்ற பிழைகளையும் அகீதா ரீதியான பிறழ்வுகளையும் கண்டிப்பதிலும் எச்சரித்து தண்டனை வழங்குவதிலும் பலபோது மிதமிஞ்சி விடுகின்றனர். எந்தளவுக்கெனில்,மேற்சொன்ன தரப்புகள் விடுகின்ற குறைபாடுகளின் காரணமாக பல நாடுகளில் வாழும் பெரும் பான்மைப் பொதுமக்களின் ஈமான், ஆழ்ந்த புரிதலோ நம்பிக்கையோ அற்ற வெற்று வார்த்தைகளாகவும் செயற்பாடுகளோடும் சுருங்கிப் போய் விட்டன.

இஸ்லாத்தை விட்டும்,அல்லாஹ்வையும் மறுமை நாளையும் ஈமான் கொள்வதை விட்டும், அதற்கேற்ப செயற்பட்டு உலகை வளப் படுத்துவதை விட்டும் விலகிச் செல்கின்ற ஒரு மனிதனின் 'ரித்தத்' ஓர் உள நோயின் வெளிப்பாடாகத்தான் இருக்க வேண்டும்; அல்லது மார்க்க ரீதியான அறிவீனமாக அல்லது அரசியல் அல்லது உலகாயத நோக்கம் கொண்டதாகத்தான் இருக்க வேண்டும்.

மதம் மாறுதலின் ஒவ்வொரு வடிவமும் அவை ஒவ்வொன்றுக்கும் பொருத்தமான முறையில் அணுகப்பட வேண்டும். அது உள நோயாக இருப்பின் அதற்கு சிகிச்சை செய்யப்பட வேண்டும். மார்க்க விடயங் கள் பற்றிய அறிவீனமாக அது இருப்பின் உரிய தெளிவுகள் வழங்கப் பட வேண்டும்; சந்தேகங்கள் நிவர்த்திக்கப்பட வேண்டும். உரை யாடல்களில் உள்ள கோளாறுகளினாலும், நவீன இஸ்லாமிய சிந் தனையை முன்வைப்பதிலுள்ள குறைபாட்டினாலும், முஸ்லிம்களின் நடைமுறைகளினாலும் நவீன காலத்தில் இஸ்லாத்தைப் பற்றித் தோன்றியுள்ள சந்தேகங்கள்தான் எத்தனை! மேற்சொன்ன வகையான உளநோயும் அறியாமையும் இருக்கும் நிலையில் கூட நம்பிக்கைச் சுதந்திரமும் தெரிவுச் சுதந்திரமும் தொடர்ந்திருக்கும். அதன் பிறகும் யார் பிடிவாதமாகவும் பெருமையாகவும் நடந்து கொள்கின்றாரோ அந்தப் பாவம் அவருக்கே உரியது. நாம் எமது அழைப்புப் பணி யையும் பயிற்றுவிப்பையும் ஒழுங்காக மேற்கொள்ளுமிடத்து சிந்திக் கக் கூடிய எந்த மனிதனும் அத்தகைய பிடிவாதத்தில் இருக்க மாட்டான். உண்மையாகவே இஸ்லாத்தை ஏற்று, உண்மையாகவே அதன் கருத்தை விளங்கிய மனிதனின் 'ரித்தத்' குறித்து இஸ்லாம் அச்சம் கொள்வதில்லை.

ஆனால் நாம் வெகுவாகச் சிந்திக்க வேண்டிய கவலையூட்டும் விடயம் ஒன்றிருக்கிறது. கடுமையான வறுமை, வேலையின்மை, மார்க்கம் பற்றிய அறிவீனம், இளமைத் துடிப்போடு கூடிய அறியா மை, உம்மாவின் பொடுபோக்கு, கவனயீனம் என்பனவும்,இத்தகைய சந்தர்ப்பத்தை தமது தீய நோக்கங்களை அடைந்து கொள்வதற்காகப் பயன்படுத்திக் கொள்வோரும் ஒன்றிணையும் நிலையே அது.

'ரித்தத்' செயற்பாடானது உள்நோக்கம் கொண்டதாக இருப்பின், குறிப்பாக அது முஸ்லிம்களுக்குத் தீங்கிழைத்தல், அவர்களுக்கு மத்தியில் குழப்பத்தை ஏற்படுத்தல், அவர்களது மார்க்கத்தை இருட் டடிப்புச் செய்தல் போன்ற ஆபத்தான உள்நோக்கம் கொண்டதாக இருப்பின், அந்த ஒவ்வொரு நிலைமையும் அதற்குரிய தூண்டற்

காரணிகள், விளைவுகள் என்பவற்றுக்கேற்ப தனித்தனியாக நோக்கப் பட வேண்டும். அது இத்தகைய ஆபத்தான நிலைகளை அடைந் திருப்பின் வழிப்பறிக் கொள்ளை, பூமியில் குழப்பம் விளைவித்தல் போன்ற குற்றங்களின் பிரிவில் வைத்து நோக்கப்பட வேண்டுமே அன்றி, நம்பிக்கைச் சுதந்திரம் என்ற கோணத்தில் நிச்சயமாக நோக்கப்படக்கூடாது. இத்தகைய சந்தர்ப்பங்களில்–அவை சிறிய தாயினும் பெரியதாயினும் – தண்டனை வழங்கப்பட வேண்டிய நிலை காணப்படுமாயின், பல்வேறு சூழ்நிலைகளையும் கருத்திற் கொண்டு தஃஸீர்[4]அடிப்படையிலேயே அது வழங்கப்பட வேண்டும்.

இவ்வாறன்றி, ஒருவர் இஸ்லாம் பற்றித் தெரிந்த நிலையிலும், பிடிவாதமாகவோ பார்வைக் கோளாறினாலோ அறிவீனமாகவோ வெறுப்பினாலோ இஸ்லாத்தை விட்டு வெளியேறுவாராயின் அது விதிவிலக்கான நிலையும் வழிகேடுமாகும். அந்தப் பாவமும் பொறுப் பும் அவரையே சாரும். அந்த நிலையிலும் அவருக்கு அழைப்பு விடுப்பதும் அறிவூட்டுவதுமே நமது பணி.

*“(நபியே!) உம் இறைவனின் பாதையில் (மக்களை) விவேகத் துடனும், அழகிய உபதேசத்தைக் கொண்டும் அழைப்பீராக! இன்னும், அவர்களிடத்தில் மிக அழகான முறையில் தர்க்கிப்பீராக! மெய்யாக உம் இறைவன், அவன் வழியைவிட்டுத் தவறியவர் களையும் (அவன் வழியைச் சார்ந்து) நேர்வழி பெற்றவர்களையும் நன்கு அறிவான்”. (16:125)*

*“ஓர் ஆத்மாவின் (பாவச்)சுமையை மற்றோர் ஆத்மா சுமக்காது”. (6:164)*

நாம் ஏலவே குறிப்பிட்டது போல், அல்குர்ஆன் மிக ஆபத்தான சூழ்ச்சி நடவடிக்கைகளுள் ஒன்றைக் குறிப்பிட்டுள்ளது. மதீனாவில் வாழ்ந்த சில யூதர்கள் முஸ்லிம்களுக்கு மத்தியில் குழப்பத்தை ஏற்படுத்திவிடும் நோக்குடன் முஃமின்கள் போல் நடித்து பின்னர் மதம் மாறிவிட்டதாக அறிவித்தமையே அந்தச் சூழ்ச்சி.

*“வேதத்தையுடையோரில் ஒரு சாரார் (தம் இனத்தாரிடம்): ‘ஈமான் கொண்டோர் மீது இறக்கப்பட்ட (வேதத்)தைக் காலையில் நம்பி, மாலையில் நிராகரித்து விடுங்கள்; இதனால் (ஈமான் கொண்டுள்ள) அவர்களும் ஒரு வேளை (அதை விட்டுத்) திரும்பி விடக்கூடும்’ என்று கூறுகின்றனர்”. (3:72)* என அதனை அல்குர்ஆன் வர்ணிக்கிறது. எனி னும் அல்குர்ஆன் இத்தகைய மிக மோசமான குற்றத்திற்கான உலகியல்

ரீதியான எந்தத் தண்டனையையும் குறிப்பிடாமல் அது பற்றிய தீர் மானத்தை அனைத்துக்கும் பொறுப்பாளர் என்ற வகையில் தேசத்தின் அதிகார பீடத்துக்கே விட்டுவிட்டது. இது கால, இட வர்த்தமானங் களால் தாக்கமடையக்கூடிய ஒரு விவகாரமாகும். இந்த வகையில் தான் நாட்டின் தலைவராக இருந்த இறைத்தூதர் (ஸல்) அவர்கள் இவ் விடயத்தை அணுகி, கால, தேச சூழமைவுகளை ஆராய்ந்து பொருத்த மான தண்டனையை அறிவித்து அமுல்படுத்தினார்கள். *"நம்பிக்கை கொண்டவர்களே! அல்லாஹ்வுக்கு கீழ்ப்படியுங்கள்; இன்னும் (அல்லாஹ்வின்) தூதருக்கும், உங்களில் (நேர்மையாக) அதிகாரம் வகிப்பவர்களுக்கும் கீழ்ப்படியுங்கள்!"* (4:59)

நபியவர்கள் ஏற்கனவே இத்தகைய கிளர்ச்சியாளர்கள், சூழ்ச்சி யாளர்கள், குழப்பக்காரர்கள், இஸ்லாத்துக்கும் முஸ்லிம்களின் தேசத் துக்கும் எதிராகப் போராடத் துணிந்தவர்கள் முதலியோருக்கு எதிராக கடும் நடவடிக்கை (கொலைத் தண்டனை) எடுக்கப்படும் என எச்சரித் திருந்தார்கள். "யார் தனது மார்க்கத்தை மாற்றிக் கொள்கிறாரோ அவரைக் கொன்று விடுங்கள்!" என்ற ஹதீஸ் இதற்கு உதாரணமாகும். இந்த எச்சரிக்கையானது அரசியல் ரீதியான சூழ்ச்சிக்கு எதிரானது என் பதும் மனிதனின் தெரிவுச் சுதந்திரத்தோடும் நம்பிக்கைச் சுதந்திரத் தோடும் தொடர்பற்றது என்பதும் மிகத் தெளிவான விடயம். எவ்வாறா யினும், குறித்த எச்சரிக்கை அதன் பணியை ஆற்றியது; முஸ்லிம்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்டது; சூழ்ச்சியாளர்களின் இரத்தம் ஓட்டப்பட்டது; சூழ்ச்சி நடவடிக்கைகள் முளையிலேயே கிள்ளி எறியப்பட்டன.

பொய்கள் மூலமாகவும் பிரச்சினைகளைத் தூண்டிவிடுவதன் மூலமாகவும் முஸ்லிம்களுக்கெதிராக சூழ்ச்சி செய்தோரையும், இஸ் லாத்தையும் முஸ்லிம்ளையும் சாடி அவர்களது நற்பெயருக்குக் களங் கம் ஏற்படுத்தவும், மக்களது உணர்வுகளுக்கு போலியாக தூபமிடவும் பல்வேறு கலா உத்திகளை(குறிப்பாக அக்காலத்தில் பரவலான தாக்கம் கொண்டிருந்த கவிதை உத்தியை) கையாண்ட நபர்களையும் நபியவர்கள் இம்முறையிலேயே எதிர்கொண்டார்கள். இத்தகைய நடவடிக்கைகளில் ஈடுபடுவோருக்கு தண்டனை வழங்கப்படும் என அன்னார் எச்சரித்தார்கள். ஏனெனில் அவர்கள் செய்த வேலை சிந் தனை, உரையாடல், விமர்சனம் அல்லது திறனாய்வு என்ற எல்லை களைக் கடந்திருந்தது. எதிராளிகளின் விமர்சனங்களுக்கான பதில்களும் சந்தேகங்களுக்கான விளக்கங்களும் அல்குர்ஆனில் நிறைந்தே காணப்படுகின்றன. ஆனால் இஸ்லாத்தை எதிர்க்க இவ்வழி

முறைகளை விடுத்து கலைகளைப் பயன்படுத்துவதானது (அது நேற்றுக் காணப்பட்ட கவிதையாக இருக்கட்டும்; அல்லது இன்று பயன்படுத்தப்படும் கதைகள், நாவல்கள், கேலிச்சித்திரங்கள், பாடல் கள், திரைப்படங்கள் என்று எதுவாகவும் இருக்கட்டும்!) இஸ்லாத் தைக் கொச்சைப்படுத்தி அதன் நற்பெயருக்கு களங்கம் ஏற்படுத்தும் செயலாகவே கருதப்படும். அத்தகைய செயற்பாடுகள் நாகரிக மடைந்த சமூகங்களின் சட்ட வரம்புக்குள் கண்டிப்புக்கும் தண்டிப் புக்கும் உரியவையே அன்றி, கருத்துச் சுதந்திரமாகவோ பேச்சுச் சுதந்திரமாகவோ அவை கருதப்படுவதில்லை.[5] அத்தகைய சட்டங் களில் பிரபல்யமானது யூதர்கள் மீதான 'ஹோலோகோஸ்ட்' படு கொலைகளைக் கண்டிக்கும் ஐரோப்பிய சட்டங்களாகும். உலக சனத் தொகையின் ஐந்திலொரு பங்கை விட அதிக எண்ணிக்கையைப் பிரதிநிதித்துவப்படுத்தி உலகின் நாலா பாகங்களிலும் வாழும் இஸ்லாத்திற்கெதிராகவும் முஸ்லிம்களுக் கெதிராகவும் அவர்களது புனிதச் சின்னங்களுக்கெதிராகவும் எதிர்ப்பையும் ஏளனத்தையும் தூண்டி விடுவதற்காகவும், ஏனைய சமூகங்களை அவர்களோடு விரோதிக்கச் செய்வதற்காகவும் இஸ்லாத்தின் எதிரிகளில் சிலர் பயன்படுத்தும் வழிமுறைகளும் இவ்வாறே நோக்கப்பட வேண்டும்.

இஸ்லாமிய உம்மத்தின் வெகுமக்களை ஆள்கின்ற அரசுகள் மீது நிச்சயமாக சில பொறுப்புகள் இருக்கின்றன. அவர்கள் இது பற்றிய சட்டங்களை அறிமுகப்படுத்தி அமுல்படுத்த வேண்டும்; இராஜதந்திர பொறிமுறைகளுக்கூடாக சம்பந்தப்பட்ட அமைப்புக்களுக்கு நெருக் குதலை வழங்க வேண்டும்; உம்மத்திற்கும் அதன் நம்பிக்கைகளுக்கும் கோட்பாடுகளுக்கும் எதிராக உணர்வலைகளைத் தூண்டிவிடக் கூடிய செயற்பாடுகள், அதனை இழிவுபடுத்தும் நடவடிக்கைகள் என்பவற் றைத் தடுப்பதற்காக பொருளாதாரத் தடைகளை விதிக்க வேண்டும்; சமூகங்களுக்கிடையில் பிரச்சினைகளையும் எதிர்ப்புணர்வையும் மூட்டிவிடுவதற்காக பிற சமூகங்களையும் மதங்களையும் கொச்சைப் படுத்தும் செயற்பாடுகளில் ஈடுபடுவோரைத் தடுக்கக் கூடிய சட்டங் களை அறிமுகப்படுத்தி அமுல்படுத்துமாறு ஏனைய அரசாங்கங்களை வேண்ட வேண்டும். அவை பற்றிய சட்டங்களும் தண்டனைகளும் வகுக்கப்படாதிருக்கும் பட்சத்தில் குற்றங்கள் நிகழ்ந்ததன் பின்னர் அரசாங்கங்கள் மன்னிப்புக் கோருவதில் எதுவித பிரயோசனமோ பெறுமானமோ இருக்கப் போவதில்லை. யூதர்களின் (ஹோலோ கோஸ்ட்) கூட்டுப் படுகொலையை மறுப்பது குற்றமாகக் கருதப் படுவதை இதற்கு சிறந்த உதாரணமாகக் கூறலாம். முஸ்லிம்

நாடுகளும் முஸ்லிமல்லாத நாடுகளும் இந்நடைமுறையைப் பின்பற்ற வேண்டும். அது ஆய்வு, விஞ்ஞான ரீதியான பகுப்பாய்வு என்பவற்றுக்குத் தடை போடுவதற்காக அல்ல; அத்தகைய அம்சங்களை இஸ்லாமும் முஸ்லிம் அறிஞர்களும் தாராளமாக வரவேற்கின்றனர். மாறாக,உண்மையான விமர்சனப் பார்வைக்கு அப்பால் சென்று கலை என்ற பெயரில் அநியாயமான குற்றச்சாட்டுக்களும் சாடல்களும் முன்வைக்கப்படுவதைத் தடுப்பதற்காகவே இந்நடவடிக்கைகள் அவசியப்படுகின்றன. ஏனெனில் இத்தகைய குற்றச்சாட்டுகளும் சாடல்களும் உண்மைகளை மறைத்து வெகு மக்களிடம் போலியான, நியாயமற்ற விம்பங்களைத் தோற்றுவித்து விடுகின்றன. இது பெரும் இட்டுக்கட்டலும், பொது மக்களின் சிந்தனைகளைக் குழப்பி குரோதத் தீயைப் பற்ற வைக்கும் முயற்சியுமாகும். பல தசாப்தங்களாகவும் நூற்றாண்டுகளாகவும் முஸ்லிம்களுக்கும் மேற்கத்தியருக்கும் இடையில் இருந்து வரும் முரண்பாடுகளுக்கான முக்கிய காரணிகளில் ஒன்றாகவும் இதுவே உள்ளது. இந்நடவடிக்கைகள் உண்மையைக் கண்டறிவதற்கான விஞ்ஞான ரீதியான பகுப்பாய்வை விட்டு விலகியவை மட்டுமன்றி, சமூகங்கள், நாகரிகங்கள், மதங்கள், கலாசாரங்கள் என்பவற்றுக்கிடையில் இணக்கத்தையும் தொடர்பாடலையும் ஏற்படுத்தும் நோக்கம் கொண்ட உரையாடலை விட்டும் மிகத் தூரமானவை.

எனவே, முஸ்லிம் சமூகத்துள் பிரச்சினையை உண்டுபண்ணுவதற்கு மதம் மாறுதல் என்ற குயுக்தியை மேற்கொண்டவர்களை எச்சரித்து அல்லாஹ்வின் தூதர் அறிவித்த தண்டனையின் தன்மை ஒருபுற மிருக்க, அப்போதைய அரசின் தலைவர் என்ற வகையில்அன்று காணப்பட்ட நிலைமைக்கும் சூழலுக்கும் பொருத்தமான வகையில் அன்னார் அறிவித்த அதே 'தஃஸீர்' தண்டனை வேறு நிலைமைகளுக்கும் சூழமைவுகளுக்கும் இயல்பாக அப்படியே பொருந்திச் செல்லும் என்பதற்கில்லை. மட்டுமன்றி, அந்தத் தண்டனை நமக்கு இன்னொரு பொருளையும் உணர்த்துகிறது. அதாவது, சமூகத்தின் பாதுகாப்பு விடயத்தில் கை வைப்பதானது –எல்லா வகையிலும்– மிகப் பயங்கரமான குற்றமாகும். அது வழிப்பறிக்கொள்ளை, குழப்பம் விளைவித்தல் முதலிய குற்றப் பிரிவுக்குள் அடங்கக் கூடியது. அக்குற்றத்தை இழைப்பவர் முஸ்லிம் நாடுகளில் கடுமையான தண்டனைக்கு முகங்கொடுக்க நேரிடும். சமூகப் பாதுகாப்பையும் அங்குள்ள நிறுவனங்களது பாதுகாப்பையும் சீர்குலைக்கின்ற பயங்கர நடவடிக்கைகளைத் திட்டமிடுவதற்கு மதத்தை அல்லது வேறொன்றைப் பயன்படுத்துவதும் இவ்வாறானதே.

இவ்வாறே, அல்குர்ஆனில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ள கொலை, விபச்சாரம், திருட்டு, வழிப்பறிக்கொள்ளை, குழப்பம் விளைவித்தல் ஆகிய பெரும் குற்றங்களின் விளைவுகளோடு ஒப்பிடும் போது, சமூகத்துக்கு தீங்கையும் பயங்கர விளைவுகளையும் ஏற்படுத் தக்கூடிய –அல்குர்ஆனில் தெளிவாகப் பெயர் குறிப்பிட்டுச் சொல் லப்படாத– குற்றங்களுக்கான தண்டனைகள் வழிப்பறிக்கொள்ளை, குழப்பம் விளைவித்தல் ஆகியகுற்றங்களின் பிரிவினுள்ளே அடக்கப் பட முடியும். தண்டனையை விதிக்க முன்னர் ஒவ்வொரு சந்தர்ப்பத் திலும் குற்றமிழைத்தவரின் நிலை, அக்குற்றத்துக்குப் பின்னாலிருந்த நோக்கம், அதன் விளைவுகள் என்பன கவனிக்கப்பட வேண்டும். அப்போதுதான் வழிப்பறிக் கொள்ளை என்ற குற்றத்தின் பல்வேறு படித்தரங்களையும் கருத்திற்கொண்டு பயங்கர நிலைக்கு கொலைத் தண்டனை என்றும் குறைந்த நிலைக்கு சிறைத் தண்டனை என்றும் வகைப்படுத்தப் படுவது போல் மேற்சொல்லப்பட்ட குற்றங்களுக்கான தண்டனைகளும் 'தஃஸீர்' அடிப்படையில் வகைப்படுத்தப்பட முடி யும். மட்டுமன்றி, குறித்த குற்றச் செயலானது தவறுதலாக இடம் பெற்றதாக, அல்லது இன்று நாம் காண்பது போல் உலகாயத நலன் களை அடைந்து கொள்ளும் நோக்கம் கொண்ட சில சுயநலமிகளால் தந்திரமாகத் தூண்டப்பட்டு பாமரர்களும் வறியோரும் அப்பாவி மக் களும் மேற்கொண்டதாக இருப்பின் அதனை மன்னித்து விடுவதற்கும் தடை இருக்காதென்றே கருதுகின்றேன்.

பெரும்பாலான இஸ்லாமிய நாடுகளும் தஃவா மற்றும் நலன்புரி அமைப்புகளும் –அவற்றின் இயலாமையினால் அல்லது தகுதி யின்மையால்– வறுமையின் பிடியில் வாழும் மக்கள் குழுமங்களுக்கு, குறிப்பாக சரியான மார்க்கத்தை கற்றுத்தரக் கூடிய நிறுவனங்களைக் கொண்டிராத தொலைதூர வறியநாடுகளில் வாழும் மக்களுக்கு மார்க்க அறிவூட்டுவது தொடர்பில் வாளாவிருப்பதும், அத்தியாவசிய வாழ்வாதார வசதிகளையும் தொழில் வாய்ப்புகளையும் ஏற்படுத்திக் கொடுக்காதிருப்பதும் கவலைக்குரியது. அதே நேரத்தில், கிறிஸ்தவ மிஷனரிகள் அம்மக்களுக்கு மத்தியில் சென்று மேற்கொள்ளும் நட வடிக்கைகள் குறித்து இந்நாடுகளும் நிறுவனங்களும் சலித்துக் கொள் வதையும் பார்க்கிறோம். சமய ரீதியான அமைப்புக்களோ இம்மிஷ னரிகள் மூலம் கவரப்பட்டுச் செல்கின்ற மக்களை எச்சரிப்பதோடும் சபிப்பதோடும் தங்களது பணியை சுருக்கிக் கொள்கின்றன. ஆனால் அதுமாத்திரம் எந்தப் பிரயோசனத்தையும் தரப்போவதில்லை என்பதும், எதனையும் மாற்றி விடப்போவதில்லை என்பதும் அவற் றுக்கு நன்கு தெரியும்.

அவ்வாறே, இஸ்லாத்தை விட்டு வெளியேறி பிடிவாதமாகவோ சத்தியத்தை நிராகரித்தோ குப்ரில் சென்று, வழிகெட்ட மதங்களில் ஒன்றை அல்லது நாஸ்திக சிந்தனைகளில் ஒன்றைத் தழுவி விட்டதாக பிரகடனம் செய்யும் அனைவரையும் தண்டிக்க வேண்டும் எனவும், அத்தகையோரை எச்சரித்து இஸ்லாத்தின் பக்கம் மீள அழைப்பது அவசியம் எனவும் கருதுபவர்கள் விளங்க வேண்டிய ஒரு விடயம் உள்ளது. இத்தகையவர்கள் முஸ்லிம் சமூகத்தினுள் இருந்த போதும் அவர்கள் மிகச் சொற்ப தொகையினரே; அதுவும் கல்வி மற்றும் சமூக ரீதியான குறைபாடுகள், சிக்கலான மானசீக–பொருளாதார நிலைமைகள் என்பவை காரணமாகவே இத்தகைய விதிவிலக்கான நிலைமைகள் உருவாகின்றன. இத்தகையோரை வற்புறுத்தி மீண்டும் இஸ்லாத்தினுள் நுழைவிப்பதால் அவர்களது ஈமான் உறுதி செய்யப்படவோ அகீதா பாதுகாக்கப்படவோ போவதில்லை என்பது தெளிவு. மட்டுமன்றி, அச்செயற்பாடானது நயவஞ்சகர்களையும் இஸ்லாத்தின் மீதும் உம்மாவின் மீதும் காழ்ப்புணர்ச்சி கொண்ட சிலரையும் உருவாக்கி முஸ்லிம் சமூகத்துக்கு மத்தியில் விதைத்து விடவே வழி வகுக்கும். எனவே, இதன் மூலம் கிட்டும் பயன் என்ன என்பதை நமக்கு நாமே கேட்டுக் கொள்ள வேண்டியுள்ளது. இத்தகைய முனாபிக்குகள் முஸ்லிம் சமூகத்துக்கு மத்தியில் ஊடுருவிச் செல்வதன் மூலமாக இந்த உம்மத் அடைந்து கொள்ளும் நன்மைதான் என்ன?

நாம் இன்னுமொரு விடயத்தையும் புரிந்து கொள்ள வேண்டும். அறியாமையால் அல்லது உளநோய் காரணமாக மதம் மாறுகின்ற ஒருவரது நிலை, வேறு உள் நோக்கங்களுக்காக மதம் மாறுகின்றவர்களின் நிலையை விட வித்தியாசமானதாகும். எனவே, இவ்வாறான உள் நோக்கம் கொண்டவர்கள், அதிலும் குறிப்பாக அபாயகரமான உள் நோக்கம் கொண்டவர்கள், முஸ்லிம் சமூகத்துக்குத் தீங்கிழைக்கும் ஊடகமாக மதத்தைப் பயன்படுத்தாமல் தடுப்பதற்காக சட்ட ரீதியான தண்டனை கொண்டு எச்சரிக்கப்படுவது அவசியம். அதன் பிறகும் இவ்வாறான குற்றங்களையும் முட்டாள் தனங்களையும் புரிவோர் அதன் விளைவுகளுக்காக தம்மைத் தாமே நொந்து கொள்வது தவிர வேறு வழியில்லை. ஆனால் இதற்கும் ஒவ்வொரு மனிதனுக்கும் அல்குர்ஆன் வழங்கியுள்ள மத மற்றும் நம்பிக்கைச் சுதந்திரம் எனபதற்கும் எவ்விதத் தொடர்பும் இல்லை.

மேலே கூறப்பட்டவற்றலிருந்து இன்னொரு விடயமும் தெளிவாகிறது. இஸ்லாமிய ஷரீஆவின் நோக்கில், ஈமான் பற்றிய விவகாரம் எப்போதும் திருப்தியுடன் கூடிய ஏற்பாக அமைய வேண்டும் என்பதே

அது. அவ்வாறே வறுமைக்கும் அறியாமைக்கும் நோய்க்கும் தீர்வு காணப்படும் அதேவேளை, உள்நோக்கம் கொண்டோரும் சூழ்ச்சிக் காரர்களும் –நிலைமைக்கேற்ப– கட்டுப்படுத்தப்பட வேண்டும்.

ஆக– 'ரித்தத்' என்னும் மதம் மாறலுக்கான தண்டனை பற்றிய இக் கட்டுரையை பின்வருமாறு சுருக்கிக் கூற முடியும். இஸ்லாமிய வர லாறு நெடுகிலும் இந்த விவகாரமானது அகீதாவுடனோ சிந்தனைச் சுதந்திரத்துடனோ தொடர்பு பட்டதாக இருக்கவில்லை என்பது தெளி வானது. சிந்தனைச் சுதந்திரம், நம்பிக்கைச் சுதந்திரம் என்பன இஸ் லாம் கண்ணியப்படுதி வரவேற்கும் விடயமாகும்; அவைகுறித்து இஸ்லாம் ஒருபோதும் அச்சப்பட்டதில்லை. இஸ்லாத்திலிருந்து மதம் மாறுதல் என்ற விடயம் உண்மையில் அறியாமை, வறுமை, உள நோய், பிற நோக்கங்கள் என்ற விதிவிலக்கான மானிட நிலை களோடுதான் தொடர்புபட்டு வந்திருக்கிறது. மறுபுறத்தில்,பல சமூகங்கள் சுயாதீனமாகவும் சுயவிருப்புடனுமே அன்றும் இன்றும் இஸ்லாத்தில் நுழைந்து வந்திருக்கின்றன. எனவே இஸ்லாமிய நாடு களும் தஃவா, கல்வி, நலன்புரிசார் அமைப்புகளும் அழைப்புப் பணியிலும், கற்பித் தல் மற்றும் பயிற்றுவித்தல் செயற்பாடுகளிலும் அவசியமான பிரயத்தனங்களைச் செலவிட வேண்டும்; பொதுமக் களின் தேவைகளை நிறைவேற்றுவதிலும், உம்மாவின் நம்பிக்கைக் கோட்பாடுகளை பேணிப் பாதுகாத்தலிலும் கவனம் செலுத்த வேண் டும்; உம்மா முழுமையாக மீளப் பெற வேண்டிய அதன் அடிப்படை யான பார்வைக் கோணத்தை பேணிக் காக்க உழைக்க வேண்டும். ஏனெனில் அந்தப் பார்வைதான் உம்மா தனது ஆற்றல்களையும் சக்திகளையும் மீள உற்பவித்து ஆக்கத்தன்மை கொண்ட தனது நாகரிகப் பங்காற்றுகையை நிகழ்த்துவதற்கான உளவியல் பலத்தை அதற்கு வழங்கக் கூடியது.

இங்கு நாம் விளக்க வேண்டிய ஒரு விடயம் இருக்கிறது. உம்மத் தனது இளைஞர்களை மார்க்கம் பற்றிய அறியாமையிலிருந்து பாதுகாப்பது மாத்திரம் போதாது. மாறாக, வறுமையின் கோரத்தி லிருந்தும் அது அவர்களைப் பாதுகாக்க வேண்டும். அவர்களது கற்பைப் பேணுவதற்கான ஹலாலான வழிமுறைகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். அப்போதுதான் அரசியல், முதலீட்டு, வியாபார நோக்கங்களுக்காக மதங்களை விற்பனைப் பொருளாக மாற்றுகின்ற குறுகிய, இலாப நோக்கம் கொண்டவர்கள் வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கு உதவிகளையும் பணத்தையும் வழங்குவதன் மூல

மும், தமது கற்பைப் பாதுகாத்துக் கொள்ள முடியாத கட்டிளமைப் பருவத்தினருக்கு மத்தியில் அற்ப இன்பங்களைத் தூ வி விடுவதன் மூலமும் மக்களின் வறுமையையும் தேவையையும் முதிர்ச்சியின்மை யையும் தவறாகப் பயன்படுத்திக் கொள்வதை தடுத்து நிறுத்த முடியும். இந்த இளைஞர்களை வழிகெடுத்து அவர்கள் மூலம் தமது அரசியல் அல்லது தாராளவாத அல்லது சிந்தனை சார் நோக்கங்களையும், கீழ்த் தரமான தரகுச் சந்தை நலன்களையும் அடைந்து கொள்வதே அத்தகைய சதிகாரர்களின் நோக்கமாக உள்ளது.

இவ்வாறான சமூகங்களைக் கொண்ட நாடுகள் உள்நோக்கங்கள் கொண்ட பல்வேறு குழுக்கள், அமைப்புகள், நிறுவனங்கள், கும்பல் கள் விடயத்தில் தலையிட்டு உம்மாவின் அங்கத்தவர்களுக்குத் தீங் கிழைப்பதை விட்டும் அவற்றைத் தடுக்க வேண்டும். கல்வி, சமூக, பொருளாதார ரீதியாக அந்த அமைப்புகளின் செயற்பாடுகளுக்கு எதிரான நடவடிக்கைகளை மேற்கொள்வதன் மூலமும், மக்களை இந்த ஓநாய்களுக்கு இரையாவதற்கு விடாதிருப்பதன் மூலமும் இதனைச் சாத்தியப்படுத்த முடியும்.

உண்மையைக் கண்டறிதல், பகுத்தறிவைப் பயன்படுத்தல், ஆதா ரங்களைத் தேடுதல் போன்றவற்றுக்காக இதய சுத்தியுடன் அழைப்பு விடுக்கும் நிறுவனங்களைப் பொறுத்த மட்டில், அவற்றின் செயற்பாட் டாளர்களினாலோ அவர்களது வாதங்களினாலோ மத நம்பிக்கை என்ற சந்தையில் அவர்கள் வைத்திருக்கும் சரக்குகளினாலோ இஸ்லாத் துக்கு ஏதும் ஆபத்து ஏற்படும் என்ற அச்சத்திற்கு இடமில்லை. மாறாக அத்தகைய விடயங்கள் தெளிவான ஆதாரங்களின் துணையுடன் உரையாடுவதற்கும், பரஸ்பர அன்பு, தொடர்பாடல், இஸ்லாமிய அழைப்பு என்பவற்றை சான்றுகளின் மூலம் கட்டியெழுப்பவுமே வழி வகுக்கும்.

### நம்பிக்கைக் கோட்பாட்டு ரீதியிலும் சட்ட ரீதியிலும் மதம் மாறுதல் பற்றிய பார்வை

இன்னொரு விடயம் எஞ்சியிருக்கிறது; பருவமடைந்த புத்தி சுவா தீனமுள்ள ஒருவர் தனது நம்பிக்கைக் கோட்பாட்டை தானே தெரிவு செய்து கொள்ளல் என்பதையும், பருவமடையாத சிறுவர்களது உள ரீதியான, சட்ட ரீதியான, மார்க்க நம்பிக்கைக் கோட்பாட்டு ரீதியான பாதுகாவலராக இருப்பதற்கான அதிகாரத்தை இன்னொருவர் பெற் றிருத்தல் என்பதையும் பிரித்து விளக்க வேண்டிய தேவையே அது.

இஸ்லாம் வேதக்காரர்களைச் சேர்ந்தஒரு பெண்ணை மணம் செய்வதற்கு முஸ்லிம் ஆணுக்கு அனுமதி வழங்கியுள்ளது. எனினும், இயல்பாகவும் மார்க்க ரீதியாகவும் சட்ட ரீதியாகவும் வேதக்காரப் பெண் மீது அவருக்கு கிடைக்கின்ற அதிகாரத்தின் மூலம் அவளது நம்பிக்கைக் கோட்பாட்டுக்கோ மதச் சுதந்திரத்துக்கோ எதுவித ஆபத்தும் நேரப் போவதில்லை; ஏனெனில் அவளது மதத்தையும் அவளுக்கு இருக்கின்ற நம்பிக்கைச் சுதந்திரத்தையும் மதித்து நடக்குமாறு இஸ்லாம் முஸ்லிமான கணவனுக்கு ஏவியுள்ளது. ஏனெனில் அக் கணவன் அவளது நபிமார்களையும், அவளது நம்பிக்கைகள் பிறந்துள்ள அடிப்படை மூலத்தின் தூய்மையையும் ஈமான் கொண்டிருக்கின்றான். அவளது மதமும் நம்பிக்கைக் கோட்பாடும் முன்னர் அருளப்பட்ட தூதாக இருப்பதால் அவை தனது மதத்தோடும் நம்பிக்கைக் கோட்பாட்டோடும் முரண்படப் போவதில்லை என்றும்[6], அழகிய முறையில் அவளோடு மார்க்க ரீதியான உரையாடலில் ஈடுபடுவதும் அழைப்பு விடுப்பதுமே தனது கடமை என்றும் அவன் ஈமான் கொண்டிருக்கின்றான்.

*"முஃமின்களே! நீங்கள் அல்லாஹ்வின் மீதும், அவனுடைய தூதர் மீதும், அவன் தூதர் மீது அவன் இறக்கிய (இவ்) வேதத்தின் மீதும், இதற்கு முன்னர் இறக்கிய வேதங்களின் மீதும் ஈமான் கொள்ளுங்கள். எவர் அல்லாஹ்வையும், அவனுடைய மலக்குகளையும், அவனுடைய வேதங்களையும், அவனுடைய தூதர்களையும், இறுதி நாளையும் (நம்பாமல்) நிராகரிக்கிறாரோ அவர் வழிகேட்டில் வெகு தூரம் சென்றுவிட்டார்." (4:136)*

*"(முஃமின்களே!) 'நாங்கள் அல்லாஹ்வையும், எங்களுக்கு இறக்கப்பட்ட (வேதத்)தையும் இப்ராஹீம், இஸ்மாயீல், இஸ்ஹாக், யஃகூப் இன்னும் அவரது சந்ததியினருக்கு இறக்கப்பட்டதையும், மூஸாவுக்கும் ஈஸாவுக்கும் கொடுக்கப்பட்டதையும், மற்ற நபிமார்களுக்கும் அவர்களின் இறைவனிடமிருந்து கொடுக்கப் பட்டதையும் நம்புகிறோம்; அவர்களில் ஒருவருக்கிடையேயும் நாங்கள் வேறுபாடு காட்ட மாட்டோம்; நாங்கள் அவனுக்கே முற்றிலும் வழிப்படுகிறோம்' என்று கூறுவீர்களாக".(2:136)*

*"இன்னும், (முன்னிருந்த) நபிமார்களுடைய அடிச்சுவடுகளிலேயே மர்யமின் குமாரராகிய ஈஸாவை, அவருக்கு முன் இருந்த தவ்ராத்தை உண்மைப்படுத்துபவராக நாம் தொடரச் செய்தோம். அவருக்கு இன்ஜீலயும் கொடுத்தோம். அதில் நேர்வழியும் ஒளியும்*

*இருந்தன. அது தனக்கு முன்னிருக்கும் தவ்ராத்தை உண்மைப்படுத்துவதாக இருந்தது. அது பயபக்தியுடையவர்களுக்கு நேர்வழி காட்டியாகவும் நல்லுபதேசமாகவும் இருந்தது". (5:46)*

*"நிச்சயமாக அல்லாஹ்வையும் அவன் தூதர்களையும் நிராகரிப்பவர்கள் அல்லாஹ்வுக்கும் அவன் தூதர்களுக்குமிடையே பாகுபாடு செய்ய விரும்பி, 'நாம் (அத்தூதர்களில்) சிலர் மீது ஈமான் கொள்வோம் சிலரை நிராகரிப்போம்' என்று கூறுகின்றனர். (குஃப்ருக்கும் ஈமா னுக்கும்) இடையே ஒரு வழியை உண்டாக்கிக் கொள்ள அவர்கள் நினைக்கிறார்கள்". (4:150)*

*"நூஹுக்கு எதனை அவன் உபதேசித்தானோ, அதனையே உங்களுக்கும் மார்க்கமாக்கியிருக்கின்றான். ஆகவே (நபியே) நாம் உமக்கு வஹீ மூலம் அறிவிப்பதும், இப்றாஹீமுக்கும், மூஸாவுக்கும், ஈஸாவுக்கும் நாம் உபதேசித்ததும் என்னவென்றால், 'நீங்கள் (அனைவரும்) சன்மார்க்கத்தை நிலை நிறுத்துங்கள்;அதில் பிரிந்து விடாதீர்கள்' என்பதே". (42:13)*

*"(இறை) தூதர், தம் இறைவனிடமிருந்து தமக்கு அருளப்பெற்றதை நம்புகிறார்; (அவ்வாறே) முஃமின்களும் (நம்புகின்றனர். இவர்கள்) யாவரும் அல்லாஹ்வையும், அவனுடைய மலக்குகளையும், அவனுடைய வேதங்களையும், அவனுடைய தூதர்களையும் நம்புகிறார்கள். 'நாம் இறைத் தூதர்களில் எவரையும் பிரித்து வேற்றுமை பாராட்டுவதில்லை. இன்னும், நாங்கள் செவிமடுத்தோம்; (உன் கட்டளைகளுக்கு) வழிப்பட்டோம்.எங்கள் இறைவனே! உன்னிடமே மன்னிப்புக் கோருகிறோம்; (நாங்கள்) மீளுவதும் உன்னிடமே!' என்று அவர்கள் கூறுகிறார்கள்." (2:285)*

*"ஈமான் கொண்டவர்களாயினும், யூதர்களாயினும், கிறிஸ்தவர்களாயினும், ஸாபியீன்களாயினும், நிச்சயமாக எவர் அல்லாஹ்வின் மீதும் இறுதி நாள் மீதும் நம்பிக்கை கொண்டு, ஸாலிஹான (நல்ல) அமல்கள் செய்கிறார்களோ அவர்களின் (நற்)கூலி நிச்சயமாக அவர்களுடைய இறைவனிடம் இருக்கிறது. மேலும், அவர்களுக்கு யாதொரு பயமும் இல்லை. அவர்கள் துக்கப்படவும் மாட்டார்கள்". (2:62)*

*"பின்னர் அவர்களுடைய (அடிச்) சுவடுகளின் மீது (மற்றைய) நம் தூதர்களைத் தொடரச் செய்தோம். மர்யமின் குமாரர் ஈஸாவை (அவர்களை)த் தொடரச் செய்து, அவருக்கு இன்ஜீலயும் கொடுத்தோம்;*

*அவரைப் பின்பற்றியவர்களின் இதயங்களில் இரக்கத்தையும் கிருபையையும் உண்டாக்கினோம்". (57:27)*

*"நிச்சயமாக நம் தூதர்களைத் தெளிவான அத்தாட்சிகளுடன் அனுப்பினோம். அன்றியும், மனிதர்கள் நீதியுடன் நிலைப்பதற்காக, அவர்களுடன் வேதத்தையும் (நீதத்தின்) துலாக்கோலையும் இறக்கி னோம்". (57:25)*

*"இன்னும், (நபியே!) நாம் உம்மை மனித குலம் முழுமைக்கும் நன் மாராயம் கூறுபவராகவும், அச்சமூட்டி எச்சரிக்கை செய்பவ ராகவுமே அன்றி (வேறு எவ்வாறும்) அனுப்பவில்லை. ஆனால் மனிதர்களில் பெரும்பாலோர் (இதை) அறியமாட்டார்கள்." (34:28)*

*"திட்டமாக நாம் உமக்கு முன்னர் தூதர்களை அனுப்பியிருக் கின்றோம். அவர்களில் சிலருடைய வரலாற்றை உமக்குக் கூறியுள் ளோம். இன்னும் எவர்களுடைய வரலாற்றை உமக்குக் கூறவில்லை யோ (அவர்களும்) அத்தூதர்களைச் சேர்ந்தவர்களே. (இவ்விருசாரா ரில்) எந்தத் தூதருக்கும் அல்லாஹ்வின் அனுமதியின்றி எந்த அத்தாட்சி யையும் கொண்டு வருவதற்கு (அதிகாரம்) இல்லை. அல்லாஹ் வுடைய கட்டளைவரும் போது, (அனைவருக்கும்) நியாயமாகத் தீர்ப் பளிக்கப்படும். அந்த இடத்தில் பொய்யர்கள்தாம் நஷ்டமடை வார்கள்". (40:78)*

*"நிச்சயமாக நாம்தான் (நினைவூட்டும்) இவ்வேதத்தை (உம்மீது) இறக்கி வைத்தோம்; நிச்சயமாக நாமே அதன் பாதுகாவலராகவும் இருக்கின்றோம்". (15:09)*

வேதக்கார ஆண் ஒருவர் அல்லது முஸ்லிமல்லாத ஒருவர் முஸ் லிமான பெண்ணைத் திருமணம் செய்வதற்கு இஸ்லாம் அனுமதிக் காமல் இருப்பதும் இதற்காகவே. ஏனெனில் அவர் அவளது மதத்தை யோ அவளது நபியின் புனிதத் தன்மையையோ அவளது நம்பிக்கைக் கோட்பாட்டையோ அவசியம் விசுவாசம் கொண்டிருப்பார் என்பதற் கில்லை. அந்த வகையில், பல சந்தர்ப்பங்களில் அவரது அதிகாரம் உள ரீதியாகவும் மத ரீதியாகவும் சட்டரீதியாகவும் அவளுக்கும் அவ ளது பிள்ளைகளுக்கும் பாதிப்பேற்படுத்த வாய்ப்புள்ளது. ஏனெனில் சட்ட ரீதியாகவும், மானசீக ரீதியாகவும் அவளதும் பிள்ளைகளதும் மதம், நம்பிக்கைக் கோட்பாடு, பராமரிப்பு என்பவற்றினது மொத்த உரிமை அவருக்கே இருப்பதால், அவர் அவளது மதத்தையும் நம்பிக் கைக் கோட்பாட்டையும் நபியின் புனிதத் தன்மையையும் பொய் யாகக் காட்டி அவர்களை வளர்க்க முடியும்.

*இந்த வகையில்தான், சமூகப் பாதுகாப்பை ஏற்படுத்துவதற்காக வும், குடும்பத்தைச் சிதைத்து சமூக மட்டத்தில் மனக் கசப்புகளை ஏற்படுத்துகின்ற முரண்பாட்டுக் காரணிகளை நீக்குவதற்காகவும் இஸ் லாம் ஒரு விடயத்தை வலியுறுத்துகிறது. அதாவது,யார் தன்னை முஸ்லிம் என பிரகடனம் செய்கிறாரோ அவர் (முஸ்லிமாகப் பிறந்த வராயினும் சரி; இஸ்லாத்தினுள் நுழைந்தவராயினும் சரி) தனது மனைவி, பிள்ளைகள் மற்றும் குடும்பத்திலுள்ள பெண்கள், சிறுவர் கள், தமது வாழ்வாதாரத் தேவைகளை கண்ணியமாக நிறைவேற்றிக் கொள்ள சக்தியற்றிருக்கும் உறுப்பினர்கள் அனைவரையும் நிர்வகிக் கவும்,பொருளாதார மற்றும் பண்பாட்டு ரீதியாகப் பராமரிக்கவுமான பொறுப்பை சட்ட ரீதியாக ஏற்பவராகவும் மார்க்க ரீதியாக விரும்பு பவராகவும் இருக்க வேண்டும் என இஸ்லாம் எதிர்பார்க்கிறது. எனவே ஒரு தாய் தொடர்பாகவும், இஸ்லாத்தினதும் அதன் தூதரதும் புனிதத் தன்மையை விசுவாசிக்காது வெளியேறிச் செல்லும் தந்தை தொடர்பாகவும் நீதியாக நடந்து கொள்ளும் முறையை அவர் அறிந் திருப்பது அவசியம். ஏனெனில் குறித்த தந்தை இவ்வெளியேற் றத்தின் மூலம் முஃமினான தனது மனைவியை விவாகம் செய்யும் போது பொருந்திக் கொண்ட நிபந்தனைகளுக்கு மாறு செய்தவராகி விடுகிறார். அந்த மனைவி ஒரு தாயாக இருப்பதால் தனது பிள்ளை முதிர்ச்சியின் வயதெல்லையான பதினைந்து வயதை அடையும் வரை அதனைப் பராமரிக்க மிகவும் அருகதை உடையவளாவாள். அவ் வாறே குழந்தையானது அதனது தந்தையுடனான உறவுக்குப் பாதிப் பின்றித் தனது தாயின் மார்க்கமான இஸ்லாத்தில் தொடர்ந்திருப் பதுதான் அதற்கு நன்மை பயப்பதாகவும் அதன் உணர்வு ரீதியான தொடர்பைப் பாதுகாக்க உதவுவதாகவும் அமையும். குழந்தை இவ்வாறு முஸ்லிமாகவே இருப்பதன் மூலம் தனது தாயின் மதமான இஸ்லாத்தையும் மதித்து நடக்கும்; தனது தந்தை கிறிஸ்தவராகவோ அல்லது யூதராகவோ இருந்தால் அவரது மதத்தையும் மதித்து நடக்கும். ஏனெனில் இஸ்லாம் இந்த மதங்களையும் அவற்றின் நபி மார்களையும் மாத்திர மின்றி நெருப்பு வணங்கிகள் உள்ளடங்கலான அனைத்து மத நம்பிக்கைகளையும் மதிக்கிறது. இவ்வாறு இஸ்லாத் தின் நம்பிக்கைக் கோட்பாட்டுக்கு ஊடாக குழந்தை தனது தந்தையின் மதத்தையோ அதன் நபிமார்களையோ பரிகசிக்காத அதே நேரம் தனது தாயின் மதமான இஸ்லாத்தையும் அதன் நபியையும் மதித்து நடக்கின்ற பண்பாட்டுப் போஷிப்பைப் பெறுகிறது.*

உண்மையில் ஒரு பிள்ளை பருவ முதிர்ச்சி அடையும் போது, தான் விரும்புகின்ற மதத்தை –அது எதுவாயினும்– பின்பற்றுகின்ற உரிமை அதற்கு உண்டு. இது இஸ்லாம் அனைவருக்குமாக வழங்கிய நம்பிக்கைக் கோட்பாட்டுச் சுதந்திரத்தை சார்ந்ததாகும்.

*'மார்க்கத்தில் நிர்ப்பந்தமில்லை'.*

*"நீர் மக்கள் முஃமின்களாக இருக்க வேண்டும் என்பதற்காக அவர்களை நிர்ப்பந்திக்கிறீரா?".*

*"யார் விரும்புகிறாரோ அவர் நம்பிக்கை கொள்ளட்டும்; யார் விரும்புகிறாரோ அவர் நம்பிக்கை கொள்ளாது மறுக்கட்டும்".*

மேற் சொல்லப்பட்ட சட்ட ரீதியான மற்றும் மார்க்க ரீதியான இந்தப் பிரிப்பு முறை மிக முக்கியமானதாகும். அப்போதுதான் மத ரீதியாகவும் சமூக ரீதியாகவும் குழுமங்களுக்கு மத்தியில் பாதுகாப்பும் ஸ்திரப்பாடும் காணப்படும்; சமூகத்தில் வாழும் அனைவரினதும் மத ரீதியான, நம்பிக்கைக் கோட்பாட்டு ரீதியான, உடன்படிக்கைகள் மூலமான உரிமைகள் பேணப்படும்; பல்வேறு உள நோய்களும் உள் நோக்கங்களும் கொண்டவர்கள் முஸ்லிம்களின் சமூகங்களுக்குள்ளே வாழும் பல்வேறு தனிமனிதர்களுக்கும் இனக் குழுமங்களுக்கும் மத்தியில் பிரச்சினைகளை விதைக்க முனைவதை தடுத்து நிறுத்த முடியும்.

### முஸ்லிம் சிறுபான்மைகளும் வேறுபட்ட மதங்களும்

முஸ்லிமல்லாத நாடுகளில், குறிப்பாக மேற்கு நாடுகளில் வாழும் முஸ்லிம் சிறுபான்மைகளின் நிலை பற்றிய உரையாடல் மாத்திரம் எஞ்சியிருக்கிறது. புலம் பெயர்ந்தவர்களும், இஸ்லாத்தை ஏற்றுக் கொண்ட உள்ளூர்வாசிகளுமாக அங்கு முஸ்லிம்களின் எண்ணிக்கை பெருகி வருகிறது.

இந்த நாடுகளில் வாழும் முஸ்லிம்களின் நிலையும் சூழலும் இஸ்லாமிய நாடுகளில் வாழும் முஸ்லிம்களின் நிலையையும் சூழலையும் விட பல விதத்தில் வித்தியாசமானவை. ஏனெனில், இம் மேற்கு நாடுகளில் வாழும் வெகுமக்கள் பின்பற்றும் மதங்கள் அம்மக்களது செயற்பாடுகளிலோ, வாழ்வு மற்றும் பிரபஞ்சம் பற்றிய அவர்களது பார்வையிலோ எதுவிதத் தாக்கத்தையும் செலுத்த திராணியற்றுப் போயுள்ளன. எதிர்மறையான சில வரலாற்றுக் காரணங்களும் நடவடிக்கைகளும் மட்டுமன்றி, இம்மதங்களை வெறும் புராணச் சடங்கு

களாக மாற்றி விடும் அளவுக்கு அவற்றில் ஏற்பட்ட திரிபுகளுமே இந் நிலைக்கு வழிகோலின. இவ்வளவுக்கும் அங்குள்ள தேவாலயங்கள் பெரும் செல்வம் படைத்தவையாகவும் சுதந்திரமான செயற்பாடு கொண்டவையாகவுமே உள்ளன.

இதனால்தான் ஐரோப்பிய யூனியன் தனக்கான யாப்பை வடி வமைக்கும் போது அதில் இந்த மதங்களைப் பற்றியும், தனது கலா சாரத்தில் அவற்றின் தாக்கம் பற்றியும் குறிப்பிடப்படுவதை ஏற்க வில்லை. இது விடயத்தில் அப்போதைய வத்திக்கானின் பாப்பரசரின் வேண்டுகோளையும் அது பொருட்படுத்தவில்லை. ஏனெனில் முழு மொத்தமாகப் பார்க்கையில் ஐரோப்பிய சமூக வெகுமக்கள் மதம் சார்ந்த சமூகங்களாக தொடர்ந்தும் இருக்காமல், 'அறியாவாதி' களாக (Agnostics) மாறி விட்டனர். அதாவது, இந்தப் பிரபஞ்சத்தின் பின் னால் மிகப் பிரமாண்டமான சக்தியொன்று இருப்பதாக அவர்கள் இயல்பாகவே புரிந்து வைத்திருக்கிறார்கள். எனினும் அவர்களது மதங்களில் –அவற்றின் பௌராணிகத் தன்மை காரணமாகவும் உள் ளீடின்மை காரணமாகவும்– அது பற்றிய திருப்தியான, பொருள் செறிந்த பதில்கள் அவர்களுக்குக் கிடைக்கவில்லை. அந்த வகையில் அவர்கள் நாஸ்திகர்கள் அல்லர்; அதேநேரம் மதவாதிகளும் அல்லர். மத விவகாரத்தை அவர்கள் ஒருபுறம் வைத்துவிட்டார்கள். எனவே இந்த வாழ்வின் பொருள் பற்றியோ வாழ்வுக்குப் பின்னாலுள்ளவை பற்றியோ அவர்களுக்குத் தெரியாது. வாழ்வு பற்றி அவர்கள் அறிந்திருப்பதெல்லாம் அதன் சட ரீதியான, புலவயப்பட்ட, நிகழ் கால தோற்றப்பாடு மாத்திரமே. அதாவது மதம் பற்றியோ, அது தொடர் பான மறைவான விடயங்கள்பற்றியோ, இந்த வாழ்க்கையின் பின்னாலுள்ள விடயங்கள் பற்றியோ, இந்த வாழ்வின் நோக்கம் மற்றும் முடிவு பற்றியோ அவர்களுக்கு எதுவும் தெரியாது என்பது மட்டுமன்றி, அவர்கள் இவை பற்றி அலட்டிக் கொள்வதுமில்லை. இவற்றை அறிந்து கொள்வதற்கான திருப்திகரமான வழிமுறையும் அவர்களிடம் இல்லை. இந்த வகையில் அவர்கள் 'அறியாவாதி' களாக (Agnostics) உள்ளனர். இன்று வட அமெரிக்காவிலும், அதன் நகரங்களிலும், அவற்றின் கிழக்காகவும் மேற்காகவும் உள்ள பிரமாண் டமான குடியிருப்புகளிலும் உள்ள அநேக வெகுமக்கள் தமது வாழ்வு பற்றியும் செயற்பாடுகள் பற்றியும் கொண்டுள்ள நிலைப்பாடானது, மேற்குறித்த ஐரோப்பிய 'அறியாவாதி'களது மதம் (Agnosticism) தொடர்பான நிலைப்பாட்டிலிருந்து வேறுபட்டதல்ல.

மதத்தைப் பொருட்படுத்தாத இந்த நிலைப்பாடும், மதம் குறித்த தனிநபர் நிலைப்பாடும் முஸ்லிம்–முஸ்லிமல்லாதவர் உறவில் பல முக்கிய தாக்கங்களையும் பரிமாணங்களையும் அந்நாடுகளில் ஏற் படுத்தியிருக்கின்றன. அங்குள்ள பலமக்கள், குறிப்பாக பெண்கள், இன்று இஸ்லாத்தை தழுவி வருகின்றனர்.

இப்பின்னணியில், அந்நாடுகளில் அடிக்கடி கேட்கப்படும் ஒரு கேள்வி இருக்கிறது: இஸ்லாத்தை ஏற்றுக் கொண்ட பெண், (அறி யாமையாலோ அக்கறையின்மையாலோ) இஸ்லாத்தை ஏற்காதிருக் கும் தனது கணவர் தொடர்பாக என்ன நிலைப்பாட்டை எடுக்க வேண்டும்? அவரிடமிருந்து விவாகரத்து கோர வேண்டுமா? அதிலும் அந்தப் பெண் வயது முதிர்ந்தவளாகவும் குழந்தைகள் கொண்டவளாக வும் இருந்தால், குடும்பம் சிதைவுறுவதோடு திருமணத்தின் ஊடாக எதிர்பார்க்கப்படும் உரிமைகளும் இல்லாது போக முடியும். மாத்திர மின்றி, தந்தையின் பராமரிப்பு பிள்ளைகளுக்கு கிடைக்காமல் போகும் நிலையும் ஏற்படலாம். இந்நிலையில் என்ன செய்வது? இதுதான் அந்தக் கேள்வி.

முஸ்லிமல்லாத இச்சமூகங்களது நிலை பற்றியே இங்கு கேள்வி எழுகிறது. ஏனெனில் –நாம் ஏலவே குறிப்பிட்டது போல்– முஸ்லிமல்லாதோருள் பெரும்பான்மையினர் தமது வாழ்வில் மதத் துக்கு முக்கியத்துவம் வழங்குவதில்லை; மனைவியோ பிள்ளைகளோ தாம் விரும்பிய எந்த மதத்தையும் ஏற்றுக் கொள்வது பற்றி அவர்கள் அலட்டிக் கொள்வதேயில்லை.

இது போன்ற நிலைமைகளில் தன் மீதோ தன் பிள்ளைகள் மீதோ தனது கணவர் மானசீக அழுத்தத்தைப் பிரயோகிப்பார் என்ற அச்சம் பெண்ணுக்கு இல்லாது போகிறது. அவ்வாறே தந்தை தனது பிள்ளை களைப் பராமரிப்பதில் குறைபாடு செய்து விடுவார் என்ற அச்சமும் இல்லாது போகிறது. குறித்த பெண் இஸ்லாத்தில் நுழைவதையோ, தனது பிள்ளைகளை இஸ்லாமிய அடிப்படையில் வளர்ப்பதையோ அவர் மறுத்து விடுவார் என்ற அச்சமும்கூட இல்லாது போகிறது. இங்கு ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையிலான வித்தியாசம் யாதெனில், அந்நாடுகளில் யார் இஸ்லாத்தைத் தழுவிக் கொள்கி றாரோ அவர் தன்னைச் சூழவுள்ள ஏனையோரை விட மாறுபட்ட தொரு நிலையை அடைகின்றார் என்பதே. இந்நிலையில் அவர் தனது மார்க்க விட யத்தில் கரிசனை செலுத்தி அதனைப் பேணிவாழ வேண்டியவராகிறார். இஸ்லாம் அதனைத் தழுவியவரது வாழ்வோடு

கொண்டிருக்கும் தொடர்பும் அதன் தனித்தன்மையுமே இதற்குக் காரணமாகும்.

இது போன்ற நிலைமைகளில் குறித்த மனைவி யாது செய்ய வேண்டும்? குடும்பத்தை நல்ல முறையில் நடத்துகின்ற அதேநேரம், மனைவி இஸ்லாத்தை ஏற்றதற்காக அவளுக்கோ பிள்ளைகளுக்கோ எதுவித பாதிப்பையும் ஏற்படுத்தாத கணவனிடமிருந்து அவள் விவாக ரத்துக் கோருவதால் அவளதும் பிள்ளைகளதும் நிலை என்னவாகும்? அதனால் அவர்கள் எத்தகைய சிக்கல்களை எதிர்நோக்க வேண்டி வரும்..?

மட்டுமன்றி, கணவரும் காலவோட்டத்தில் இஸ்லாத்தில் நுழைவார் என்ற நம்பிக்கையும் அவளிடம் இருக்க முடியும். அநேக பெண்களது கணவர்கள் அங்கு பலசந்தர்ப்பங்களில் இவ்வாறு இஸ்லாத்தில் நுழைந்திருக்கிறார்கள். மனைவி கணவனுடன் நல்ல முறையில் நடந்து கொள்வதன் மூலமும், இஸ்லாமிய குடும்ப உறவுகள் பலம் பெற்று இருப்பதன் மூலமும், ஆண்கள் தமது மனைவியராலும் பிள்ளைகளாலும் சிறந்த முறையில் தாக்கமுறுவதாலும் இது நிகழ்கின்றது.

ஆக – இவ்வாறான நிலைகளில் பெண்ணினதும் பிள்ளைகளதும் பாதுகாப்புக்குப் பங்கமென இஸ்லாம் கருதக்கூடிய எந்தவொரு அம்சமும் ஏற்படப் போவதில்லை என்பதை எம்மால் விளங்கிக் கொள்ள முடிகின்றது. எனவே நலன் (மஸ்லஹா) அடிப்படையிலும், தீங்கு ஏற்படாமல் தடுக்கும் நோக்கிலும், கணவன்–மனைவியைப் பிரித்து விடுவதோ அல்லது மனைவி கணவனிடமிருந்து விவாக விலக்கு கோருவதோ கட்டாயமானதாக மாறாதிருப்பதே உகந்ததல்லவா? ஏனெனில் இவ்வாறு அவர்களைப் பிரித்து விடுவதால் வெளிப்படையாக எந்த நலனும் ஏற்பட்டு விடப் போவதில்லை என்பது மட்டுமன்றி, அதனால் மோசமான விளைவுகளும் ஏற்படக் கூடுமல்லவா?[7]

இது விடயத்தில் பலவிதமான கருத்துக்கள் கூறப்படுகின்றன. எனினும் முஸ்லிம்கள் சிறுபான்மையாக இருக்கையில், குறிப்பாக மேற்கில் அவர்கள் எதிர்கொள்கின்ற சூழமைவும் இஸ்லாமிய நாடுகளில் வாழும் முஸ்லிம்கள் எதிர்கொள்கின்ற சூழமைவும் வித்தியாசமானவை என்பது தெளிவான விடயமாகும். ஷரீஆவின் நோக்கங்களையும் முஸ்லிம்களின் நலன்களையும் மிகச் சரியாக அடையப் பெறுவதற்காக ஒவ்வொரு சூழமைவும் அதற்கேயுரிய அமைப்பில் அணுகப்பட வேண்டும். அந்த நாடுகளில் வாழும் முஸ்லிம்களின்

சூழ் நிலைகளும் அவர்களது கொள்கைகளும் நடைமுறைகளும் வழக்காறுகளும் இந்த அடிப்படையிலேயே நோக்கப்பட வேண்டும்.

எனவே, ஒரு பெண் இஸ்லாத்துள் நுழைந்தும் அவளது கணவர் நுழையாத நிலையில், அவளுக்கும் அவளது பிள்ளைக்கும் மார்க்க ரீதியிலும் வேறு வகையிலும் அவரால் எதுவிதப் பிரச்சினையும் ஏற்படாது என்றிருக்குமானால், அச்சந்தர்ப்பத்தில் அவள் பிரிவினையைக் கோரி குடும்பச் சிதைவை ஏற்படுத்தி, பிள்ளைகளை அநாதைகளாக்குவது அவளுக்கு பயனளிக்கப் போவதில்லை. அவ்வாறில்லாத சந்தர்ப்பத்தில், முஸ்லிமான மனைவி தனதும் தனது பிள்ளைகளதும் மார்க்க விடயங்களைப் பாதுகாப்பதற்காக வேண்டி பிரிவினையைக் கோருவதும் தனது பிள்ளைகளின் பராமரிப்பைக் கோருவதும் அவள் மீது கடமையாக மாறி விடும். அப்போதுதான் அவளதும் அவளது பிள்ளைகளதும் மார்க்க விவகாரங்களுக்கு பாதுகாப்புக் கிட்டும்; மதச் சுதந்திரமும் அவர்களுக்கு பூரணமாகக் கிடைக்கும்.

சிறுபான்மை முஸ்லிம் நாடுகளில் காணப்படும் இந்த நிலைமையானது முஸ்லிம் நாடுகளில் இது விடயத்தில் காணப்படும் நிலைமைகளை விட வித்தியாசமானதாக இருக்கின்றது என்ற உண்மை இங்கு மீண்டும் உறுதியாக உணரப்பட வேண்டும். ஏனெனில் முஸ்லிம் நாடுகளில் வாழும் ஒருவர் இஸ்லாத்தை விட்டும் மதம் மாறுவதானது நம்பிக்கை சார்ந்த, தெளிவான உள நிலையில் எடுக்கப்பட்ட முடிவாகவே கருதப்படும். ஏனெனில் வேண்டுமென்றே இஸ்லாத்தை விட்டும் மதம் மாறுகின்ற ஒருவர் மத விடயங்களைப் பொருட்படுத்தவே மாட்டார். எனவே இஸ்லாத்தை விட்டும் ஒருவர் வெளியேறி, தனது முஸ்லிமான தாயின் மார்க்கத்துக்கு முரணான மதத்துக்கு மாறுவதன் மூலம் அவரது மனைவி, பிள்ளைகளுக்கு ஏற்படும் நிலை மேற்கில் வாழும் இத்தகைய பெண்ணுக்கு ஏற்படும் நிலையை விட வித்தியாசமானதாகிறது.

இன்னொரு விடயத்தையும் ஞாபகப்படுத்த வேண்டும். இங்கு பராமரிப்பு என்பதன் முழு அர்த்தம் மத ரீதியான பராமரிப்பே. பிள்ளைக்குரிய அனைத்து விதமான பராமரிப்பும் –அது எவ்வாறானதாக இருப்பினும்– முழுக்க முழுக்க பிள்ளையின் நலனை அடிப்படையாகக் கொண்டதாகவே அமைய வேண்டும். ஒரு பிள்ளைக்கு தனது பெற்றோரில் ஒருவரோடு மாத்திரமன்றி இருவரோடும் இருக்கக் கூடிய மிகச் சிறந்த உறவு, அது இஸ்லாமிய வழியில் எப்படிப் பயிற்றுவிக்கப் படுகிறது என்பதோடு தொடர்பு பட்டிருக்கிறது. அது

பிள்ளையின் நலனுடன் தொடர்புபட்டது. பெற்றோர் ஒவ்வொரு வரதும் கண்ணியமும் அதில் தங்கியிருக்கிறது. இந்த விடயத்தைப் பற்றியும் பிள்ளையின் மனோநிலையில் அது ஏற்படுத்தும் தாக் கங்களைப் பற்றியும் பெற்றோருக்கு விழிப்புணர்வூட்ட வேண்டி யிருக்கிறது. அப்போது தான் தனது பெற்றோரில் ஒருவரது மதம் வித்தியாசப்படுகின்ற காரணத்தால் அவரை இழிவாக நோக்கும் நிர்ப்பந்த நிலை பிள்ளைக்கு ஏற்படாது. மட்டுமன்றி, இஸ்லாம் ஏவுவதைப் போல் அவர்களிருவரையும் கௌரவப்படுத்தி, அவர் களுக்குக் கட்டுப்பட்டு, தந்தையின் மதத்தை மதித்து வாழ்வதற்கும் அது உந்தப்படும்.

*“மேலும், அல்லாஹ்வையே வழிபடுங்கள். அவனுடன் எதனை யும் இணை வைக்காதீர்கள். மேலும், தாய் தந்தையர்க்கும் நெருங்கிய உறவினர்களுக்கும் அநாதைகளுக்கும் ஏழைகளுக்கும் அண்டை வீட் டிலுள்ள உறவினர்களுக்கும் அருகிலுள்ள அண்டை வீட்டாருக்கும், (பிரயாணம், தொழில் போன்றவற்றில்) கூட்டாளிகளாக இருப்போருக் கும், வழிப்போக்கர்களுக்கும், உங்களிடமுள்ள அடிமைகளுக்கும் அன்புடன் உபகாரம் செய்யுங்கள்”. (4:36)*

*“அவனையன்றி (வேறு எவரையும்) நீர் வணங்கலாகாது என்றும், பெற்றோருக்கு நன்மை செய்யவேண்டும் என்றும் உம்முடைய இறைவன் விதித்திருக்கின்றான். அவ்விருவரில் ஒருவரோ அல்லது அவர்கள் இருவருமோ உம்மிடத்தில் முதுமை அடைந்து விட்டால், அவர்களை ‘ஊஃப்” (சீ) என்று (சடைந்தும்) சொல்ல வேண்டாம்; அவ்விருவரையும் (உம்மிடத்திலிருந்து) விரட்ட வேண்டாம்; இன் னும் அவ்விருவரிடமும் கனிவான, கண்ணியமான பேச்சையே பேசு வீராக!” (17:23)*

*“தன் தாய் தந்தையருக்கு நன்மை செய்யும்படியாக நாம் மனிதனுக்கு வஸிய்யத்து செய்திருக்கிறோம். எனினும், (மனிதனே!) உனக்கு அறிவு இல்லாத ஒன்றை எனக்கு இணையாக்கும்படி அவ்விருவரும் உன்னை வற்புறுத்தினால், நீ அவ்விருவருக்கும் கீழ்ப்படிய வேண்டாம். என்னிடமே உங்கள் அனைவரின் மீளுதலும் இருக்கிறது. நீங்கள் செய்து கொண்டிருந்தவை பற்றி அப்போது நான் உங்களுக்கு அறிவிப்பேன்”. (29:08)*

*“ஆனால், நீ எது பற்றி அறிவு (ஆதாரம்) பெற்றவனாக இல்லை யோ அதனை எனக்கு இணை வைக்குமாறு உன்னை அவ்விருவரும் வற்புறுத்தினால் அப்போது நீ அவ்விருவருக்கும் வழிப்பட வேண் டாம். ஆனால் இவ்வுலக வாழ்க்கையில் அவ்விருவருடனும் அழகிய*

*முறையில் உறவு வைத்துக் கொள். (யாவற்றிலும்) என்னையே நோக்கி நிற்போரின் வழியையே நீ பின்பற்றுவாயாக. பின்னர் உங்கள் (அனைவருடைய) மீளுதலும் என்னிடமேயாகும். நீங்கள் என்ன செய்து கொண்டிருந்தீர்கள் என்பதை (அப்போது) நான் உங்களுக்கு அறிவிப்பேன்". (31:15)*

*"(நபியே! அவர்களிடம்,) 'வேதத்தையுடையோரே! நமக்கும் உங்களுக்குமிடையே (இசைவான) ஒரு பொது விஷயத்தின் பக்கம் வாருங்கள்: (அதாவது) 'நாம் அல்லாஹ்வைத் தவிர வேறெவரையும் வணங்க மாட்டோம்; அவனுக்கு எவரையும் இணைவைக்க மாட் டோம்; அல்லாஹ்வை விட்டு நம்மில் சிலர் சிலரைக் கடவுளர்களாக எடுத்துக் கொள்ள மாட்டோம்' எனக் கூறுவீர்களாக! (முஃமின்களே! இதன் பிறகும்) அவர்கள் புறக்கணித்து விட்டால், 'நிச்சயமாக நாங்கள் முஸ்லிம்கள் என்பதற்கு நீங்கள் சாட்சியாக இருங்கள்!' என்று நீங்கள் கூறிவிடுங்கள்". (3:64)*

*"அப்பால், அவர்கள் தம் உடன்படிக்கையை முறித்து விட்டதால் நாம் அவர்களைச் சபித்தோம். அவர்களுடைய இருதயங்களை இறு கச் செய்தோம். (இறை)வசனங்களை அவற்றுக்குரிய (சரியான) இடங் களிலிருந்து அவர்கள் மாற்றுகிறார்கள். அவர்களுக்கு வழங்கப்பட் டிருந்த போதனையில் (பெரும்) பகுதியை அவர்கள் மறந்து விட்டார்கள்". (5:13)*

*"அவர்கள் அல்லாஹ்வை விட்டும் தம் பாதிரிகளையும், தம் சந்நியாசிகளையும் மர்யமுடைய மகனாகிய மஸீஹையும் தெய்வங் களாக்கிக் கொள்கின்றனர். ஆனால் அவர்களோ ஒரே இறைவனைத் தவிர (வேறெவரையும்) வணங்கக்கூடாதென்றே கட்டளையிடப்பட் டுள்ளார்கள், வணக்கத்திற்குரியவன் அவனன்றி வேறு இறைவன் இல்லை; அவன் அவர்கள் இணைவைப்பவற்றை விட்டும் மிகவும் பரிசுத்தமானவன்". (9:31)*

*"(நபியே!) அன்றியும்,அவர்கள் எதில் தர்க்கித்துக் கொண்டிருந் தார்களோ அதை நீர் தெளிவாக்குவதற்காகவே உம் மீது இவ் வேதத்தை இறக்கினோம். இன்னும், ஈமான் கொண்டுள்ள மக்களுக்கு (இது) நேரான வழியாகவும் அருளாகவும் இருக்கிறது". (16:64)*

*"(நபியே!) உம் இறைவனின் பாதையில் (மக்களை) விவேகத் துடனும், அழகிய உபதேசத்தைக் கொண்டும் அழைப்பீராக! இன் னும், அவர்களிடத்தில் மிக அழகான முறையில் தர்க்கிப்பீராக!" (16:125)*

*"எவர் அல்லாஹ்வின் பக்கம் (மக்களை) அழைத்து, ஸாலிஹான (நல்ல) அமல்கள் செய்து, 'நிச்சயமாக நான் (அல்லாஹ்வுக்கு முற்றிலும் வழிப்பட்ட) முஸ்லிம்களில் ஒருவனாக உள்ளவன்' என்று கூறுகின்றாரோ, அவரைவிட சொல்லால் அழகியவர் யார்?" (41:33)*

அகீதா ரீதியானதும் சட்ட ரீதியானதுமான தொடர்புகளின் பரிமாணங்களுக்கிடையில் குழப்பிக் கொள்ளாதிருப்பதற்கான பிரக்ஞையும் கவனமும் சமூகத் தலைவர்களுக்கும் அறிஞர்களுக்கும் அவசியம். அவ்வாறே மார்க்கம், உயிர், மானம் என்பவற்றைப் பாதுகாத்தல், நலன்களை வளர்த்து கெடுதிகளை அழித்தல், இரு தீங்குகளில் குறைந்த தரமுடையதைத் தெரிவு செய்தல் போன்ற தனிநபரினதும் சமூகத்தினதும் பாதுகாப்பை உறுதிப்படுத்துகின்ற அதேவேளை, கஷ்டம், பிரச்சினைகள், மதவாத குழுவாத மோதல்கள் என்பவற்றைத் தடுக்கக் கூடிய காரணிகளையும் அவர்கள் கண்டறிய வேண்டும். முறையான அறிவுப் பின்புலமும் ஆய்வுக் கண்ணோட்டமும் இல்லாத, விடயங்களை முழுமொத்தமாக அணுகி தீர்வுகளை முன்வைக்கும் திராணியற்ற தனி நபர்களோ குழுக்களோ இம்மாதிரியான சந்தர்ப்பங்களில் அவசரப்பட்டு பக்குவமற்ற பத்வாக்களை வழங்க முற்பட்டுவிடக் கூடாது.

ஜுஹா என அழைக்கப்படும் கோஜா நஸ்ருத்தீனின் வாழ்வில் நடந்த சம்பவமொன்றை சிந்தனைக்காக இங்கு பதிகின்றோம். பிறரது நலன்களைச் சிறிதும் பொருட்படுத்தாது தனது நலனில் மாத்திரம் குறியாக இருக்கின்ற தனது அண்டை வீட்டவருக்கு ஒரு பாடத்தைக் கற்பிக்க நினைத்த ஜுஹா, அந்த அண்டை வீட்டார் இருக்கின்ற இடத்துக்குச் சென்று, "அன்பரே!, எனது வீட்டுச் சுவரிலே காட்டுப் பூனை சிறுநீர் கழித்து விட்டது. இது பற்றிய மார்க்கத் தீர்ப்பென்ன?" எனக் கேட்டார். அப்போது அந்த அண்டை வீட்டார், "நீ அதனை ஏழு தடவைகள் உடைத்து உடைத்துக் கட்ட வேண்டும்" எனக் கூறினார். ஜுஹா சற்று மௌனம் சாதித்து விட்டு, "என்றாலும் அந்த சுவர் எனது வீட்டுக்கும் உமது வீட்டுக்கும் இடையில் உள்ளதே!" எனக் கூறினார். அண்டை வீட்டார் வாயடைத்துப் போனார். பிறகு ஜுஹாவைப் பார்த்து, "ஜுஹாவே சிறிதளவு நீர் போதுமானதாகும்" எனக் கூறினார். ஜுஹா அந்த அண்டை வீட்டாருக்கு கற்பிக்க நினைத்த பாடத்தை அவர் கற்றுக் கொண்டாரா இல்லையா என்பது இன்று வரை நமக்குப் புரியவில்லை.

மேலே சிறுபான்மைகளின் விடயத்தில் குறிப்பிடப்பட்ட விடயங்கள் அந்தந்த நாடுகளைச் சார்ந்த தலைவர்களதும், ஆலோசகர்களதும், அங்கு காணப்படும் ஷரீஆ நிறுவனங்களதும், பத்வா கவுன்ஸில்களதும் பார்வைக்கு வைக்கப்பட்ட ஓர் அபிப்பிராயமே. மார்க்கத்தின் பாதுகாப்பு மற்றும் முஸ்லிம்களதும் அவர்கள் வாழும் நாடுகளதும் தஃவா செயற்பாடுகளதும் நலன்கள் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு இதனை அவர்கள் பரிசீலிக்க முடியும்.

**குறிப்புக்கள்**

*1 – இமாம் மாலிக் முவத்தாவிலும் இமாம் புகாரி, இமாம் பைஹகீ ஆகியோர் தமது கிரந்தங்களிலும் இந்த ஹதீஸை அறிவித்துள்ளனர். இந்தக் கருத்தில் அபூ தவ்ர் இப்ராஹீம் பின் கல்பீ என்பவரைத் தவிர மற்ற அனைத்து இமாம்களும் உடன் படுகின்றனர். அவர் இமாம் ஷாபிஈ, இமாம் அஹ்மத் என்போரது மாணவர்களில் ஒருவர். மஜூஸிகள் அறுத்தவற்றை உண்பதும் அவர்களது பெண்களைத் திருமணம் செய்வதும் ஆகுமானது என அவர் கூறுகிறார். மஜூஸிகள் அறுத்தவற்றை உண்பது தடுக்கப்பட்டுள்ளமையானது அவர்கள் அவற்றின் விடயத்தில் அல்லாஹ் அல்லாத வற்றின் பெயரைக் கூறுவதாலாகும்; அல்லது அவர்கள் அறுவைப் பிராணிகளின் இரத்தத்தை ஓட்டாமல் இருப்பதோடு, அவர்கள் நெருப்பை வணங்குகின்ற காரணத் தால் அவற்றை நெருப்புக்குப் படைப்பதாலாகும். எனவே இதன் மூலம் அல்லாஹ் அல்லாதவற்றின் பெயர் கூறப்பட்டவையாக அவை மாறிவிடுகின்றன. "தானாகவே செத்ததும், இரத்தமும், பன்றியின் மாமிசமும், அல்லாஹ் அல்லாத பெயர் சொல்லப் பட்டதும் ஆகியவைகளைத்தான் உங்கள் மீது (அவன்) ஹராமாக ஆக்கியிருக்கிறான்."* (2:173). *அவர்களது பெண்களைத் திருமணம் செய்வதைப் பொறுத்தவரை, பாதினிய்ய நம்பிக்கைக் கோட்பாடுகள் பொதுவாகவும் மானவிய்ய நம்பிக்கைக் கோட்பாடுகள் குறிப்பாகவும் ஆண்–பெண் தொடர்புகளில் தாராண்மைச் சிந்தனைகளைத் தாராள மாகவே உள்வாங்கிக் கொண்டு விட்டன என்பது எல்லோரும் அறிந்த விடயமாகும்.*

*2 – சர்வதேச உறவுகள் பற்றிய இஸ்லாமியக் கோட்பாடு : சிந்தனை, இஸ்லாமிய வழிமுறை சார்ந்த புதிய போக்குகள் , இஸ்லாமிய சிந்தனைக்கான சர்வதேச நிறு வனம், வொஷிங்டன், அமெரிக்கா 1986.*

*3 – தஷாபுஹ்(முதஷாபிஹாத்) என்பதன் மூலம் குர்ஆனிய கருத்துக்களில் குழப்பம் இருக்கின்றது என்றோ அல்லது குர்ஆனிய மொழி வழக்கு தெளிவற்று இருக்கின்றது என்றோ கொள்ளப்படலாகாது. அல்குர்ஆனின் ஒவ்வொரு வசனமும் தெளிவானதும் விளக்கமானதும் ஆகும். "(அல்லாஹ்விடம்) அவர்கள் பயபக்தியுடன் இருப்பதற் காக, எத்தகைய (குறையும்) கோணலும் இல்லாத இந்த அல்குர்ஆனை அரபி மொழியில் (இறக்கி வைத்தோம்)" (39:28). எனவே சில அறிஞர்கள் கூறுவது போன்று, தஷாபுஹ் என்பது முன்னைய சமூகங்களின் மத்தியில் இடம்பெற்ற வரலாற்று நிகழ் வுகள், அவர்களுக்கு இறக்கப்பட்ட வேதங்கள் விடயத்தில் சில சமூகங்கள் திரிபுபடுத் தப்பட்ட வசனங்களையும் கட்டுக்கதைகளையும் கூறிய போது அவற்றில் காணப்பட்ட தெளிவற்ற விடயங்களைக் குறிப்பிடவே அல்குர்ஆன் இத்தகைய சொற்பிர யோகத்தைப் பயன்படுத்தியுள்ளது. சில விஷமிகள் அத்தகைய கதைகள் விடயத்தில் அல்குர்ஆனில் இடம்பெற்றுள்ள விளக்கமற்ற வசனங்களைப் பயன்படுத்தி இட்டுக் கட்டல்களையும் திரிபுபடுத்தல்களையும் மூலமாகக் கொண்டு இஸ்லாமியத் தூதை திரிபுபடுத்த முயற்சிக்கிறார்கள் என்ற உண்மையை அல்குர்ஆன் இங்கு உணர்த் துகிறது. அத்தகைய திரிபுபடுத்தப்பட்ட வசனங்களில் ஒரு சிலதை மாத்திரம் ஏற்றுக் கொள்வதே இஸ்லாமிய சிந்தனைக் கட்டமைப்பைச் சிதைத்து அதன் அடிப்படை களைத் தகர்த்து விட போதுமானதாகும். ஓர் உடலை அழித்துவிட ஒரு துளி விஷம் போதும். எனவே இஸ்லாமிய சிந்தனைக் கட்டமைப்புக்கும் அதன் இலக்குகள்,*

அடிப்படைகள், கோட்பாடுகள் என்பவற்றுக்கும் முரணாக எந்த வசனம் முன்வைக் கப்பட்டாலும் – அது ஒரு வசனமாயினும் –அவ்விடயத்தில் பொடுபோக்காக இருந்து விட முடியாது. இவ்விவகாரம் மூல வாக்கியத் திறனாய்வுடன் தொடர்பு பட்டதாகும். எனினும் கவலைக்குரிய வகையில் சில ஆய்வாளர்கள் இந்த வசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தஷாபுஹ் என்ற சொல்லின் கருத்தைத் தவறாக விளங்கி, அல் குர்ஆனில் குறிப்பிடப்பட்டுள்ள தஷாபுஹ் என்ற சொல்லானது கருத்துத் தெளிவற்ற தன்மை என்பதையே குறிக்கும் என்ற நிலைப்பாட்டுக்கு வந்துவிட்டனர். இந்தத் தவறான புரிதலின் விளைவுகளை அதிகமான பாரம்பரிய தப்ஸீர் கிரந்தங்களிலும், வரலாற்று நூல்களிலும், இட்டுக்கட்டப்பட்ட பல ஹதீஸ்களிலும் நிறையவே காண முடிகிறது. பல்வேறு இஸ்லாமியப் பனுவல்களில் கட்டுக்கதைகளும் இஸ்ராயீலிய் யாத்களும் முன்னைய வேதங்களின் திரிபுகளும் இணைவைப்பு சார்ந்த அம்சங்களும் புகும் வாயிலாகவும் இது அமைந்தது.

அத்தகைய இடைச் செருகல்களுக்கும் உட்புகுத்தல்களுக்கும் அடிப்படைக் காரணம் சில ஆய்வாளர்களின் புரிதலில் காணப்பட்ட குறைபாடும் இன்னும் சிலரின் உள் நோக்கங்களுமே என்பது தெளிவான விடயமாகும். இது காலம் பூராக உம்மத்தின் சிந்தனைக் கட்டமைப்பில் அழிவுதரும் பெரும் ஆபத்தை ஏற்படுத்தி விட்டிருந்தது. இன்றுவரை அதன் பாதிப்பிலிருந்து உம்மத்தால் மீண்டுவர முடியாதிருக்கின்றது. இஸ்ராயீலிய்ய மற்றும் வழிகெட்ட சிந்தனையால் பாதிக்கப்பட்ட மதம் சார்ந்த நூல் களின் பரவல் இதற்குத் தூபமிட்டது. அவற்றை அத்தகைய நூற்களிலிருந்தும் இஸ்லாமிய இலக்கியங்களிலிருந்தும் துடைத்தெறிவதற்காக இரவு பகலாக முயற்சிக் கின்ற ஆய்வாளர்கள் இன்னும் கவனமாகச் செயற்பட வேண்டியிருக்கிறது; நேரிய குர்ஆனியப் பார்வைப் பின்புலத்துடன் அறிவிப்பாளர் வரிசை மற்றும் வசன உள்ளடக் கங்களை விமர்சன ரீதியாக நோக்குகின்ற ஆய்வுகளை அதிகரிக்க வேண்டியிருக்கிறது. அப்போதுதான் தெளிவாகவும் மறைவாகவும் இருந்து கொண்டு நாசம் விளைவிக்கும் வழிகேடுகளிலிருந்து– குறிப்பாக– இஸ்ராயீலிய்யாத்திலிருந்து– முஸ்லிம்களின் சிந்தனையையும் அவர்களுக்கு மத்தியில் காணப்படும் படித்த வர்க்கத்தின் சிந்தனை யையும் காப்பாற்ற முடியும்.

அல்குர்ஆனில் இடம்பெற்றுள்ள முன்னைய சமூகங்கள், நபிமார்கள், தூதுகள், நிகழ்வுகள் என்பவை பற்றிய கதைகள், தகவல்கள் பற்றி முன்னைய சமூகங்களின் முதுசங்களிலிருந்தும் இலக்கியங்களிலிருந்தும் மேலதிக விளக்கங்கள் பெறப்பட வேண்டிய எந்தத் தேவையும் இல்லை. ஒரு முஸ்லிமைப் பொறுத்தவரை அல்குர் ஆனில் அவை பற்றிக் குறிப்பிடப்பட்ட அளவே போதுமானதாகும். அதற்கு மேலதிக மான விளக்கங்களை அல்லாஹ் மாத்திரமே அறிவான். அதனைத் தேடுவதும் அதற்கு முன்னைய சமூகங்களின் முதுசங்களிலிருந்தும் இலக்கியங்களிலிருந்தும் பெறப்பட்ட பொய்யான, திரிபுபடுத்தப்பட்ட தகவல்களைக் கொண்டு விளக்கமளிக்க முனைவதும் வழிகேட்டுக்கும் பிரச்சினைக்கும் பின்னடைவுக்குமே வழிவகுக்கும். ஒரு முஸ்லி முக்கு அதில் எந்தப் பிரயோசனமும் இருக்கப் போவதில்லை. அவ்வாறு பிரயோச னம் இருப்பதாயின் அல்குர்ஆன் அவற்றை விரிவாகக் குறிப்பிட்டிருக்கும். முன் னைய சமூகங்கள், நபிமார்கள், தூதுகள், நிகழ்வுகள் என்பவை பற்றிய கதைகள், தகவல்கள் என்பவற்றோடு தொடர்பான அல்குர்ஆனின் அணுகுமுறைக்கு மிகச் சரியான உதாரணமாக அஸ்ஹாபுல் கஹ்ஃப் பற்றிய விவரணத்தைக் குறிப்பிடலாம்.

*"அந்த (அஸ்ஹாபுல் கஹ்ஃப் என்னும்) குகையிலிருந்தோரும், சாஸனத்தை யுடையோரும் நம்முடைய ஆச்சரியமான அத்தாட்சிகளுள் உள்ளவர்கள் என எண்ணு கிறீரோ?" (18:09) என்றவாறு அது ஆரம்பிக்கிறது. "(அவர்கள்) மூன்று பேர்தாம்; அவர்களில் நான்காவது அவர்களுடைய நாய் " என்று (சிலர்) கூறுகின்றனர். '(இல்லை) அவர்கள் ஐந்து பேர்தாம்; அவர்களில் ஆறாவது அவர்களுடைய நாய் " என்று மறைவானதை ஊகம் செய்து (சிலர்) கூறுகிறார்கள். இன்னும் (சிலர்) 'ஏழுபேர்; அவர்களில் எட்டாவது அவர்களுடைய நாய்' என்று சொல்கிறார்கள். (நபியே!) 'அவர்களுடைய எண்ணிக்கையை என்னுடைய இறைவன்தான் நன்கறிவான். சிலரைத் தவிர, மற்றெவரும் அவர்களைப் பற்றி அறிய மாட்டார்கள்" என்று கூறு வீராக! ஆகவே, அவர்களைப் பற்றி வெளிப்படையான விஷயம் தவிர (வேறெதையும் பற்றி) நீர் தர்க்கம் செய்ய வேண்டாம். இன்னும், அவர்களைக் குறித்து இவர்களில் எவரிடமும் நீர் தீர்ப்புக் கேட்கவும் வேண்டாம்." (18:25)*

*"அவர்கள் தங்கள் குகையில் முன்னூறு வருடங்களுடன் மேலும் ஒன்பதை அதிக மாக்கி (முன்னூற்றி ஒன்பது வருடங்கள்) தங்கினார்கள்" (18:22)*

*'அவர்கள் (அதில்) தரித்திருந்த (காலத்)தை அல்லாஹ்வே நன்கறிந்தவன். வானங் களிலும் பூமியிலும் மறைவாய் இருப்பவை அவனுக்கே உரியனவாகும். அவற்றை அவனே நன்றாகப் பார்ப்பவன்; தெளிவாய் கேட்பவன். அவனையன்றி அவர்களுக்கு உதவி செய்வோர் எவருமில்லை. அவன் தன்னுடைய அதிகாரத்தில் வேறு எவரையும் கூட்டாக்கிக் கொள்வதுமில்லை என்று (நபியே!) நீர் கூறும்."(18:26)*

*"இன்னும் (நபியே!) உம்முடைய இறைவனின் வேதத்திலிருந்து உமக்கு வஹீ மூலம் அருளப்பட்டதை நீர் ஓதி வருவீராக! அவனுடைய வார்த்தைகளை மாற்றக் கூடியவர் எவருமில்லை. இன்னும், அவனையன்றி உமக்குப் புகலிடம் இல்லை".(18:27)*

*4 – நீதிபதி ஒருவரோ அல்லது குழுவோ சந்தர்ப்ப சூழ்நிலைகளைக் கருத்திற்கொண்டு தீர்ப்பு வழங்குகின்ற முறை. (மொ–ர்)*

*5 – ஆய்வு, உரையாடல் என்பதற்கும் கொச்சைப்படுத்துதல், ஏசுதல், நற்பெயருக்கு களங்கத்தை ஏற்படுத்துதல் என்பதற்கும் இடையிலான வித்தியாசம் புரியப்பட வேண் டியதாகும். முதலாவது விடயம் சிந்தனை, ஆதாரம் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டது; அது ஆய்வு மன்றங்களிலும் சிந்தனை வட்டங்களிலும் கலந்துரையாடப் படக் கூடியது. ஏசுதல், நற்பெயருக்கு களங்கத்தை ஏற்படுத்துதல், ஒருவரது மனைவி யை அல்லது தாயை சந்தி சிரிக்கச் செய்து மானபங்கப்படுத்தல், புனிதச் சின்னங்களை இழிவுபடுத்தல் என்பவற்றைப் பொறுத்தவரையில், குறிப்பாக இத்தகைய செயற் பாடுகளுக்காக பாடல், கவிதை, நாவல், கேலிச் சித்திரம், எழுத்து என்பவற்றைப் பயன்படுத்துகையில், பாதிக்கப்பட்டவரின் எதிர்வினை கோபம் நிறைந்ததாக இருக் கும்; குற்றவாளி தடுத்து நிறுத்தப்பட்டு தண்டிக்கப்படாமல் அவர் ஆறுதலடைய மாட்டார். அது நிகழாவிடில், பாதிக்கப்பட்டோருள் அனேகர் மனிதப் பலவீனங் களுக்கு உட்பட்டவர்கள் என்ற வகையில் சட்டத்தைக் கையில் எடுப்பதற்குத் துணிந்து விடுவர்; அதன் விளைவுகள் எவ்வாறிருந்த போதிலும் சரியே. எனவே, இவ்விடயம் சரிவரப் புரியப்பட்டு அதற்குரிய முன் நடவடிக்கைகள் மேற்கோள்ளப்பட வேண்டும். குறிப்பாக சமூகங்கள் புனிதமாகக் கருதுபவை தொடர்பாக கூடுதல் கரிசனை அவசியம்.*

6− வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில் இறக்கப்பட்ட அனைத்து மதங்கள் விடயத் திலும் இஸ்லாம் முன்வைக்கின்ற முக்கிய விமர்சனம் அவையனைத்தும் திரிபுக்குட் பட்டு விட்டன என்பதாகும். அவை இறங்கிய அதே அமைப்பில் அட்சரம் மாறாமல் இப்போதும் இருக்கின்றன என எவரும் உறுதியாகக் கூற முடியாது. மட்டுமன்றி, முந்திய ஒவ்வொரு வேதமும் குறிப்பிட்ட ஒவ்வொரு சமூகத்துக்குமெனத் தனியாக அருளப்பட்டவை. இந்த உண்மையை ஆய்வாளர்களும் உறுதிப்படுத்தியுள்ளனர். அதே நேரம் அல்லாஹ்வை மட்டும் வணங்க வேண்டும் என்ற நம்பிக்கையின் பாலும், இவ்வுலகில் பொருத்தமான நல்லமல்களைச் செய்ய வேண்டும் என்பதன் பாலுமே இஸ்லாம் அனைத்து மனிதர்களையும் நோக்கி அழைப்பு விடுக்கின்றது. *"நிச்சயமாக, எவர்கள் ஈமான் கொண்டு, ஸாலிஹான (நல்ல) அமல்கள் செய்கிறார் களோ, அவர்கள் தாம் படைப்புகளில் மிக மேலானவர்கள்".(98:07)*

*"என் இறைவன் ஹராம் எனத் தடுத்திருப்பவையெல்லாம், வெளிப்படையான அல்லது அந்தரங்கமான மானக்கேடான செயல்கள், பாவங்கள், நியாயமின்றி (ஒருவருக்கொருவர்) கொடுமை செய்தல், ஆதாரமில்லாமலிருக்கும் போதே நீங்கள் அல்லாஹ்வுக்கு இணை கற்பித்தல், நீங்கள் அறியாதவற்றை அல்லாஹ்வின் மீது (பொய்யாகக்) கூறுதல் (ஆகிய இவையே என்று நபியே!) நீர் கூறுவீராக."(7:33)*

*"(நபியே! அவர்களிடம்) 'வேதத்தையுடையோரே! நமக்கும் உங்களுக்குமிடையே (இசைவான) ஒரு பொது விஷயத்தின் பக்கம் வாருங்கள்: (அதாவது) நாம் அல்லாஹ்வைத் தவிர வேறெவரையும் வணங்க மாட்டோம்; அவனுக்கு எவரையும் இணைவைக்க மாட்டோம்; அல்லாஹ்வை விட்டு நம்மில் சிலர் சிலரைக் கடவுளர் களாக எடுத்துக் கொள்ள மாட்டோம்' எனக் கூறுவீராக!. (முஃமின்களே! இதன் பிற கும்) அவர்கள் புறக்கணித்து விட்டால்: 'நிச்சயமாக நாங்கள் முஸ்லிம்கள் என்பதற்கு நீங்கள் சாட்சியாக இருங்கள்!' என்று நீங்கள் கூறிவிடுங்கள்". (3:64)*

7 − இந்த இடத்தில் முக்கியமான சில விடயங்களைத் தொட்டுக் காட்டுவது பொருத்த மாக இருக்கும். இன்று பிள்ளை வளர்ப்பும் அவர்கள் மீதான பெற்றோரின் பொறுப் புணர்ச்சியும் வெகுவாக வீழ்ச்சியை நோக்கிச் சேன்று கொண்டிருக்கின்றன. பெற் றோர்கள் தமது பிள்ளைகளின் பயிற்றுவிப்பு விடயத்தில் குறைபாடு செய்து, தமது பௌதீக தேவைகளைச் சம்பாதிப்பதிலும் பின்னர் அதற்கேற்றாற்போல் தமது நுகர் வுக் கலாசாரத்தை அமைத்துக் கொள்வதிலும் மூழ்கிப் போய் விடுகின்றனர். அதே நேரம் குடும்பம், பெண், குடும்ப ஒழுக்கங்கள், தாய்மை போன்ற உம்மாவில் எஞ்சி யிருக்கின்ற பண்பாட்டுக் கோட்டைகள் மீதும் சமூகக் கட்டுக்கோப்பின் மீதும் மேற்கு கோரத் தாக்குதல் நடாத்திக் கொண்டிருக்கிறது. முன்னெப்போதும் இல்லாதளவு தலாக்கின் வீதாசாரமும் தலாக்குக்கான சந்தர்ப்பங்களும் இஸ்லாமிய சமூகங்களிலே பரவிப் போயிருக்கின்றன.

குடும்பம், பெற்றோர், முஸ்லிம் பெண் முதலியோர் தொடர்பாக இதற்கு மேலும் நாம் இங்கு பேச விரும்பவில்லை. வேறொரு நூலில் (அஸ்மத்−அல்−இராதா வ அல்விஜ்தான் அல் முஸ்லிம்) அது பற்றி அலசியுள்ளோம். குடும்பம், பெற்றோர் தொடர்பான தனியான நூலொன்றையும் (பெற்றார்−பிள்ளை உறவுகள்) வெளியிட வுள்ளோம். எனினும், குடும்பக் கட்டமைப்பின் சிதைவையும், தலாக்கின் விளைவுகள் பற்றிய −குறிப்பாக பெண்கள், பிள்ளைகள் விடயத்தில் அது ஏற்படுத்தும் தாக்கங்கள் பற்றிய− தூரப் பார்வையுமின்றி அதிகமான இளைஞர்கள் அவசரப்பட்டு தலாக்கில் வீழ்ந்து விடுவதையும் தடுக்கக்கூடிய ஷரீஆ ரீதியானதும் சட்ட ரீதியானதுமான நிலைப்பாடொன்றுக்கான தேவையை உணர்த்த இங்கு நாம் விரும்புகிறோம்.

திருமணப் பதிவாளர்களுக்கு முன்னால் மாத்திரமே தலாக் நிகழ வேண்டும்; அவருக்கு முன்னால் அது அத்தாட்சிப்படுத்தப்பட்டு, தலாக் நிகழ்ந்தமை தொடர்பாக மனை விக்கோ அல்லது அவளது பொறுப்பாளருக்கோ அறியத்தரப்பட வேண்டும் என்ற விடயத்தை அமுல் படுத்துவது தொடர்பாக ஷரீஆ சபைகள் ஆராய வேண்டும்.

இந்நடவடிக்கையானது தலாக் விடயத்தில் சற்று சிந்தித்துச் செயற்படுவதற்கான அவகாசத்தை வழங்குவதோடு, இது விடயத்தில் கலந்தாலோசிப்பதற்கும், இரு தரப்பைச் சார்ந்தோரும் தலையிட்டு பிரச்சினைகளை சுமுகமாக முடித்து வைப்ப தற்கும் அவகாசத்தை வழங்குகிறது. அவ்வாறே விவாகப் பதிவாளர் தரப்பிலிருந்து ஆலோசனை வழங்குவதற்கும், இரு தரப்பாருக்கும் மத்தியில் உறவை மீளமைக்கின்ற பணியைச் செய்வதற்கும் சந்தர்ப்பம் கிடைக்கிறது.

இந்நடவடிக்கை கூட பெண்ணினதும் அவளது பிள்ளையினதும் உரிமையைப் பாது காக்கக் கூடியதாகும். அவ்வாறே கணவன் அவளுக்கு முன்னால் தலாக்குடைய வார்த் தையை மொழிந்து விட்டு பின்னர் அதனை மறுக்கின்ற போது ஏற்படுகின்ற சங்கட நிலையிலிருந்தும் மனக்கஷ்டத்திலிருந்தும் இது அவளைக் காக்கின்றது. உண்மையில் இவ்விடயம் குறித்து சில ஆண்கள் அலட்டிக் கொள்வதேயில்லை.

நாம் முன்வைத்த இந்த விடயம் ஒன்றும் புதிய விடயமல்ல. தலாக்கை வெளிப்படுத் தும் வார்த்தைக்கென்று தனியான புனிதத்தன்மை ஒன்றும் கிடையாது. இங்கு தலாக் கை நடைமுறைப்படுத்தும் விடயத்தில் சொல்லப்பட்ட வரையறைகள் தலாக் நிகழ் வதை நெறிப்படுத்துவதற்கானவை மாத்திரமே. இஸ்லாம் குடும்பக் கட்டமைப்பின் விடயத்தில் கூடுதலான கரிசனை செலுத்தும் மார்க்கமாகும். அத்தோடு, தலாக்குடைய வார்த்தையை வெறுமனே மொழிவதால் மாத்திரம் தலாக் நிகழ்ந்து விடாது. ஒருவர் தனது அந்தஸ்தைக் குறைக்கக் கூடிய கோப நிலையில் இருக்கின்ற போது தலாக்கை வெளிப்படுத்தக் கூடிய வார்த்தையை மொழிந்தால் அச்சந்தர்ப்பத்தில் தலாக் இடம் பெறாது. அவ்வாறே அவர் சம்பந்தமில்லாத வேறு ஏதாவதொரு விடயத்துடன் தொடர்பு படுத்தி தலாக் சொன்னால் அந்த சந்தர்ப்பத்திலும் தலாக் இடம் பெறாது. தலாக் என்பது ஒரு தடவையில் ஒரு முறையே இடம்பெற முடியும். முதலாம் முறை தலாக் சொன்ன ஒருவர் மூன்று மாத காலத்துள் தனது மனைவியின் விருப்பத்தைக் கேட்காமலேயே அவளை மீட்டெடுத்துக் கொள்ள முடியும். இரண்டாம் முறை தெளி வான சிந்தனையுடன் தலாக்கை மொழிகின்ற போது இரண்டாம் தலாக் நிறைவேறும்; அவ்வாறு இடம்பெற்றால் மீண்டுமொரு முறை புதிதாக மஹர் வழங்கப்பட்டு திருமண உடன்படிக்கையும் இடம்பெற்ற பின்னரே ஒருவர் தனது மனைவியுடன் சேர முடியும்.

ஒருவர் மூன்றாம் முறையும் தலாக் சொல்லி விட்டால் அது 'தலாக் பாயின்' ஆக (திரும்பச் சேர முடியாத தலாக்காக) கருதப்படும். அத்துடன் அவருக்கும் அவரது மனைவிக் குமான தொடர்புகள் முற்றுப் பெற்று விடும்.


உமர் (ரழி) அவர்களது காலத்தில் சிலர் தலாக்குடைய மூன்று வார்த்தைகளையும் ஒரே தடவையில் சொல்லி முடிக்கத் துணிந்தனர். உண்மையில் மூன்று தலாக்கையும் ஒரே தடவையில் சொன்னாலும் அது ஒரு தலாக்காகவே கருதப்படும். எனவே உமர் (ரழி) அவர்கள் கோபப்பட்டு அவர்களை எச்சரிக்கும் வகையிலும் அவர்களுக்குத் தண்டனையாக அமையும் வகையிலும், "நீங்கள் ஒரு விடயத்தில் (தலாக்கில்)

அவசரப்படுகிறீர்கள். நானோ அதனை அமுல்படுத்தியே தீருவேன்" எனக் கூறினார்கள். பின்விளைவுகளைப் பற்றிச் சிந்திக்காத சமூகத்துக்கான பயிற்றுவிப்பாக இது இருக்கின்றது. இதனால்தான் குடும்பக் கட்டமைப்பைப் பாதுகாக்கும் வகையில் இஸ்லாமிய அறிஞர்கள் ஒரு பத்வாவை வெளியிட்டிருக்கிறார்கள்: ஒரு மனிதன் தலாக்கின் வார்த்தையை எத்தனை தடவைகள் மொழிந்த போதிலும் அது ஒரு தலாக்காகவே கருதப்படும்; அவ்வாறே மனைவி மாதாந்த ருதுவிலிருந்து சுத்தமடைந்த பின்னரே இரண்டாம், மூன்றாம் தலாக்குகள் இடம்பெறும் என்பதே அந்த பத்வாவாகும். *"(இத்தகைய) தலாக் இரண்டு முறைகள்தாம் கூறலாம் - பின் (குறித்த தவணைக்குள் முறைப்படி அவர்கள் கணவன், மனைவியாகச் சேர்ந்து வாழலாம்; அல்லது நேர்மையான முறையில் பிரிந்து போக விட்டு விடலாம்".* **(2:229)**



கெய்ரோவின் அல் அஸ்ஹர் பல்கலைக்கழகத்தின் கலாநிதிப் பட்டம் ஈட்டிக் கொண்ட தாஹா ஜாபிர் அல் - அல்வானி, ஐக்கிய அமெரிக்காவின் Graduate School of Islamic and Social Sciences (GSISS), Fiqh Council of North America ஆகியவற்றின் தலைவர். The International Institute of Islamic Thought இன் ஸ்தாபக உறுப்பினர், முன்னாள் தலைவர். OIC Islamic Fiqh Academy உறுப்பினர். அறபு மொழியில் வெளிவந்துள்ள அன்னாரின் ஆய்வுக் கட்டுரைகளும் நூல்களும் ஏராளம். ஆங்கிலத்தில் வெளியாகியுள்ள ஆக்கங்களில் குறிப்பிடத்தக்கன:

Source Methodology of Islamic Jurisprudence; Towards a Fiqh for Minorities; The Ethics of Disagreement in Islam; Ijtihad; The Quran and the Sunnah: Time – Space Factor; Issues in Contemporary Islamic Thought; Islamic Thought: An Approach to Reform.



சவூதி அறேபிய திட்டமிடல் அமைச்சின் செயலாளராகவும் மன்னர் ஸவூத் பல்கலைக்கழக அரசறிவியல் துறைத் தலைவராகவும், மலேஷியாவின் சர்வதேச இஸ்லாமியப் பல்கலைக்கழக வேந்தராகவும் அருஞ் சேவையாற்றியுள்ள பேராசிரியர் அபூ ஸுலைமான் அமெரிக்காவிலும் கனடாவிலும் இயங்கி வரும் Muslim Students Association (MSA), World Assembly of Muslim Youth (WAMY), Association of Muslim Social Scientists (AMSS), International Institute of Islamic Thought (IIIT), Child Development Foundation (CDF) ஆகியனவற்றை நிறுவுவதிலும் செவ்வனே இயங்கச் செய்வதிலும் ஆற்றி யுள்ள பணிகள் அளப்பரியன. முஸ்லிம் விவகாரங்கள் குறித்து பேராசிரியர் கொண்டுள்ள ஆழ்ந்த கரிசனை, சர்வதேச உறவுகள் குறித்து அன்னார் கொண்டுள்ள அறிவின் விசாலம் என்பன அவரது ஆக்கங்களில் துலக்கம் பெற்று விளங்குகின்றன.




Published by
**Fuzin Texts**
23/3 Market Road,
Dharga Town 12090
Sri-Lanka.

ISBN 978-955-8398-45-6
9 789558 398456